811
1.62

தமிழ்

தவத்திரு அடிகளார்

கா. அப்பாத்துரையார் கண்ணதாசன்

வலம்புரி அண்ணாமலை பிலோ இருதயநாத்

தமிழண்ணல் எழுதும் தொடர்கதை

வெண்பாப் போட்டி

சிறப்பாசிரியர்:
தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

மார்ச்-'62
விலை 50

RAJA BARLEY BISCUIT COMPANY

Established
1926

Name and Design :
Registered No. *143106*

Raja

BARLEY BISCUITS

Are Brittly Every Bite and vital for the Baby

செந்தமிழ் நாட்டுச் செல்வச் சிறுவர்களுக்குத்
திடகாத்திரம் அளிக்கும் சிறந்த உணவு
எங்கள்

ஸ்தாபிதம்: 1926

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்

நேம் & டிசைன்

போன் நெ. 334

ரிஜிஸ்டர்டு
நெ. 143 106

குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரம்.

புரோப்: ஏ. சங்கு பிள்ளை, 115, திண்டுக்கல் ரோடு,
மதுரை.

கிளை; மெயின்ரோடு, திண்டுக்கல்

ஒவ்வொரு நாளும் அமோகமான ஆர்டர்கள் குவிகின்றன!
நீங்களும் எழுதுங்கள்

துப்பறியும் கதைகளுக்குச்
சிறந்த வெளியீட்டு நிலையம்

வஸந்த நிலையம்

மர்மத்திலும் மர்மம் நிறைந்த எழுத்தோவியங்கள்! எடுத்துப் பிரித்துவிட்டால் படித்து முடிக்கும்வரை பரபரப்பூட்டும் நாவல்கள் வரிசையாக வெளி வருகின்றன.

நல்ல துப்பறியும் நாவல்கள் தேவையா? எங்களுக்கு எழுதுங்கள்.

விவரங்களுக்கு :

வஸந்த நிலையம் : சென்னை-17.

அறிவிப்பு

'தமிழ்' இதழின் உரிமையும் மற்ற விவரங்களும்

1. வெளியிடும் இடம் : 14. உஸ்மான் ரோடு, சென்னை-17.

2. வெளியீட்டின் காலம் : திங்களிதழ்

3. அச்சிடுபவரின் பெயர் : ச. சொக்கலிங்கம்
   இனம் : இந்தியர்
   முகவரி : 14. உஸ்மான் ரோடு, சென்னை-17.

4. வெளியிடுபவர் பெயர் : ச. சொக்கலிங்கம்
   இனம் : இந்தியர்
   முகவரி : 14. உஸ்மான் ரோடு, சென்னை-17.

5. ஆசிரியர் பெயர் : ச. சொக்கலிங்கம்
   இனம் : இந்தியர்
   முகவரி : 14. உஸ்மான் ரோடு, சென்னை-17.

6. இதழின் உரிமையாளர் : ச. சொக்கலிங்கம்
   இனம் : இந்தியர்
   முகவரி : 14. உஸ்மான் ரோடு, சென்னை-17.

ச. சொக்கலிங்கமாகிய நான்
மேற்கண்ட விவரங்கள் சரியானவை
என்று உறுதியளிக்கிறேன்.

(ஒப்பம்) ச. சொக்கலிங்கம்.

தமிழ்

மலர் 1 இதழ் 9 மார்ச் 1962

பொருளடக்கம்

கட்டுரைகள்

மொழிவழி நாகரிகம்
இளங்கோவின் மறதி மறதியே
ஏழைக் காரிகையின் கற்சிலை
மண் குடிசை
எதுசரி — எதுபிழை?
மா கவிஞன் புஷ்கின்
தமிழும் தேவ நாகரியும்
கல்வியும் புகழும்
கொலை செய்தவர் யார்?
வளரும் விஞ்ஞானம்

கதைகள்

இருதலைப் பறவை (தொடர் கதை)
கோணல்
காதலெனும் கோயில்

கவிதைகள்

களியாடுகிறாள்
யார் பிச்சைக்காரன்?
தனிவீட்டில்
கவிதைக் கொத்து

தமிழில் வரும் கதைகள் கவிதைகள் யாவும் கற்பனையே.

அன்பர்கள் அஞ்சல்

பிப்ரவரி இதழ் கண்டேன். மகிழ்ந்தேன். கவிதைகளுக்கு இந்த இதழில் அதிக இடம் தந்திருப்பது கண்டு பெரிதும் மகிழ்ந்தேன். அட்டைப் படம் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. பெரிய அளவில் 'தமிழ்' புதுப் பகுதியுடன் வெளிவந்திருப்பது பெரிதும் வரவேற்று மகிழ்வதற்குரிய செய்தி.

— இந்திரா
தஞ்சை

* * *

பிப்ரவரி 'தமிழ்' கருவூலமாக காட்சியளிக்கிறது. தங்களது தலையங்கம் தேனிலும் சுவையாக இனிக்கின்றது.

— பூங்குன்றன்
வரதராஜபுரம்

* * *

முகப்பில் பெண்களின் படம் இல்லாமல் 'தமிழ்' வெளிவரட்டும். திரைப்படச் செய்தி வேண்டாம்.

— சா. பன்னீர்செல்வம்
திருவையாறு

* * *

"ஓடி வந்தாள் அங்கு தெய்வமில்லை" ஒப்பற்ற— சிறப்பான குறுநாவல். மனிதன் பிறக்கும் போதே அறிவும், ஆசையும் பிறப்பதில்லை. காதலித்து மணம் செய்துகொண்ட பின் அகங்காரத்தால் கணவனை விட்டுப்பிரிந்து போகும் காரிகைகளுக்கு இந்தக் குறுநாவல் நல்வழி காட்டி.

— இரா. இளமாறன்
நாச்சியார் கோயில்

'தமிழ்' புதிய அமைப்பு நன்றாக — கவர்ச்சி மிகுந்ததாக இருக்கிறது.

— ரா. பொன்ராசன்
குன்றக்குடி

* * *

'மெல்லத் தமிழினிச் சாகும்' கட்டுரையும்—கவிஞர் கண்ணதாசனின் கவிதையும் அடிக்கரும்பின் சுவை போல்இனித்தது.

—இராமன்
திருச்சிராப்பள்ளி

* * *

முத்தாய்க் கதைகள்! முதன்மையாய்க் கட்டுரைகள்! மொத்தம் பதினைன்றாய் முகிழ்ந்து நிற்கும்கவிதைகள். எத்தனை இனிப்பு—எல்லாம் பெருஞ் சொத்து. அத்தனையும் பெருஞ் சிறப்பு! அரிய 'தமிழ்' சிறப்பு.

—அம்மையப்பன்

"காதலெனும் பொய் விளையாட்டு" "சூதாடி" "கற்கும் பாடம் பலவுண்டு" "விளம்பரமல்ல விபரீதம்" ஆகிய கட்டுரை, கதை, கவிதைகள் சிறப்பாக அமைந்திருந்தன. எந்தக் கட்சிக் கொள்கைக்கும் தமிழில் இடம் தராதீர்கள்.

— ஜி. ஆர். கிருஷ்ணன்
திருநெல்வேலி—1

பிப்ரவரி 'தமிழ்' அமைப்பு கவர்ச்சியாக உள்ளது. கவிதைகளுக்கு அதிக இடந்தந்து இளங்கவிஞர்களை உற்சாகப்படுத்தும் பத்திரிகை 'தமிழ்' ஒன்றுதான். தவத்திரு அடிகளார் அவர்களின் கட்டுரை தொடர்ந்து இடம் பெறச் செய்யுங்கள்.

— சரசுவதி
பொள்ளாச்சி

தமிழ்

எண்ணிற் சிறந்தது; எழுத்திற் சிறந்தது;
பண்ணிற் சிறந்தது; பண்பிற் சிறந்தது;

தமிழ்! தமிழ்! தமிழ்!

வாக்குச் சீட்டு வலிமையானது!

உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த—
ஊரைக் கலக்கிக் கொண்டிருந்த—
மக்களைக் குழப்பிக் கொண்டிருந்த—
தேர்தல் நடைபெற்று முடிந்து விட்டது.

போட்டியிட்ட கட்சிகளில் ஆளும்கட்சியாவதற்குரிய பெரும்பான்மை இடத்தைப் பெற்ற கட்சி எது? எதிர்க்கட்சியாவதற்குரிய கணிசமான இடங்கள் பெற்ற கட்சி எது? ஒன்றிரண்டு இடங்களோடு நின்றுவிட்ட கட்சி எது?

இந்த முடிவுகளும் தெரிந்துவிட்டன!

1967-வரை இந்தியாவிலுள்ள எந்த மாநிலத்திலும் (கேரளத்தைத் தவிர) ஜனநாயக முறைப்படி மாற்றியமைக்க முடியாத ஓர் அரசியல் அமைப்பை மக்கள் மன்றம் தேர்ந்தெடுத்துள்ளது.

இந்தியாவில், மத்தியப்பிரதேஷ்—ராஜஸ்தான் ஆகிய இரண்டு மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியே பலம் பெற்று ஆளும் கட்சியாவதற்குரிய தகுதியில் நிற்கிறது.

இது மகிழ்ச்சிக்குரிய செய்தி—

நம் தமிழ் மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சிதான் பெருவாரியான இடங்களைப் பெற்றிருக்கிறது. தமிழ் மாநில சட்டசபைக்குரிய ஸ்தானங்கள் 206.

இதில்,

காங்கிரஸ்	139	இடங்கள்:
தி. மு. கழகம்	50	,,
கம்யூனிஸ்ட்	2	,,
சுதந்திரா	6	,,
பார்வார்டுபிளாக்	3	,,
சோஷலிஸ்ட்	1	,,
சுயேச்சை	5	,,

ஆளும் கட்சியாக காங்கிரசும்—பிரதான எதிர்க்கட்சியாக தி. மு. கழகமும் இடம் பெறும்.

நடந்து முடிந்த இந்தத் தேர்தலில் குறிப்பறிந்து சொல்லும் அரசியல் மேதைகளின் ஆருடம் பிழைபட்டிருக்கிறது. போட்ட கணக்குகள் பொய்த்துவிட்டன.

எதிர்பாராத வெற்றிகள்! எதிர்பாராத தோல்விகள்! அதிர்ச்சி தரத்தக்க முடிவுகள். குறிப்பாக எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் 'சகட்டுமேனி'க்குத் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். இது அதிர்ச்சி தரத்தக்க செய்தி மட்டுமல்ல. அனுதாபப்படக்கூடிய செய்தியு மாகும். ஆனால், ஏன் தோற்கடிக்கப் பட்டார்கள் என்பதற்கான காரண காரியங்களைவைத்து விவாதித்துக் கொண்டிருப்பதைவிட, தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளவர்கள், எந்தெந்த வகையில் செயல்பட வேண்டும்; எப்படிப் பணியாற்ற வேண்டும் என்பதை விளக்கிச் சொல்வதே மெத்தச் சரியான வேலையாகும்.

தமிழ் மாநிலத்தில் 138 இடங்களில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது என்று எண்ணிப் பெருமைகொள்ளும் முன்னர்—முன்பிருந்த எண்ணிக்கையில் பதின்மூன்று தொகுதிகளைக் காங்கிரஸ் கட்சி இழந்திருக்கிறது என்பதை, அவர்கள் கவலையோடு கவனிக்க வேண்டும். இதைப்போலவே மற்ற மாநிலங்களிலும் பெருவாரியான இடங்களைப் பெற்றிருக்கிற காங்கிரஸ் கட்சி, பெருவாரியான இடங்களையும்இழந்திருக்கிறது. குறிப்பாக-மத்தியப்பிரதேஷ், ராஜஸ்தான், பீகார், கூர்ஜரம், உத்தரப் பிரதேஷ், ஆந்திரா, ஆகிய இடங்களில் இருந்ததை இழந்திருக்கிறார்கள். இந்த நிலை ஏற்பட்டது ஏன்? என்பதை பொறுப்புள்ள காங்கிரஸ்காரர்கள் அவசரப்படாமல் ஆராய்ந்து பார்க்கவேண்டும். கோபப்படாமல் குற்றங்களை ஒப்புக்கொள்ள வேண்டும். நிதானமிழக்காமல் செயலில் ஈடுபடவேண்டும்.

கல்வி வளர்ச்சியும், நல்ல சில திட்டங்களும், சோஷலிசத்தின் முழுவடிவப் பிரச்சாரமும் எப்படி காங்கிரஸ் கட்சி வெற்றி பெறுவதற்குச் சாதகமாக அமைந்திருந்ததோ—அதைப் போலவே அவர்களின் விரும்பத்தகாத திட்டங்கள்—செயல்கள்—நடவடிக்கைகள் ஆகியவை சில இடங்களில் காங்கிரஸ் கட்சியின் தோல்விக்குத் துணை போயின.

மொழி ஆதிக்கம், விலைவாசி உயர்வு, பொருளாதார மந்தம், ஏழைமை, வறுமை, இல்லாமை இவைகள்தான் பெரும்பாலும் எதிர்க்கட்சிகளின் வெற்றிக்குப் பெரிதும் பயன்பட்டன. "காங்கிரஸ்காரர்கள் செய்யத் தவறியதை நாங்கள் செய்கிறோம்; மொழிக்குப் பாதுகாவலராய் அமைவோம்; ஆதிக்க மனப்பான்மையை வேரோடு கெல்லி எறிவோம்"—என்று நாள்தோறும் நடுநிசிவரை நாட்டு மக்களிடம் எதிர்க்கட்சிகள் செய்த பிரச்சாரம்தான் அவர்கள் வெற்றிக்கு விதையாக அமைந்தது.

இந்தக் குறையை ஐந்து ஆண்டுகளாக வளர்த்து வைத்திருந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள். அதன் பலன் இன்று எதிர்பாராத அளவு எதிர்க் கட்சிகள் பிரவேசம்.

பல இடங்களில் காங்கிரஸ் கட்சியின் சரிவுக்கு முக்கிய காரணம் அவர்களுக்குள்ளேயே ஏற்பட்ட உட்குழப்பம்—பதவிச் சண்டை—பணப்பித்து ஆகியவைகளாகும். வளர்ந்து வரும் இப்பெரும்

நோயை தேர்தலில் ஏற்பட்டுவிட்ட நட்டத்தைக் கணக்கிட்டாவது உடனடியாகக் கட்டுப்படுத்த முயலவேண்டும்.

சேவை மனப்பான்மை என்பது தாய்ப்பாலைப் போன்றதாகும்- அதைத் தலைவர்கள் ஊட்ட மறந்தால்—தாமதித்தால் கட்சியின் வளர்ச்சி குன்றிவிடும்! வாகை குறைந்துவிடும்.

எதிர்க்கட்சி வரிசையில் கணிசமான அளவு இடம் பெறுவோர் ஏராளமான வாக்குறுதிகளையும், பெருவாரியான திட்டங்களையும் கவர்ச்சிகரமாக மக்கள்முன் வைத்து, வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதிகளுக்கு உயிர்தரும் வகையில் அவர்கள் சட்டசபையில் பணியாற்ற வேண்டும். எதிர்க்கட்சிகள்—எதிரிக் கட்சிகள் என்ற நிலைமையில் இல்லாமலும்—அப்படி ஆளுங் கட்சியினரால் அவர்கள் மதிக்கப்படாமலும்—ஆளும் கட்சிக்கு நல்ல பல யோசனைகள் கூறியும்- திட்டங்கள் தந்தும், குறைகளைச் சுட்டிக் காட்டியும் வீட்டுக்குக் கதவைப்போல, மாட்டுக்கு மூக்கணாங் கயிற்றைப்போல, ஆற்றுக்குக் கரையைப்போல எதிர்க் கட்சிகள் பணியாற்ற வேண்டும். ஆளும் கட்சியானாலும் சரி, எதிர்க் கட்சிகள் ஆயினும் சரி, அவரவர்கள் சொல்லும் கொள்கைகளுக்கு செவிமடுத்து தங்களின் மேலான வாக்குகளை உங்களுக்குத் தந்து - நீங்கள் நிச்சயம் அவர்களுக்குநன்மை செய்வீர்கள் என்ற நம்பிகையில் உங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ளார்கள் வாக்காளர் பெருமக்கள்.

அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் ஆளும் கட்சியினரும், எதிர்க் கட்சியினரும் போட்டி போட்டுக்கொண்டு செயல்பட வேண்டும்.

மறந்தால்......

மக்கள் தரும் தண்டனையை நீங்கள் அனுபவிக்கத்தான் வேண்டும். இன்னும் ஐந்து ஆண்டுகளில்!

ஆமாம்—

வாக்குச் சீட்டு மிக வலிமையானது!



சுற்றுப்பயணம்

நமது ''தமிழ்'' இதழின் ஆசிரியர் ச. சொக்கலிங்கம் அவர்கள் மலாயா சுற்றுப் பயணத்திற்காக 23. 2. 62 அன்று சென்னையிலிருந்து புறப்பட்ட 'ரஜுலா' கப்பலில் பயணமாகிச் சென்றுள்ளார்கள்.

மலாயா சுற்றுப் பயணத்தை இனிது முடித்துக் கொண்டு இரண்டு திங்களில் தாயகம் திரும்புவார்கள்.

இன்னும் அவனை மறக்கவில்லை

அண்ணன் காட்டிய வழியம்மா—இது
அன்பால் விளைந்த பழியம்மா
கண்ணை இமையே கெடுத்ததம்மா—என்
கையே என்னை அடித்ததம்மா

தொட்டால் சுடுவது நெருப்பாகும்
தொடாமல் சுடுவது சிரிப்பாகும்
தெரிந்தே கெடுப்பது பகையாகும்
தெரியாமல் கெடுப்பது உறவாகும்

அடைக்கல மென்றே நினைத்திருந்தேன்
அணைத்தவனே கையைக் கடித்து விட்டான்
கொடுத்தருள்வாய் என்று வேண்டி நின்றேன்
கும்பிட்ட கைகளை முறித்து விட்டான்

அவனை நினைத்தே நானிருந்தேன்—அவன்
தன்னை நினைத்தே வாழ்ந்திருந்தான்
இன்னும் அவனை மறக்கவில்லை—அவன்
இத்தனை செய்தும் வெறுக்கவில்லை

கவிஞர் கண்ணதாசன்

களியாடுகிறாள்

மோகன சுந்தர லாகிரி யோடொரு பெண்ணவளே
வேகந டம்பயின் றாடுகி றாளடர் சோலையிலே;

நோகநடை, யுடல் சோர, முகம்மிக வாடியவள்
சோகமு டன், ஜதி தாளங் கெடத்தடு மாறுகிறாள்!

காணத் தகும்ஒளி பேணி வளர்த்திடுங் கண்ணிணையும்
கோணிக் கலுழ்ந்துக, மாறிப் பிறழ்ந்திட வேகுகிறாள்;

மாணப் பெரும்எழில் மேனிவெளுத்திட, மேகலையும்
நாணிச் சரிந்தவள் நாணம் குலைத்திட நாடிடுதே!

'என்ன பெருந்துயர் உற்றன ளோஇந்த நேரிழையாள்?'
என்ன நினைந்தொரு வன்ன மயில்மிகச் சோர்ந்திடவும்,

கொன்னை மலர்சொரி கந்தத் துகள்அந்தப் பொன்னனையாள்
தன்னை வனைந்துடல் எங்கும் புணர்ந்து மணந்ததுவாம்!

கோட்டுக் கிளையொரு மேட்டுமு கட்டினில் மேவிடுமோர்
பாட்டுக் குயில்மிக நீட்டிமு ழக்கியே கூவிடவும்,

கேட்டுக் கிளர்ந்தவள் ஆட்டம்நி றுத்தியே ஆவலுடன்,
வாட்டத் துடன், நிறை யேக்கத் துடன்கிளை நோக்கிநின்றாள்.

கூவி யுளம். களி மேவி யுடல், விளை காமமவள்
ஆவி யுளும்புகுந் தேகி மகிழ்மிக வாகியதே;

ஓவி யமோவென ஓங்கு கிளையினி லாங்கவளைத்
தாவி யணைத்தவன் மேவி யிருந்து நகைத்தனனே!

மோகன சுந்தர லாகிரி யோடொரு பெண்ணவளே
வேகந டம்பயின் றாடுகிறாளடர் சோலையிலே;
நோகந டை, யுடல் சோர, முகம்மிகு சோதியுடன்
மோக மெழச்சுதி தாள முடன்களி யாடுகிறாள்!

× அசுவத்தாமா ×

முதற்பாகம்: அரும்பு

முன்னுரை :

ஒன்றையின்றி ஒன்று உறங்காதது; ஒன்றை இழந்தால் ஒன்று உயிர் வாழாதது அன்றில் பறவை. அதுதான் இருதலைப் பறவை எனப்படுவது. காதலும் இத்தகையதே என்பதுதான், சங்க இலக்கியக் காட்சி!

சங்க இலக்கியப் பின்னணி கொண்ட வாழ்வோவியம்; சங்க காலச் சமுதாயப் படப்பிடிப்பு இது.

சங்க இலக்கியத்தைப் படிக்குந்தோறும் அக்கால இயற்கைச் சூழ்நிலைகள், மனித வாழ்வு நிலைகள், அவர்களின் அகவுணர்ச்சிச் சூழ்நிலைகள் அனைத்தும் நம் கண் முன்னர்த் தோன்றுகின்றன. உண்மையை உயிராகக் கொண்ட இக் கற்பனைகளிலிருந்து, சங்க கால வாழ்வியல் வரலாற்றை எழுத இதில் முயன்றுள்ளேன்.

இந் நெடுங்கதையைத் தொடர்ந்து படிப்பவர்கள் ஒரு முறை சங்க காலத்தே தாமும் வாழ்ந்ததாக—அனுபவ உணர்வுச் சூழ்நிலையை அடையப் பெறுதல் வேண்டும் என்பது என் அவா.

சங்க இலக்கிய நுகர்ச்சியை—நுகர்ச்சிப் பயனைக் கட்டுரை மூலமாக மட்டுமின்றிக் கதை மூலமும் பரப்புதல் கூடும்—பரப்புதல் வேண்டும் என்பது என் குறிக்கோள்.

என் அவா, முயற்சி இரண்டும் குறிக்கோளை அடைகின்றனவா என்பது 'தமிழின்' அன்பர்களாகிய நீங்கள் இதனைப் படித்துப் பெறும் பயனில் புலப்பட இருக்கிறது.

கதை பற்றிய கருத்துக்களையும், இதில் நான் எடுத்துக் கோத்துள்ள இலக்கியப் பகுதிகளையும் எங்கெங்கிருந்து எடுத்துள்ளேன் என்று தங்களால் அறிய இயன்றால் அவை பற்றியும் எனக்குத் 'தமிழ்' மூலம் எழுதுங்கள்.

தமிழண்ணல்



1. எண்ணத்தைப் பறிகொடுத்த எழில்வண்ணன்

பெயருக் கேற்ற அழகுடையவன், எழில் வண்ணன். மயிர்ச் சந்தனம் பூசி, அகிற்புகை ஊட்டப்பட்ட தலைமயிர் 'கருகரு' வென வளர்ந்து, நெளி நெளியாய்க் காட்சி தந்தது. வண்ண வண்ண மலர்களைக் கோத்த கண்ணியைத் தலையில் சூடிய அக் கட்டழகனின் தோற்றம். கண்ணுக்கினியதாக காட்சியளித்தது. வெண்தாழை மடலாலே ஆன கண்ணியையும் அவன் தலையிலே அணிந்திருந்தமை, தனிஅழகு தந்தது. பச்சைக் காம்பினையுடைய பிச்சிப்பூவால் சூடப்பட்ட ஒரு வட்டத்தையும் கூடஅவன் தலையிலே சூடியிருந்தான்.

சிவந்த நெருப்பைப் போன்ற ஒளி பொருந்திய பூக்களையுடைய அசோகந்

தளிரை, ஒரு காதிலே செருகிக் கொண்டிருந்தான். அவன் அசையும் போதெல்லாம் அத்தளிர் வலிமை பொருந்திய அவனது தோளிலேபட்டு அசைந்தது. மார்பு நிறையச் சந்தனம் பூசப் பெற்றிருந்தது. ஆற்றல் தங்கிக் கிடக்கும் அந்த அகன்ற மார்பிடத்தே, பொன் அணிகளுடன், தொன்று தொட்டு அணியும் தன் குடிக்குரிய மாலைகளையும் அவன் அணிந்திருந்தான்.

அரையில் கட்டி, ஓரக்கோடு ஒழுங்காக விளங்கும் வண்ணம் முழந்தாள் மறைய உடுத்தியிருந்தான். அந்த ஆடை பின்னிழுத்துச் செருகப்பட்டிருந்தது. அதன் மேலே, அழகியபட்டினுல் நெய்த, செந்நிற வண்ண அரைக்கச்சை இழுத்துக் கட்டியிருந்தான். மெய்ப்பையும் இது போலவே வண்ண நூல்களின் பின்னல் வேலைப் பாட்டுடன், துளக்கமின்றி உடலுடன் ஒட்டித் திகழுமாறு அணியப்பெற்றிருந்தது.

எழில் வண்ணன் தனதுசிவந்த கோடுகள் பொருந்திய அகன்ற முன் கையில், கட்டமைந்த வில்லை ஏந்திக் கொண்டு, அம்புகளை ஆராய்ந்தபடி வந்துகொண்டிருந்தான். அவன் நடந்தபோது, அவன் காலிலே கிடந்து புரண்ட பொற்கழல்கள் உயர்ந்தும் தாழ்ந்தும் ஒலித்த வண்ணமிருந்தன.

அவன் ஏதோ சிந்தனையில் மூழ்கியவனுகக் காணப்பட்டான். அவனுக்குச்சற்றுத் தூரத்தே அவனுடைய குதிரை, அசைவற்று நின்றமை இச்சிந்தனை அதனையும் தொத்திக் கொண்டது போலத் தோன்றியது.

தன் கை விரல் நக நுனியிலே, ஓர் அம்பின் கூர்மையை அதிகப்படுத்த, மாறி மாறி இரட்டித்து அவன் தீட்டத் தொடங்கிய காட்சி, ஏதோ ஓர் இடையூற்றையோ அல்லதுஇன்பத்தையோ அவன் எதிர் நோக்கியிருப்பதாக உணர்த்தியது. இதனுல் அவன் தன்எதிரே வந்தநண்பனைக் கூடக் கவனிக்கவில்லை.

''ஏடா, எழில் வண்ணு!''— நண்பன் நன்னுகன் முகத்திலே, புன்னகை மட்டுமன்று, அதிலே கேலிக் குறிப்பும் கலந்திருந்தது.

''அடடே, நாகனு?''

'ஏ'ம்ப்பா? இந்த உலகில்தான் இருக்கிருயா? சில நாட்களாக இலஞ்சியில் நீராட ஏன் வருவதில்லை? இனிய அருவி கண்டு, தனியே குளித்து வருகிருயோ? சிலம்புக் கூடத்துக்கும் வருவதே இல்லை. ஏதோ வாழ்க்கைச் சிலம்பத்தில் புக நீ வழி தேடி விட்டதாக வாணன் சொன்னுன்...!''

''சரிதான். வாணனுக்கு வேறு வழியில்லை. பூவனுக்கு வேறு போக்கில்லை.''

'' நாகனுக்கு வேறு...நண்பனில்லை......இல்லையா ? அப்பா, எழில்! நீ இப்போது எவ்வளவு அழகாக இருக்கிருய் தெரியுமா? எங்கே, இவ்வளவு புனைந்து கொண்டு புறப்பட்டாய்? உன்னைக் காணும் பெண்கள் 'முருகனே' என்று ஐயப்படுவார்கள்.''

''ஆமாம்...உடனே உன்னையும் அந்தப் பெண்கள் பார்ப்பார்கள். 'வேலனே' என நினைத்து வெறியாட அழைப்பார்கள்.''

''அது சரி எழில்! அவள் என்ன அவ்வளவு அழகா?''

''எவள்?''

''ஏதோ எனக்குத்தெரியாதது போல் அல்லவா பேசுகிருய்? எதையோ நான் மறைப்பது போல் அல்லவா நீயும் பேசு கிருய்?''

''நான் சொல்வதுபொய்யா?''

''நான் சொல்வது மட்டும்'' பொய்யா?

இருவரும் வாய்விட்டுச் சிரித் தார்கள். எழிலன் தன் கூர்மை யாக்கிய அம்பினுல், எதிரே யிருந்த கொடியில் விளங்கிய பூக் களை அசைத்தான். அவை அழ கோடு அசைந்த காட்சியில் ஒரு கணம் ஈடுபட்டான். அதிலிருந்து அழகிய பூ வொன்று கீழே உதிர்ந்தது. அதனைஎடுத்து, ஆர முகர்ந் தான். அவன் முகத்தில் நா ணம் படர்ந் திருந்தது. நண் பனிடம் ஏதோ சொல்ல அவன் எண்ணிஞன்; உதடுகள் துடித் தன; சொல்வதற்கு வாயெடுத் தான், அப்போது, எங்கிருந்தோ பேரொலி எழுந்தது.

''புலி, புலி,'' ''புலி, புலி'' என்ற கூக்குரல் கேட்டு அவன் திடுக்கிட்டான், பல குரல்கள் சேர்ந்து ஒலித்தன; அத்தனையும் இனிய குரல்கள். யாழும் குழலும் போல இணைந்து இசைத்தன. அவை அச்சத்தை வெளிப்படுத்து வனவாக நாகனுக்குப் படவில்லை. ஆனுல், எழில் வண்ணன் மட்டும் ஏன் இதைக் கேட்டு நடுங்கு கிருன்? அவன் அன்பிற்குரிய இடம் அருகில் இருக்கிறது போலும், அங்கு புலியொன்று வந்து போர் முழக்கம் செய்தது போலும்...என்ன எண்ணிஞனே, எழில் வண்ணன். அவன் தோள் கள் விரிந்தன! கண்கள் படபடத் தன; முகம் சிவந்தது; புருவங்கள் வளைந்தன; நெற்றி வியர்த்தது... விரைகின் ருன் தாவி ஓடித் தன் குதிரை மீது பாய்கின்ருன். குதிரை விரை கிறது. அதன் குளம்படி ஓசை மலைச் சரிவெல் லாம் எதிரொ லிக்கிறது. புழுதியைக் காற்றிலே பறக்க விட்டுக் குதிரை பறந்து செல்கிறது.



நாகன் வியப்பில் ஆழ்ந்தவனுக இருக்கிருன். ஓசை வந்த திசை நோக்கி அவனும் நடக்கிருன். ஏதோபுரியாத புதிரொன்று குதி ரையின் குளம்படித் தூசியோடு அவன் முகத்தில் படர்கிறது.

2. மனத்தைக் கவர்ந்த மலர்க் குழலி

புகையெனெப்படர்ந்த மேகங் களுக்கிடையே, அக் குன்றம் தலை நிமிர்ந்து நின்றது. பிறைமதி தோன்றி அம்மலை முடிமீது ஓர் அணியெனத் திகழ்ந்தது. பாரி வேள் ஆட்சி புரியும் பறம்பு மலை யென்ருல் யார்தான் அறியாத வர்? வான் போன்று பரந்து



விரிந்து விளங்கும் அம் மலையில், விண்மீன்கள் போன்ற சுனைகள் பல உண்டு. மேலும் உழவர்களால் உழப்பெருது விளையும் நான்கு பெரிய விளைபொருட்களை, அம்மலை பெற்றுள்ளது. மூங்கில் நெல், பலாச் சுளை, வள்ளிக் கிழங்கு, தேன்—என்ற இந் நான்கு பொருள்களையும் இடையருது தரும் அந்த மலையில் வாழ்வோர், உணவு தேடி எங்குமே செல்லவேண்டியதில்லை.

அங்குக் காணும் இயற்கை எழிற் காட்சிகளுக்கு ஓர் அளவில்லை. அடர்ந்து, திரண்டு, உருண்ட மூங்கில் புதர்கள் பல ஆங்காங்கு உண்டு. அம் மூங்கில்களில் வண்டுகள் இட்ட துளை வழியே வீசிய மேல் காற்று, குழலிசை போல ஒலித்த வண்ணமிருந்தது. அதற்குப் பக்கமேளம் போல அருவிகள் கற்பாறைகளில் மோதிச் சிதறி உருண்டோடும் ஓசை கேட்ட வண்ணமாக இருந்தது. கலை மான் கூட்டங்களின் ஒன்று பட்ட ஓசை பெருவங்கியம்போல ஒலித்தது. மலைச்சாரல் பூக்களிலே, வண்டுகள் 'ரீங்கார'மிட்டுத் திரிந்த காட்சி யாழிசை போலக் கேட்டது. இப்பின்னணி இசையைப் பெருமைப்படுத்துவதே போல, பக்க மலையில், இயற்கை அழகுவரைந்தபச்சைப் பசுந்திரைக்கு முன்னின்று மயில்கள் விறலியர் போலத் தோகை விரித்துச் சாய்ந்து சாய்ந்து நடனமாடின. இக் காட்சியை மகிழ்ச்சியோடு, பல மந்திகள் எதிரிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தன!

இத்தகைய மலைச் சாரலில், தினைப்புனத்தின் பக்கம் வேங்கை மரம் ஒன்று தழைத்துச் செழித்துப் பூத்துக் குலுங்கியது. அதனைச் சுற்றி, மலர்க் குழலியும் அவளுடைய தோழியும் நின்றுகொண்டு பூக்கொய்து கொண்டிருந்தார்கள்.

பகைவர் மீது சினங் கொண்ட அரசன், போர் தொடுத்து விரைந்து படையெடுத்துச் செல்லுவது போல, மாலைப் பொழுது விரைந்து நெருங்கிக்கொண்டு இருந்தது, மான் கூட்டங்கள் மரத்தடியிலே ஒன்று கூடின. பசுக்கள் 'அம்மா' என்ற குரலுடன் மேய்ச்சல் புலம் விட்டு ஊர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. ஊதுகின்ற 'கொம்பு' போல ஒலிப்பதும், வளைந்த வாயினை உடையதுமான அன்றில் பறவை, உயர்ந்த கரிய பனைமரத்தினது உள் மடலிலே இருந்துகொண்டு பெட்டையைக் கூவி அழைத்தது. இடையர்கள் பலர், ஆம்பல் என்னும் அழகிய குழலினுல், தெளிந்த இசையை இடைவிடாது எழுப்பினுர்கள். மலைமீது வாழும் மக்கள், விலங்குகளுக்கு அஞ்சித் தாங்கள் குடியிருக்கும் பரண்மீது அமர்ந்து, இரவு வருகிறதே என்ற எண்ணத்தினுல் தீக்கடைக் கோலால் நெருப்பை உண்டாக்கி, ஒளியேற்றிக் கொண்டிருந்தார்கள். முகில்கள் பெரியமலையைச்

சூழ்ந்து கறுத்தன. காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் 'கல்' லென்னும் ஓசையுடன் ஒன்றிற்கொன்று மாறி ஒலித்தன. பறவைக் கூட்டங்கள், தத்தம் மரங்களையடைந்துஆரவாரித்துக் கொண்டிருந்தன.

இத்தகைய அந்தி மாலை நேரத்தில், மலைச்சாரலில், தினைப்புனத்தின் பக்கம் வேங்கை மரத்தடியிலே நின்றுகொண்டு, மங்கையர்களும்மலர்-குழலியும் 'புலிபுலி புலி புலி' என்று பூசல் எழுப்பிப் பூக்கொய்து கொண்டிருந்த காட்சி கண்ணுக்கினியதாக இருந்தது. இது, அவர்கட்கு ஒரு மகிழ்ச்சி விளையாட்டு. 'பொலிபொலி'எனக் கதிர்களைத் தூற்றி, மணிகளைச் சேர்க்கும் அணி திகழ் கைகள், 'புலிபுலி', 'புலிபுலி' எனக் கூவிப் பூக் கொய்தன. நிழல் கூடப் புலி வடிவாய்க் காட்சி நல்க, வேங்கை எனப் பெயரும் பெற்ற வேங்கை மரப் பூக்களைக் கொய்யும்போது 'புலி புலி' எனக் கூவுதல் அக்காலப் பழக்கமாகும்.

இவ்வாறு, ஆரவார மகிழ்ச்சியிலே மூழ்கியிருந்த அவர்களுக்கு எதிரே ஒரு குதிரை வந்து நின்றது. அதிலிருந்து குதித்து இறங்கிய எழில்வண்ணன், அப் பெண்களின் எதிரே வந்து நின்றான். இதனைக் கண்டதும், ஆரவாரம் நிற்க, அமைதி தவழ, அச்சமும் வியப்பும் முகத்திலே படர, அப் பெண்கள் விழித்து நின்றனர். அப்போது,

''எங்கே புலி? புலி எங்கே? எந்தப் பக்கம் ஓடியது?'' என்று அதட்டியபடி, ஓர் அம்பினை எடுத்து, வில்லிலே தொடுத்து, புலியைக் கொல்ல ஆயத்தமாக எழிலன் நெருங்கிச் சென்றான். அவன் படபடப்பு, ஆண்மை, ஊடுருவும் கண்கள். அஞ்சாத நெஞ்சம் இவற்றைக் காணுங்கால், ஒரு வேளை உண்மையிலேயே அங்கு புலி வந்திருக்குமானால் உடனே கொல்லப்பட்டிருக்கும் என்பதைக் காட்டின. இளைஞனைக்காண வெட்கப்பட்டவர்களாய், எதிர்த்துப் பேச அஞ்சியவர்களாய், ஒருவர் முதுகில் ஒருவர் ஒடுங்கி வரிசையாக நின்றனர், அப் பெண்கள். நாணித் தலை கவிழ்ந்திருந்த அவர்களின் கைகளிலே வேங்கைப் பூக்கள் விளங்கின, இதனை நோக்கிய, கணப் பொழுதில் எழிலன் உண்மையுணர்ந்தான். 'அடடே பூக் கொய்த ஓசையா இது...

''உங்களைப் பார்த்தால் பண்புடைய பெண்களாய் இருக்கிறீர்கள்! பொய் பேசுவதும் உங்கள் வழக்கமோ?'' என்று கூறி, மலர்க்குழலியை நோக்கினான். அவள் கன்னம் சிவக்கக் கவிழ்ந்த தலையோடு நின்று, கடைக் கண்ணால் பார்த்தாள். அப்போது தான் அவள் எவ்வளவு அழகாக இருந்தாள்!

உண்மையிலேயே புலி வந்திருக்கக் கூடாதாஎன்று எழிலன் ஏங்கினான். புலியை விரட்டி, இந்தப் பூவையைக் காப்பாற்றியிருக்கலாமே! ஆரத் தழுவி அவளை எடுத்து, குதிரை மீதேறிச்

சென்றிருக்கலாமே! என்றெல்லாம் எண்ணி வருந்தினான்.

அவன் சிறிது தூரம் சென்ற பிறகு, ஏமாந்துதிரும்பிய அவனை நினைத்துப் பெண்களனைவரும் 'கொல்'லென்று சிரித்தார்கள். ஆனால் மலர்க்குழலி முகத்தைத் திருப்பியதும் ஆரவாரம் அடங்கியது. "புலி என்ற ஓசை கேட்டதும், நமக்கு ஏதும் இடையூறோ என ஓடி வந்தவர் எவ்வளவு அன்புடையவராய் இருக்கவேண்டும்? நன்றி காட்டாவிட்டால் போங்கள்! இதற்கு நகைப்பதா?" என்று கடிந்தாள். 'எவ்வளவு சிறந்தவர்' என்று சொல்லி மெய்ம் மறந்தாள்.

திரும்பிச் சென்ற எழிலன், எதிரே வந்துகொண்டிருந்த நன்னாகனைக் கண்டதும் குதிரையை விட்டு இறங்கினான். குதிரையை அங்கேயே விட்டுவிட்டு, இருவரும் அருகேயிருந்த அருவியின் பக்கத்தில் போய் அமர்ந்தார்கள். இருவரும் அருகருகே இருந்தாலும் 'யார் முதலில் பேசுவது? என்ன பேசுவது?' என்பது தெரியாதவர் போல இருந்தனர். அமைதியான அச் சூழ்நிலையில் அருவியின் இனிய ஓசை மட்டும் தெளிவாகக் கேட்டபடி இருந்தது. இருள் சூழ்ந்த அந்த நேரத்தில் பெண்கள் சிலர் விரைந்து தம் குறிச்சி நோக்கிச் செல்வது தூரத்தே தெரிந்தது.

"இவர்களைத் தெரியுமா உனக்கு?" நாகன் எழிலைப் பார்த்துக் கேட்டான்.

"ஒருத்தியை மட்டும் தெரியும்!"

"போதுமே. தேவைக்கு அதிகமாக எதற்கு?"-இருவருமே சிரித்தனர்.

"எப்போதிருந்து பழக்கம்?"

"முன்னம் ஒரு நாள் மலக்குழலியை ஓர் இடையூற்றிலிருந்து காப்பாற்றினேன்."

"ஓ, இதுதான் அவள் பெயரா? அழகாயிருக்கிறதே!"

"ஆமாம். அவளும் அழகாக இருப்பாள்!"

"துன்பத்திலிருந்து காத்தது சரி. அதற்காகக் காதலித்து விடுவதா? நான் கூட ஒரு வயதான மூதாட்டியை நேற்றுக் காப்பாற்றினேன்."

"காத்தற்காக மட்டுமன்று. அந் நிகழ்ச்சி எங்கள் இருவரையும் ஒன்று சேர்த்துவிட்டது, கருத்து ஒன்றியது. காதல் பிறந்தது. இதிலே கேலியும் கிண்டலும் வேண்டியதில்லை நாகா...! இனி நான் இன்றி அவளில்லை; அவளின்றி நானில்லை!"

"எப்படியப்பா அந் நிகழ்ச்சி நடந்தது? எங்கே காப்பாற்றினாய்? எப்படி?"

"அடிவாரத்தில், காட்டாற்றின் கரையோரத்தில் ஒரு நாள் நான் நடந்துகொண்டிருந்தேன். அப்போதும் இது போலவே "காப்பாற்றுங்கள் ... ஆ... ஊ" என்ற அலறல் ஒலி கேட்டது.

எழிலன் சிறிது நிறுத்திவிட்டு அருவிப் பக்கமாகச் சென்று சிறிது நீர் பருகிவிட்டுத் திரும்பினான். நாகன் எழிலனுடைய காதல் பிறந்த கதையைக் கேட்கும் ஆவலுடையவனாய், அவனை எதிர்நோக்கியிருந்தான்.

ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தபோது அவனால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. பிடிக்காததை உமிழ்வது போல சொற்கள் உதிர்ந்தன.

''மானங்கெட்ட பிழைப்பு''

மனம் சுமையில் கனத்தது: துவர்ப்பான உணர்ச்சிகள் கசந்தன.

சிலையாகநின்ற மாயாவின் கண்கள் பளபளத்தன. அதில் நிழலிட்டது கேலியா, வேதனையா? திருவேங்கடம் வெறுப்போடு முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

சென்று போன நிகழ்ச்சிகள் தெருவோரத்துக் குப்பை மேடுகள் போல, சேறும் சகதியுமாக நினைவில் இறைந்து கிடந்தன.

மாயாவை அவன் முதலில் பார்த்தபோது அயர்ந்துதான் போனான். தெம்பும் திமிரும் இளமை வாளிப்பாக, இதயத்தைத் தொட்டு வருடும் பருவப் பொலிவாக, பார்ப்பவரை திரும்பவும் பார்க்க வைக்கும் அழகு. சொடிக்கிவிட்ட சாட்டைபோல அவள் தோற்றம் அவன் உள்ளத்திலே படிந்தபோது, திருவேங்கடம் நிலை தவறித்தான் போய் விட்டான்!

''இப்படியும் ஒரு அழகா? இப்படியுமா?......''

மனதைக் கவிந்துவந்த இந்த மயக்கம் விலகியபோது, புகை படிந்து இருள் நிறமாகிப் போயிருந்த அறையில் அவனருகே புத்தாடை சரசரக்க, கை நிறைய கண்ணாடி வளையல்கள் சிரிக்க மாயா நின்றாள்.

துடைத்து விட்ட அரிக்கன் விளக்கின் பளிச்சிட்ட ஒளியில், காரை பெயர்ந்த சுவரின் அடுக்கிய செங்கற்கள் விகாரமாக இளித்தன.

அவள் உதடுகளில் புன்சிரிப்பு அழுந்திற்று. சரியச் சரிய முடித்திருந்த பூச்சரமும், இழைய இழைய வந்து நின்ற அழகும் அவனை இன்னும் குழப்பின. ரவிக்கையின் சரிவில் மார்பழகின் வெண்மை பளீரிட்டது. பெருமூச்சில் மேனி விதிர்ந்தபோது அந்தச் சரிவுகள் விம்மி நெகிழ்ந்தன. தெரிந்தும், தெரியாமலிருந்த அடி வயிற்றின் சதைப் பிடிப்புகளில் அழகும், மென்மையும் சுழிப்பிட்டிருந்தன.

உணர்ச்சிகளில் தணல் தாவித் தாவிப் படரும் நிலை......

முகத்தின் செம்மை இன்னும் சிவப்பாக பால் கிண்ணத்தை மாயா அவனிடம் கொடுத்தாள்,

''வேண்டாம்.'' இந்த வார்த்தை மனத்திலிருந்து வந்ததுதானா?

அவனுக்கே சந்தேகம். முதலிலே யார் பேசுவது? எப்படியோ பேசித்தானே ஆகவேண்டும்? நினைப்பு வேறொரு பாதையில் இழைந்தது. அவள் பாத்திரத்தைக் கீழே வைத்தபோது அவன் திரும்பிப் பார்த்தான். அவள் உதட்டை அழுந்தத் துடைத்துக்கொண்டாள். பெரிய கண்களில் பளிச்சிட்டது வெறுப்பா? வேதனையா? பரிதாபமா?

பிடிக்காத ஏதோவொன்று மனதில் குமைந்தது. வெளியே இரவு சுமையாகக் கனத்துக் கிடந்தது. கிராமத்தின் ஒற்றை நாய் எங்கிருந்தோ ஓலமிட்டு அழுதது. வெளிச் சுவரருகே கோழிகள் சடசடவென்று இறக்கை அடித்து, தொண்டையின் அடிக் குரலை அமர்த்தி அமர்த்தி ஒலித்தன.

கல்யாண ரகளை ஒய்ந்திருந்தது வெளியே மாமா யாரிடமோ உரக்க இரைந்து கொண்டிருந்தார். இடை இடையே குரலின் பின்னணியிலே வெற்றிலைத் தட்டும் சத்தம்......

புதிய காற்றுக்காக ஏங்குவது போலத் தவித்த அவன் தலையணையில் முகம்புதைத்து மாயா குமுறிக் குமுறி அழுதபோதுதான் திடுக்கிட்டுப் பார்த்தான். முதுகின் அசைவில் பூரித்த தோள் விரிந்தது. சுருள் அவிழாத பின்னல் இழையோடிற்று.

''மாயா...'' அழைக்கத்தான் நினைத்தான், குரல்தான் எழும்பவில்லை.

''மாயா'' அழைத்தபோது

இன்னும் சிறிது பரிவை குரலில் இழைத்திருக்கலாம், என்று அவனுக்குத் தோன்றியது. அவள் திரும்பினுள் கண்ணின் மை கரைந்த கன்னத்தோடு கைகளில் முகத்தை சாய்த்திருந்த அந்த இனிமையும் அழகும்...! அங்கே நிரம்பிப் பொறுமியது பொய்க் கோபமா? புன் சிரிப்பா?

அவன் நிழல் அவளைக் கவிந்தது. பெருமூச்சு பட்ட கழுத்தில் கூச்சல் குறுகுறுத்தது. சக்கர மத்தாப்பு சுழன்று சுழன்று ஒளிப் பொறிகளைத் தூற்றுவதைப் போல, கண் கூசும் வெளிச்ச மதமதப்பில் அமிழ்ந்து, அமிழ்ந்து துளி பிரமாண்டமாகி, பிரமாண்டம் துளியாகி அதில் உயிர் திளைத்து திமிறி, வரிக் கோடுகளாக பின்ன விட்டுப் பின்ன விட்டு......

அந்தத் தாழ்ந்த அறையின் முகட்டில் விளக்கின் கரிய புகை மொய்த்து இருள் திட்டாகப் பரவிப் படிந்தது.

இரா. இளஞ்சேரன்

விடிந்து அவன் கண் விழித்த போது அரிக்கன் விளக்கின் ஒளி மங்கிக் கிடந்தது. ஆரவாரம் அடங்கிப் போன மனம் வெறிச்சோடிக் கிடந்தது. எதையோ இழந்துவிட்ட உணர்ச்சி......

குளித்து, கோதிய கூந்தல் அருவியாகப் புரளப் புன்சிரிப்போடு மாயா எதிரே நின்ருள். மத்தாப்பின் வெளிச்சம் போன்ற புன்சிரிப்பு! கரிய நுனி தட்டிய சுடர் போல மாயா பிரகாசித்தாள்!

திருவேங்கடம் தன்னுள்ளே வளர்த்து வந்த விரக்தியும், வேதனையும் அவனைக் குழப்பி ஊரை விட்டே விரட்டியபோது எல்லோரும் அனுதாபத்தோடுதான் பேசினார்கள்.

வெற்றிலைபாக்குக் கடை சடையாண்டிகூட குறும்பாகக் கேட்டான்.

''என்ன, அண்ணுச்சி, எல்லாரும் பட்டணம் போருங்க நீங்களும் போறீங்க.''

''முன்னப் போல இங்கே செழிச்சா கிடக்கு? இப்படியே இருந்தா எப்பிடி? பிழைப்புக்கு ஒரு வழி வேணுமில்லே,''

''ஆமா, இப்ப ரண்டு உசிரு; ஆண்டவன் இனி எத்தனையைக் கொடுப்பாரோ?''

திருவேங்கடம் சிரித்தான்.

''என்ன, அண்ணுச்சி... மாயாவை இப்படி விட்டுட்டுபோறீங்களே! சின்னப் பொண்ணு......

திருவேங்கடம் திரும்பவும் சிரித்தான். அவனுக்கு அதிகமாகத் தெரிந்தது அதுதான்! அவன் சந்து திரும்பிய போது கடை வாசலில் பெருஞ் சிரிப்பு அதிர்ந்தது!

'மாயா' அவள் பெயர் அப்போது ஏனே நினைவுக்கு வந்தது. எல்லோருக்கும் சிரிப்பாகிவிட்ட அவன் நினைப்புகளை சாம்பலாக்கி உதிர்த்துவிட்டு நடந்தான்.

ஃ ஃ ஃ

''மாயா!''

''.........''

''மாயா உன்னைத்தானே!''

''என்னவாம்!''

''அண்ணுச்சி கடுதாசி வந்ததா?''

''இல்லே.''

சடையாண்டியின் சிரிப்பில் வெற்றிலே காவியேறிய பற்களும், பளபளத்த கண்களில் குறும்பும் பளிச்சிட்டன. காட்டுக் கிளி சிறகடிப்பதைப் போல மாயா சிணுங்கியபடி நடந்தாள். அவள் சேலே விளிம்பில் அவன் ஆசை முகம் படபடத்தது! பிறகு, எப் போதும்போல சடையாண்டி கேட்பான்.

''மாயா......''

''கடுதாசி வரல்லே!'' அவளே சொல்லிவிட்டு சிரிப்பாள்.

அறுவடை மாதத்தில் திரு வேங்கடம் கிராமத்திற்கு வர வில்லே. மாயா அவனே மறந் தாளோ, என்னவோ? ஊர் அவனே மறந்துவிட்டது! ஆடி அம்மன் கொடைக்குக்கூட திரு வேங்கடம் வரவில்லே.

ஊர்க்குளம் இரண்டு முறை நிரம்பி வற்றி வரண்டுவிட்டது.

புதிய சுவடுகள் பிறந்தபோது பழைய சுவடுகள் தாமாகவே தேய்ந்து அழிந்தன.

ஃ ஃ ஃ

''நம்ம பையனேப் பார்க்க புறப் பட்ட சமயத்திலே மாயாவும் கூட வாரேன்னு சொல்லிச்சி. இந்த வாட்டி விளேச்சல் மோசம். உங்க மாமாவுக்கும் இப்போ கொஞ்சம் சிரமம்: மாயா அங்கே தன்னந்தனியா என்ன செய்யப் போவுது? நீகூட மூணு வருஷமா அந்தப் பக்கமே வரல்லே.''

விடிந்ததும், விடியாததுமா வீட்டு வாசலில் வந்து நின்று பெருமாள் கோயில் பூசாரி சர வணக் குருக்கள் பேசியபோது திருவேங்கடத்திற்கு திகைப்பை விட குழப்பம்தான் அதிகமாகி விட்டது.

பின்னுலே மாயா நின்ருள்.

அவள் இடுப்பிலிருந்த குழந்தை யின் வரிந்த கண்களில் மிரட்சி படிந்திருந்தது. 'இது யார் குழந்தை?' அவன் மனம் குறு குறுத்தது. ஒரு கணம்தான்! பிறகு அமைதியாகி விட்டான்! புது மழையில் நனேந்த முல்லேப் புதராகத் தென்பட்ட மாயா வின் தோற்றம் அங்கே நிரம்பி வழிந்தது!

''அப்புறமா வந்து பார்த்துப் போறேன் தம்பி'' குருக்களய்யா துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு நடந்தார். அதுவரையில்லாத புதிய சுமை யோடு வீட்டிற்குள் நுழைந்ததும் அவசர அவசரமாக அவன் கேட் டான்.

''இது யார் குழந்தை?''

கேட்ட பிறகு'தான் எதற்காகக் கேட்டோம்' என்ற நினேப்பு எழுந்தது.

அவள் பேசாமல் நின்ருள். அந்த அமைதியும், துணிவும் உணர்ச்சிகளேக் கிளறின.

''உன்னேத்தானே ஏது இந்தக் குழந்தை?'' கேள்வியில் ஆத்திர மும் இருந்தது; அவசரமும் இருந் தது.

மாயா மெதுவாக சொன்னுள்:

''என் குழந்தை'' காற்றி லாடும் சுடர்போல குரல் நடுங் கியது. வெறுப்பு வழிந்த அவன் முகத்தில் கரிய நிழல் தட்டிற்று. வெறிச்சோடிய பார்வையை எங்கோ படரவிட்டு நின்ருன். பின்னுல் பார்த்தபோது மாயா கண்களேத் துடைத்துக்கொண் டிருந்தாள்,

'அவள் அழுகிறாளா, என்ன?' வியப்பும் திகைப்பும் கலந்த உணர்ச்சியில்கூட மனதின் தினவு தீர்ந்ததாக எக்களிப்பு நிழலிட்டது.

'அழவேண்டியதுதானே! வெட்கமோ, வேதனையோ இல்லாமல்......' உள்ளம் இப்படி கருவிக் கொண்டது.

எதற்காகவோ விசித்து விசித்து அழுத குழந்தையை அவன் பார்த்தான். பெண் குழந்தையாக இருக்கக் கூடாதா? அவளைப் போல இருந்திருக்கும்! அதே சாயலையெங்கோ பார்த்ததாக நினைவு. அடர்ந்த புருவம், பெரிய கண்கள், அளவுக்கு மீறிய விசாலமான நெற்றி, மின்னலாக எண்ணம்பளிச்சிட்டது. ஊரை விட்டு வந்தபோது வெற்றிலை பாக்குக் கடையில் வைத்துகேட்ட குரல்..

"என்ன அண்ணுச்சி மாயாவை விட்டு விட்டுப் போறீங்களே! சின்னப் பொண்ணு"

"இது சடையாண்டி பிள்ளை தானே!" கொதிப்பேறியிருந்த குரல் சற்று உரக்கவே கேட்டது.



மாயா தலை கவிழ்ந்தாள்.

அப்போதுதான் திருவேங்கடத்திற்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. பிடிக்காததை உமிழ்வதுபோல சொற்கள் உதிர்ந்தன.

"மானங்கெட்ட பிழைப்பு!"

தாழ்வாரத்தில் தன்னந்தனியாகப்பாய்விரித்துபடுத்தபோது அவனுக்கு நெஞ்சின் சுமை சற்று சரிந்தாற் போல் இருந்தது. ரத்தம் குடிக்கும் அட்டைபோல உள்ளத்தில்ஒட்டிக் கிடந்த உதவாத எண்ணங்கள்...விளக்கின் புகை படர்ந்த மங்கிய வெளிச்சம் தாழ்வாரத்தை நனைத்திருந்தது.

உள்ளே எப்போதோ உறவாடிய தவருக்கு இப்போது சுமையாக வந்து நிற்கும் அவள், விரும்பாதவனின் சாயலைப் பெற்று வேண்டுமென்றே அவனை வதை செய்யவந்திருக்கும் குழந்தை, புயலோடு மழையும் சுழிப்பெடுத்தாற்போல பொறுமித் தவித்திடும் அவன் உள்ளம்...

இருளோடு இருளாய், எல்லாம் சூன்யமாய், விரக்தியின் பாழ்

பட்ட வெளியில், ஆசாபாசங் களின்மெல்லியஇழைகூடஅறுந்த நிலையில். படுக்கையில் ஒட்டிக் கிடந்து, அவன் குமுறித் தவித்த போது...

'மாயா' அந்தப்பெயரிலே புதி தாக ஏதோவொன்றுதொனிப்ப தாக அவனுக்குப் பட்டது.

திருவேங்கடம் புரண்டு படுத் தான்.

நின்று நெகிழாது எரியும்விளக் குச் சுடர் மாயாவின் மேனியில் குங்குமம் இரைத்தது. நெருப்பின் ஜீவத்துளிபோல,திளைத்த அந்தச் சுடர் கடந்தகால ஆடரங்கின் திரையாக பரவிப் பரவி படர்ந் தது. தணல் நாக்குகள் தாவித் தாவி அலைபாய்ந்தன. புதைந்து பொங்கும் நுரையாக புகை கவிந்து வழிந்தது.

''மாயா...மாயா...'' யாரோ அழைத்தார்கள். பிறகு காற்றிலே மிதக்கும்இழைபோலசுமையற்று, உணர்ச்சியற்று எங்கோ போவ தாக,உடம்பிலேபற்றிய நெருப்பு படிப்படியாக அவிந்து குளுமை யில் திளைத்திருப்பதாக...

குழம்பிய அந்தமோனநிலையை ஒரு குரல் கலைத்தது.

''மாயா...'' அதோடு சந்தை இரைச்சலாக ஆரவாரம் மோதிற்று. அவள் கண் விழித் தாள், புகைபடிந்த உடம்போடு சடையாண்டி நின்றான். அந்தத் தெருமுனையின் எல்லா வீடுகளும் நெருப்பில் குளித்து நின்றன. அந்த செக்கச் சிவந்த ஒளியில் திளைத்த மனிதர்கள் தெருவெங் கும் நிரம்பி வழிந்தார்கள்.

''குருக்களய்யா வைக்கப் போரிலே யாரோ நெருப்பு வச் சிட்டாங்க'' படபடப்போடுதான் பேசினான் சடையாண்டி. அப் போது அவன் சிரித்தானா என்ன? எதிர்புறம் திரும்பியிருந்ததால் முகம் தெரியவில்லை. அவனது நெடிய நிழல் அவளை முழுக்க முழுக்க கவிந்திருந்தது.

தொழுவத்தை அடுத்த பின் கட்டில் மாயா படுத்தபோது அயர்ச்சி களை கட்டிய இமைகள் கனத்தன. தொலைவில் கேட்ட இரைச்சல் மெல்ல மெல்ல மெலிந்து சன்னமாக இழைந்து இற்றுப்போயிருந்தது.

இருளிலிருந்து சடையாண்டி யின் நிழல் தனியாகப் பிரிந்து அசைந்தது,

''மாயா'' குரலில் ஆசை நெருப் பாய் குவிக்கப்பட்டிருந்தது.

கழுத்து மணியை மெல்லென ஒலித்திடும் பசுக்கள்,வைக்கோலை அடர்த்தியாக எடுத்து சொர சொரப்பான நாக்கினால் சுழற்றி எடுக்கும் சலசலப்பு—

பசியால் பொறுமையிழந்து, உயிர்ப்பெல்லாம் ஏக்கமாக எதி ரொலிக்க எங்கோ அழுத பூனை யின் கோடாக ஒடுங்கும் அவல ஓலம்—

கரிய கூர்வாட்களாக காற் றிலே மோதி, கூரையில் சரியும் தென்னங் கீற்றுகளின் கிறு கிறுத்த ஓசை—

எல்லா ஒலிகளும் ஒரே ஒலி யாகி உயிர் மதமதப்பின் உத் வேகத்தோடு பின்னித்திரிந்து 'மாயா' என்ற அழைப்பாக பிர வேசித்தபோது அந்தக் குரலில் இருள் சிலிர்த்தது! அவளது கை கள் பசியெடுத்த பாம்புகளாக அவனது தோளில் பிணைந்து கனத்தன.

கொதிப்பையும், இனந்தெரியாத குறுகுறுப்பையும் தந்த அந்த தொலைந்துபோன நினைப்புகளை திரும்பவும் தொகுத்துப்பார்த்த போது, மாயாவின் கண்கள் நிறைந்தன. எண்ணங்களைத் தன்னுள்ளே புதைத்து புழுங்கித் தவித்த திருவேங்கடம் திடுக்கிட்டு விழித்தபோது உள்ளே விளக்கு எரிந்துகொண்டிருந்தது அயர்ந்து படுத்திருந்த குழந்தையருகே மாயா சிலையாக அமர்ந்திருந்தாள். ஒளிபட்டு பளீரிட்ட முகத்தை அவன் பார்த்தபோது பிடிக்காத ஏதோவொன்று அதிலே ஒளிந்திருப்பதாக நினைத்தான். தொடர்பையோ புதிய துவக்கத்தையோ எதிர்பார்க்க என்ன இருக்கிறது? நெருப்பை பார்க்கலாம். தொடமுடிகிறதா, என்ன? அதுபோல!

முன்னைவிட அவள் அழகாய் இருந்தாள். விதிர்த்து விகசித்த தோற்றமும், தெளிந்த முகமும் வேட்கையில் திளைத்த உதடுகளும் கன்னச் சரிவில் பூரித்த செழுமையும்···ஒரு கணம் திருவேங்கடம் உணர்ச்சிவசப்பட்டான். மனதை சபலம் தொட்டுத் தடவிற்று. பிறகு அவன் அமைதியாகிவிட்டான், எப்போதும்போல!

சிறு சைகை. தலையசைப்பு, 'உம்' என்ற முணுமுணுப்பு, திருவேங்கடம் தன்னையே இப்படி மாற்றிக்கொண்டான். உணர்ச்சியற்ற பாவனை, உணர்ச்சியற்ற போக்கு, அவன் எப்போது வீட்டிற்கு வந்தாலும், மாயா திடுக்கிட்டுக் கண்களைத் துடைத்துக் கொள்வதைத்தான் பார்த்தான்.

விடிந்ததும் விடியாததுமாக வெளியே செல்பவன் வரும்போது இருட்டிவிடும். போட்டதை சாப்பிடும் அமைதி, பாத்திரங்கள் இடம் மாறும்போது உராயும் ஓசை, கைக் கழுவும்போது முற்றத்திலே தண்ணீர் விடும் சலசலப்பு, தாழ்வாரத்திலேபடுக்கையைத் தட்டிப்போடும் சத்தம்... பிறகு வீடு அடித்துப்போட்ட அமைதியிலே ஆழ்ந்துவிடும்.

எப்போதும் குழந்தையின் அழுகை கேட்டு அவன் எழுந்திருப்பான். பிறகு அயர்ச்சியிலே படுத்தால் விடிந்து வெளிச்சம் பரவிய பின்தான் கண்விழிப்பான்

அன்று இரவு முழுதும் அழுகை ஓயவில்லை. விடிந்ததும் குழந்தையைஅவன்தொட்டுப்பார்த்த போது கொதித்தது. மூச்சுபிரிக்க முடியாத மார்பு விம்மிவிம்மித் தணிந்தது. தொண்டைக்குள் ஏதோ சிக்கித் திணறும் தவிப்பு கரவையிட்டது.

அவசர அவசரமாக திருவேங்கடம் வைத்தியரை அழைத்துவந்த போதுகூட மாயா உணர்ச்சியற்று நின்றாள். ஏனோ அவள் முகத்தை அவன் ஏறிட்டுப்பார்த்தான்.

அதிலே வேதனையின் நிழலே இல்லை.

அன்று இரவில்கூட குழந்தை கண்விழிக்கவில்லை,வெளியேபடுத்திருந்த அவன் இரண்டாவது முறை வந்து பார்த்தபோது மாயா அமைதியாகக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள்.

குழந்தை துவண்டு கிடந்தது. எப்போதுமே விம்மித் தணியும் அதன் மார்பு சலனமற்றிருந்தது. இன்னும் என்ன? எல்லாம் முடிந்துவிட்டாற்போன்ற எல்லையற்ற விரக்தி உணர்ச்சியில்கூட மனத்தின் ஆழத்தில் பளிச்சிடும் ஒளித்துளி எங்கோ எதிலோ ஒரு ஆறுதல்...

பூக்கள் உதிருவதைப்போல நாட்கள் சந்தடியற்று கழிந்தன.

அவன் பழைய வெறுமை இருளில் தடுமாறினுன். ஆனுல்அவள் மட்டும்...

இழந்துபோயிருந்த நளினமும் பொலிவும் அவளிடம் திரும்பவும் வந்திருந்தது. தூசி படிந்து மூலேயிலே கிடந்த ரசம் உலர்ந்த கண்ணுடி துடைக்கப்பட்டு சட்டத்திலே ஏறியிருந்தது. குங்குமம், கண்மையும்கூட அங்கேஇருந்தன திருவேங்கடம் வெளியேயிருந்து வரும்போது மாயா தனக்குள்ளே முணுமுணுக்கும்பாட்டைநிறுத்தி விடுவாளே தவிர, முன்போல அழுதுகொண்டிருப்பதில்லே,

இந்த மாறுதல் அவனுக்கும் புரிந்துதான் இருந்தது, தாழ்வாரத்தில் படுக்கையைத் தட்டிப் போடும்போதுமட்டும் எதையோ நினைத்துக்கொண்டு உள்ளே பார்ப்பான். அவன் துயரங்கள் போல அங்கே பரவிய இருளில் மாயா புதிதாக வாங்கிப்போட்டுக்கொண்ட கண்ணுடி வளையல்கள் கலகலக்கும்.

சபலமா?

மனம்தான் கல்லாக இறுகிப் போயிருந்ததே!

வானம் குமுறிக் குமுறி மழையாகக் கொட்டிய ஒரு இரவில்அவன் வீட்டிற்கு வந்தபோதுவாசலிலே எதிர்வீட்டு சுப்பு ஆச்சி நிற்பது தெரிந்தது.

''பிள்ளேத்தாச்சி தனியா இருக்க இப்படி நேரம்கெட்ட நேரத்திலே வரலாமா தம்பி?

திகைப்பு அவனேச் சூழ்ந்தது.

''ஒண்ணு போயிட்டா என்ன, கடவுள் இன்னமும் ஒண்ணு கொடுக்காமலா இருக்கும்?''

திருவேங்கடம் வாயடைத்து நின்ருன்.

''ஏதோ மயக்கமா வருதுன்ஞ. நாலாவது மாசம்தானே!''

முற்றத்திலே மழைநீர் தாரை தாரையாக விழுந்து சலசலத்தது.

மாயா உள்ளே படுத்திருந்தாள், முகம் களேப்பில் பசுமை பாய்ந்து வெளிறியிருந்தது. ஒளியற்ற கண்களோடு அவன் பார்த்தான். அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். உள்ளம் உலேத்தீயாகக் கனன்றது.

''மானங்கெட்ட பிழைப்பு!''

உதடுவரை வந்த சொற்கள் நெஞ்சின் ஆழத்திலே அடக்கமாகி உருவற்றுப் போயின!

கார் விபத்திலே குதிரைப் பந்தயக்காரர் ஒருவர் மாட்டிக்கொண்டு இறந்து விட்டார். அதன் காரணமாக இன்ஷூரன்ஸ் கம்பெனி ஒரு லட்சம் ரூபாய் தரவேண்டியிருந்தது.

ஆனுல், விபத்திலே அந்த நபர் இறந்த செய்தியை அவரது மனேவிக்குத் தெரிவிக்கும் வேதனேயான பொறுப்பு நிர்வாகியிடம் ஒப்படைக்கப்பட்டது.

நிர்வாகி நேராக மாண்டவருடைய மனேவியிடம் சென்று இப்படிக் கூறினுர்:

''அம்மா! உங்கள் கணவர் சற்று நேரத்திற்கு முன்பு ஒரு பெரிய கார் விபத்தில் ஒரு லட்சம் ரூபாய் ஜெயித்திருக்கிருர்.

அம்மை நோய்க்கு, -புது மருந்து

★

அம்மை நோயைக் குணப்படுத்தக்கூடிய ஓர் மருந்தை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தயாரித்திருக்கிறார்கள். இதை அம்மை நோய் பீடித்த மிருகங்களுக்கு அளித்துச் சோதித்ததில் வெற்றி கிடைத்திருக்கிறது. மனித உடலில் இது எப்படிச் செயலாற்றுகிறது, என்பதைச் சோதித்து அறிய முற்பட்டிருக்கிறார்கள். டாக்டர் நார்மன் ஐன்லி என்பவர் தம்மீது இந்த மருந்தைப் பிரயோகித்துக்கொள்ள முன் வந்திருக்கிறார். அவர் யார்க்ஷயரிலுள்ள ஓர் வைத்தியசாலையில் தனி இடத்திலிருக்கிறார்.

''அம்மை நோயைத் தடுக்க சீம்பால் குத்திக்கொள்ளும் வழக்கம் இருக்கிறது. புதிய மருந்துக்கு அம்மையைக் குணப்படுத்தும் ஆற்றலுண்டு என்பது உறுதிப்பட்டுவிட்டால் அது மகத்தான வெற்றியாகும்'' என்று 'கார்டியன்' பத்திரிகையில் ஓர் நிருபர் எழுதுகிறார்.

புதிய மருந்தை 'பர்ரோஸ் வெல்கம் அண்டு கம்பெனி' என்ற லண்டன் நிறுவனம் தயாரிக்கிறது. இந்த நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர்கள் ஜே. பவரும், பி. டபிள்யூ. ஸாட்லரும் லிவர்பூல் பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிரியல் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் அலன் டவுனியுடன் கூட்டாகச் சேர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள்.

இவர்கள், மருந்து தயாரித்ததும், அதன் ஆற்றலையறிய சோதனைக் கூடத்தில் ஆராய்ச்சி நடத்தினார்கள். அம்மை நோயைப் பரப்பும் தொற்றுநீரை மிகச்சிறிய அளவில் ஒரு சில எலிகளுடைய உடலில் செலுத்தினார்கள். சில மணி நேரத்திற்குப் பிறகு அவற்றில் சில எலிகளின் உடலில் புதிய மருந்தைச் செலுத்தினார்கள். ''சிகிச்சை பெறாத 80 எலிகளில் 50 எலிகள் சில நாட்களுக்குள் செத்துவிட்டன. சிகிச்சை பெற்ற 118 எலிகளில் 108 எலிகள் குணமடைந்தன'' என்கிறார் நிருபர்.

இந்த மருந்து மனித உடலில் எப்படி வேலை செய்கிறது என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு, பரீட்சார்த்தமாக ஒரு சில நோயாளிகளுக்கு அளித்துச் சோதித்துப்பார்க்கலாம். இந்தியாபோன்ற நாடுகளில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மக்கள் அம்மை நோயால் வருந்துகிறார்கள். அம்மை நோயால் சாவு நேரிடுவதும் உண்டு. ஆகவே கள பரிசோதனைக்கு இந்தியாவைத் தேர்ந்தெடுக்கலாம்.

மாஸ்கோவின் மா கவிஞன்

அலக்ஸாந்தர் புஷ்கின்

உலக மகா கவிகளில் ஒருவர் அலக்ஸாந்தர் புஷ்கின். ரஷ்யாவின் கீர்த்திக்கு, பெருமிதத்திற்கு ஆதார புருஷர் அவர் என்ருல் மிகையாகாது. ஆயினும் அவர் ரஷ்யர்களுக்கு மட்டுமே சொந்தம் என்று எண்ணுவது தவறு-''அவர், அக்காலத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த ரஷ்யக் கவிஞர் என்று சொன்ஞல் போதாது. எல்லா நாட்டு மக்களின், எல்லா சகாப்தங்களின் மகாகவி அவர். ஐரோப்பாவின் மேதை அவர். உலகின் கீர்த்தி அவர்'' என்று தலைசிறந்த ரஷ்ய இலக்கிய விமர்சகர் பெலின்ஸ்கி எழுதுகிருர்.

அலக்ஸாந்தர் புஷ்கின் 1799-ஜூன் 6ந் தேதி மாஸ்கோவில், ஒரு பிரபுவின் குடும்பத்தில் பிறந்தவர். இளம் பருவத்திலேயே இலக்கியத்தில் குறிப்பாக ரஷ்ய கிராமியக் கதைகளிலும் பாடல்களிலும் அவர் ஆர்வம் காட்டிஞர். அவரது தாதியாகப் பணியாற்றிய அடிமைப் பெண் அரிஞரோடினேவாதான் அவருக்கு இக் கதைகளையும் பாடல்களையும் கற்பித்தவர்.

ஜாராட்சிக்கு எதிரான

போராட்டத்தின் ஆதரவாளர்

நெப்போலியனுக்கு எதிராக வெற்றிகரமாக யுத்தத்தைரஷ்யா நடத்திய போது, பொது மக்களின் உணர்ச்சி உச்ச நிலையில் இருந்தன. இத்தகைய சமுதாய எழுச்சியின் போதுதான், புஷ்கின் அவரது இலக்கிய வாழ்வைத் தொடங்கிஞர். அப்போது ரஷ்ய பிரபுத்துவ வர்க்கத்தின் முற்போக்குப் பகுதி களிடையே, முடியாட்சியின் யதேச்சாதிகாரத்திற்கு விரோதமான எதிர்ப்பு மென்மேலும் அதிகரித்து வந்

தது. பிரபுத்துவ வர்க்கத்தைச் சேர்ந்த முற்போக்கு இளைஞர்கள் விடுதலை முரசம் கொட்டினர். அவர்களுக்கு உற்ற துணையாக—சிறந்த ஆதரவாளராக—புஷ்கின் விளங்கினர். செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் பிரபு குடும்பத்துக் குழந்தைகளுக்கென பிரத்யேகமாக அமைந்திருந்த கல்வி நிலையத்தில் அவர் 1811-முதல் 1817-வரை படித்துப் பட்டம் பெற்ருர். இதன் பிறகு, வருங்காலத்தில் டிசம்பரிஸ்டுகளின் (*அக்காலத்தில் அடிமை முறையையும் யதேச்சாதிகாரத்தையும் எதிர்த்த,புரட்சிகர இயக்கத்தின் உறுப்பினர்களுக்கு ''டிசம்பரிஸ்ட்டுகள்'' என்று பெயர். இந்த இயக்கம் முற்போக்கு உள்ளம்கொண்ட பிரபுக்களால் நடத்தப்பட்டது. 1825 டிசம்பரில் ஜார் ஆட்சிக்கு எதிரான ஆயுதந்தாங்கிய எழுச்சியில் இந்த இயக்கம் உச்ச நிலையை அடைந்தது.) தலைவர்களாகவிருந்த சிலருடைய நட்பு இவருக்குக் கிடைத்தது. அக்காலத்தில் இரகசிய தீவிரவாதக் கழகங்களில் ஒன்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த ''பச்சை விளக்குக் கழகம்'' என்ற இலக்கியக் குழுவில் புஷ்கின் சேர்ந்தார். ''ருஸ்லனும் லூட்மிலாவும்'' என்ற கவிதை வெளியான பிறகு அவரது இலக்கியப் புகழ் நாடெங்கும் பரவிற்று.

பிறகு புஷ்கின் ''சுதந்திர அன்னைக்குத் துதி'', ''கிராமம்'' முதலிய பல கவிதைகளை எழுதினர். இக் கவிதைகள், கொடுங்கோன்மைக்கும், ஒடுக்கு முறைக்கும் அடிமை முறைக்கும் ஆர்த்தெழுமாறு மக்களை அறைகூவி அழைத்தன. இதனல் இவர் ஜார் ஆட்சியின் கோபத்திற்கு ஆளானர். சைபீரியாவிற்கு நாடு கடத்தப்படும் தறுவாயில் இவர் இருந்தபோது, செல்வாக்குள்ள சில நண்பர்களின் தலையீட்டால், குறைவான தண்டனை கிடைத்தது. 1820-ல் இவர் தெற்கு ரஷ்யாவிற்கு நாடு கடத்தப்பட்டார்.

அகதி வாழ்வு

பல ஆண்டுகள் (1820-1824)

மா கவிஞன் புஷ்கின்...

- **ரஷ்ய மக்களுக்கோர் விடிவெள்ளி !**
- **புரட்சிக்காரர்களுக்கோர் கேடயம் !**
- **ஆணவக்காரர்களுக்கு அவன் அனற்பிழம்பு!**
- **தெளிந்த நெஞ்சினர்க்கு அவன் தென்றல்!**
- **வாழும் கவிஞர்களுக்கு அவன் வழிகாட்டி!**
- **கவிதை எழுதிய கரத்தில் கத்தி ஏந்திப் போரிட்ட ஒரே கவிஞன்!**

அவன் வாழ்க்கையில் நடந்த அத்தனை நிகழ்ச்சிகளையும் மொத்தமாய் சுமந்து நிற்கும் கட்டுரை இது.

இவர் அகதியாக வாழ நேர்ந்தது. இவ்வாழ்க்கையே கவிஞராகவும், பிரஜையாகவும் இவர் பெற்ற வளர்ச்சியைப் பெரிதும் உருவாக்கியது எனலாம். அக்காலத்தில் அவர் வாழ்ந்த இடங்களெங்கும்—காகஸஸ், கிரிமியா, கிஷனேவ், ஒடெஸ்ஸா, முதலிய எல்லா இடங்களிலும்-அன்றைய ரஷ்யாவின் வாழ்க்கை நிலைமைகளை, அவர் நன்கு காண முடிந்தது. அச்சமயத்தில் கூட, டிசம்பரிஸ்ட்டுகளின் இரகசியக் கழகத்தினுடைய தென் பிராந்தியக் கிளையின் உறுப்பினர்களுடனும், அவர்களின் தலைவர் பெஸ்தலுடனும் அவர் தொடர்பு கொண்டிருந்தார். அவர் தனது தாய் நாட்டின் அரசியல் நிகழ்ச்சிகளிலும், மேற்கு ஐரோப்பாவின் அரசியல் நிகழ்ச்சிகளிலும் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டை அவரது படைப்புக்கள் வெளிப்படுத்தின. ரஷ்யாவின் எதிர்காலம் பற்றி, அச்சமயம் நாடெங்கும் நடைபெற்றுவந்த காரசாரமான விவாதங்களில் அவர் கலந்து கொண்டார். கவிஞரை அபாயத்திற்கு உட்படுத்தாமல் பாதுகாக்கும் பொருட்டு அவரது நண்பர்கள் தமது இரகசியக் கழகத்திற்குள் அவரைச் சேரவிடாமல் தடுத்து நிறுத்தி வைத்திருந்தனர். இச்சமயத்தில் அவர்கள் ஜார் ஆட்சிக்கு எதிரான புரட்சிக்கு முஸ்திபு செய்துகொண்டிருந்தனர். அக்காலத்தில் புஷ்கின் இயற்றிய எழுத்தோவியங்கள் யாவும் டிசம்பரிஸ்ட்டுப் புரட்சிக்காரர்களின் இலட்சியத்தில் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றுதலை வெளிப்படுத்தின.

தென் ரஷ்யாவில் இவர் இருந்தபோதே, எண்ணற்ற உணர்ச்சிப் பாடல்களையும் புரட்சிக் கவிதைகளையும் எழுதியதுடன், ''காகஸஸின் கைதி'', ''கொள்ளைக்கார சகோதரர்கள்'' ''பக்சிசராயின் பூநீர் ஊற்று'' போன்ற நீளமான அதீத கற்பனைக் காவியங்களையும் இயற்றினர். இதே காலத் காலத்தில்தான் ''நாடோடிகள்'' என்ற மற்ெருரு நெடுங் கவிதையையும், அவரது புகழ்மிக்க கவிதை நாவலான ''யூஜின் ஒனிகி''னையும் எழுதத் தொடங்கினர். இந்தக் கவிதை நாவல் 8 ஆண்டுகளுக்குப் பிறகு பூர்த்தியாயிற்று. இக் கவிதைகள் மக்களிடம் அடைந்த பெரும் புகழாலும், அகதி வாழ்வின்போது போது மேலும் உறுதிப்பெற்று விட்ட கவிஞரின் புரட்சிக் கருத்துக்களாலும் முதலாம் அலக்ஸாந்தர் பெரும் திகிலடைந்தார். 1824-ம் ஆண்டு கோடையில் மிகைலோவ்ஸ்கோயே என்ற கிராமத்திலுள்ள தனது பெற்றோர்களின் வீட்டிற்கு புஷ்கின் திரும்ப வேண்டும் என்று ஜார் மன்னர் கட்டளை பிறப்பித்தார். மேலும் அவர் அந்தக் கிராமத்தைவிட்டு வெளியே போகக் கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டது.

யதார்த்தக் கவி

மிகைலோவ்ஸ்கோயே கிராமத்தில் அடைபட்டுக்கிடந்த ஆண்டுகளில்தான், கவிஞர் யதார்த்த வாதப் பாதையை மேற்கொள்ளத் தொடங்கினர். அவரே தன்னைப்பற்றி கூறிக்கொண்டது போல், இங்கேதான் புஷ்கின் ''யதார்த்த கவி'' ஆனர். அவரது தெற்கத்திய கவிதைகளின் அதீதக் கற்பனைச் சித்திரங்களுக்குப் பதில், அக்காலத்தில் அவர்

எழுதிய கவிதைகளில் ரஷ்ய வாழ்க்கையின் உண்மைக் காட்சிகளும், யதார்த்தத்தின் வழி வந்த விரிவான கருத்துக்களும் இடம் பெறலாயின. இதற்குக் குறிப்பிடத் தக்கதாக அமைந்துள்ளது அவரது ''நாடோடிகளாகும்''. இந்நெடுங் கவிதை மிகைலோவ்ஸ்கோயேவில் தான் பூர்த்தியாயிற்று. தனித்து நிற்கும் தனி நபரை கதாநாயகனுக வழிபடும் அந்தக் கற்பனைப் போக்கை, இக்கவிதை தகர்த்தெரிந்தது. இதே காலத்தில் ''யூஜின் ஒனிகினே'' தொடர்ந்து எழுதி வந்தார். இதன்றி ஷேக்ஸ்பியர் நாடகத்தின் ஆற்றலுக்கு ஈடான ''போரில் கோதுனேவ்'' என்ற மகத்தான சோக நாடகத்தையும் இயற்றினர், இந்நாடக நூல், ரஷ்ய சரித்திர நாடக வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகும். இதில், வரலாற்றை உருவாக்குவதில் மக்களின் பங்கை புஷ்கின் வெகுஅழகாகச் சித்தரித்திருக்கிறார்.

மிகைலோவ்ஸ்கோயேவில் அவர் வசித்து வந்தபோதுதான், செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில், செனட் சதுக்கத்தில் எழுந்த டிசம்பரிஸ்ட்டுகளின் எழுச்சி நடைபெற்றது. கலகக்காரர்களுக்கு புதிய ஜார் மன்னர் முதலாவது நிகொலஸ் விதித்த கொடிய தண்டனைகள் குறித்து கவிஞர் மனம் புழுங்கினர். ''தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டவர்கள் தூக்கிலிடப்பட்டனர். ஆனல், 120 நண்பர்களுக்கு சகோதரர்களுக்கு, தோழர்களுக்கு ஜீவாந்தர சிட்சை? கொடுமையிலும் கொடுமை இது!'' என்று அவர் எழுதினர். இதற்குப் பிற்பட்ட ஆண்டுகளில்பிற்போக்கானவர்கள்வெறியாட்டம் ஆடியபோதுகூட, புஷ்கின் ஒரு சிறிதும் தடம் புரளவில்லை! டிசம்பரிஸ்டுக் கருத்துக்களுக்கு விசுவாசமுடையவராகவே இருந்தார். ''சைபீரியாவிற்கு'', ''அரியன்'', ''அக்டோபர் 19'' போன்ற பல கவிதைகளில் அவர் துணிச்சலுடன் புரட்சிக்காரர்களுக்குப் புகழ் பாடினர். அவர்களுடன் தனக்குள்ள பந்தம் அழிக்க முடியாது என்றும், அவர்களது இலட்சியம் இறுதியில் கொள்வது எண்ணம் என்றும் அவர் எழுதினர்:

'' இரும்பு விலங்குகள் முறிந்திடும்,
இருள் கோட்டங்கள் சரிந்திடும்!
சுதந்திர தேவி தலைவாயிலிலே,
வரவேற்றிடுவாள் உன்னையே;
மீளும் உமது உடைவாளே,
உடன் பிறந்தோர் உதவியாலே.''

''யூஜின் ஒனிகினி''
புஷ்கினுடைய சிறந்த படைப்பு.

1830ல் அவர் ''யூஜின் ஒனிகினே'' பூர்த்தி செய்தார். வி. பெலின்ஸ்கி இதை ''ரஷ்ய வாழ்க்கையின் கலைக் களஞ்சியம்'' என்று வருணித்தது முற்றிலும் நியாயமாகும். இந்நூலில் பிரபுத்துவ வர்க்கப் பிரதிநிதிகள் வாழ்க்கையையும் போக்குகளையும் கேலி செய்கிறார்; இத்துடன் முற்போக்கான இளம் கதாபாத்திரங்கள் பலவற்றையும் உருவாக்கியுள்ளார். யதார்த்தபூர்வமான நாவலின் பொற்காலத்தைத் தொடக்கி வைத்தது இந்நூலேயாகும். அப்போது ஆரம்பமான யார்த்தபூர்வ நாவலின் சிறந்த விற்பன்னர்கள் தான் புகழ்மிக்க லெர்மாண்தோவும், கோன்சரோவும், துர்கினேவும், லியோ டால்ஸ்டாயும் மற்றும் பல ரஷ்ய எழுத்தாளர்களும் ஆவர்.

இதே காலத்தில் புஷ்கின் ஏராளமான நெடுங் கவிதைகளையும் கதைகளையும் எழுதினார். "போதோவா" என்ற நெடுங் கவிதையில் முதலாவது பீட்டரையும், அவரது காலத்தையும் மிகுந்த அழகுறச் சித்தரிக்கிறார். இதே கருப்பொருளுடைய "புரோன்ஸ் ரைடர்" அவரது மிகச் சிறந்த கவிதைகளில் ஒன்கக் கருதப்படுகிறது.

இதே காலத்திலேயே "விருந்தாளிக் கல்", "மொஜார்டும் சலிரியும்" போன்ற பல "குட்டி சோக நாடகங்கள்" எழுதினார். இவற்றின்மூலம் அவர் நாடக ஆசிரியர் என்ற முறையில் உலகப் புகழ் பெற்றார். பிறகு அவர் வசன நூல்களுக்குத் திரும்பிய போது இலக்கியச் சுவைமிக்க பல குறு நாவல்களை எழுதினார். அவற்றில் "பெல்லினுடைய கதைகள்" "கோருகின் கிராமத்தின் கதை" இவ்விரண்டும் அடிமை முறைக்கு எதிரான முழக்கமாகவும், "துப்ரோவ்ஸ்கி", "காப்டன் மகள்", "இஸ்பேட் இராணி" முதலியவை சிறந்த சமூகச் சித்திரங்களாகவும் திகழ்கின்றன. புஷ்கினுடைய வசன நடை, ரஷ்ய இலக்கியம் ஜனரஞ்சகமாக உருவாவதற்கு உதவியது. புஷ்கினுடைய நாவல்கள்பற்றிக் குறிப்பிடுகையில் "அவற்றை ஒவ்வொரு எழுத்தாளனும் மீண்டும் படிக்கவேண்டும்" என்று டால்ஸ்டாய் எழுதினார்.

சோகமிக்க முடிவு

புஷ்கினின் புகழ் உச்ச நிலையில் இருந்தபோது, உத்வேகமூட்டும் புதிய கருத்துக்கள் அவரது சிந்தையிலே நிறைந்து வழிந்து கொண்டிருந்தபோது, அவரது வாழ்க்கை துயரமிக்க வகையில் முடிவுற்றது. ஜார் மன்னரின் அரண்மனை அதிகாரிகளின் கீழ்த்தரமான சூழ்ச்சிகளின் விளைவாக டான்தே என்ற இராணுவ அதிகாரியுடன் புஷ்கின் கத்திச் சண்டை நடத்தும்படித் தூண்டப்பட்டார். இதில் படுகாயமுற்ற அவர் 1837 பிப்ரவரி 10-ம் தேதி மணரமடைந்தார். ரஷ்ய நாடே, இத்துயரம் தாளாது விம்மியது.

இறவாத புகழ்

புஷ்கின் மேதாவிலாசமிக்க எழுத்தாளரும் கவிஞரும் மட்டுமல்ல; மாபெரும் மனிதாபிமானியும் ஆவார். சுதந்திரத்திற்காகவும் மக்களின் விழிப்பிற்காகவும் சமுதாய நீதிக்காகவும் அவர் போராடினார். அவரது பெயர் உலகக் கலாச்சாரத்தின் வரலாற்றில் அழியாத இடம் பெற்றுவிட்டது. இன, வர்ண பேதமின்றி எல்லா முற்போக்காளர்களின் உள்ளத்திலும் அவரது பெயர் குடிகொண்டுள்ளது.

ஏன் சிரித்தான்?

ஒரு குற்றவாளிக்கு ஆறு வருடத் தண்டனை கொடுக்கப்பட்டது. தீர்ப்பைக் கேட்டு, குற்றவாளி விழுந்து விழுந்து சிரித்தான், காரணம் கேட்டதற்கு அவன் சொன்னான்:

"நான் இன்னும் ஆறுமாதங்கள்தான் உயிருடன் இருப்பேன் என்று டாக்டர் சொன்னார், அதனால்தான் சிரித்தேன்!"

யார் பிச்சைக்காரன்?

[முருகு சுந்தரம்]

ஒட்டுவைத்த கந்தலுடை; பாழ்ங்கி ணற்றை
ஒப்புவைத்த குழிக்கண்கள்; எலும்பும் தோலும்
கட்டிவைத்த மெலிந்தவுடல், இவற்றைத் தாங்கிக்
'கந்தர்வ பவனு'க்கு முன்னால் நின்று
பொட்டுவைத்த சங்கீத வித்வான் போலப்
புதுமைவைத்து அழகுவைத்துக் குயிலும் யாழும்
விட்டுவைத்த இசையினிமை யெல்லாம் கூட்டி
வீதியிலே பாடிநின்றான் பிச்சைக் காரன்.

மொட்டுவைத்த இருவாட்சிச் சரத்தைச் சூடி
முகத்துக்கு அரிதாரம் அப்பி, மேனி
விட்டுவிட்டுத் தெரிகின்ற சேலை கட்டி
வெளிவந்தாள் இளநடிகை; காலில் நீண்ட
சட்டையிட்ட பெருங்கட்சித் தலைவர் வந்தார்
சங்கொலிக்கும் ஆலைமுத லாளி வந்தார்
பட்டணத்தில் புகழ்பெற்ற சமூகத் தொண்டர்
பண்டிதர்கள் பற்பலரும் அங்கே வந்தார்.

"பிச்சையினைச் சட்டத்தால் தடுக்க வேண்டும்
பிடித்திழுத்துச் சிறையிலே தள்ள வேண்டும்
எச்சிலிலை நாய்கள்" ளென்று காரித் துப்பி
ஏசிநின்றார் பெருங்கட்சித் தலைவர்! காரில்
பச்சைநிற மயில்போலக் கழுத்தைச் சாய்த்துப்
பாய்ந்திட்டாள் இளநடிகை; அவளின் மீது
இச்சைகொள் முதலாளி முறைத்துப் பார்த்தார்
"ஏற்பதுதான் இகழ்ச்சி!" என்று புலவர் சொன்னார்.

கந்தலுடை அணிந்திருந்த பிச்சைக் காரன்
கலகலெனச் சிரித்திட்டான்; "நடிகை வீட்டில்
பொந்திலுள்ள ஆந்தைபோல் காதல் பிச்சை
போடென்று கேட்பவனும், நிதிதி ரட்டச்
சந்தியிலே நிற்பவனும், செல்வர் மீது
சந்தப்பா பாடிவைத்து ஈயென் போனும்
வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சும் சொற்கள் பேசி
விரட்டுகின்றார்! சொல்வீர்யார் பிச்சைக் காரன்?

நூறென்று பொருள்கொடுத்து இசைக்கச் சேரி
நொடிக்குநொடி கேட்கின்றீர்! உம்மை யொன்று
கூறென்று கேட்கின்றேன்: நானும் பாடிக்
கொடுவென்று கேட்பதனால் என்ன குற்றம்?
பாரொன்று கூறுகிறேன்; பிச்சை யல்ல!
பாடகன்நான்! இசைப்புலவன்! கலைஞன்! பாணன்!
மாறத்தான் வேண்டுமென்றால், பிச்சை நீங்க
மக்கள்வாழ் அடிப்படைதான் மாற வேண்டும்!"

எது சரி?

என்றன் - எந்தன்

எனது என்னுடைய என்ற கருத்தை உணர்த்த எந்தன் என்ற சொல்லைப் பலர் பயன் படுத்துகின்றனர். இச்சொல் தமிழ் மரபுக்கு ஒவ்வாத-பிழை யான சொல் ஆகும். எந்தன் என்ற சொல் எம்+தன் என வரும். சொல் முதலில் பன்மை யும் இறுதியில் ஒருமையும் சேர்த்து எழுதுவது சரியல்ல. எனவே, எம்முடைய என்பதை உணர்த்த எந்தம் என்ற சொல்லை யும், என்னுடைய என்பதை உணர்த்த என்றன் என்ற சொல்லையும் பயன் படுத்துவதே சரியானது.

தந்நலம் - தன்னலம்

இவ்விரு சொற்களும் பொரு ளில்வேறுபாடுஇல்லாததுபோலத் தோன்றினும் இரண்டிற்கு முள்ள வேறுபாட்டை புரிந்து கொள்ளுவது நல்லது. ஒருமை யில் தன்னுடைய நலம் என்று குறிப்பிடும்போது தன்னலம் என்றும், தம்முடைய நலம் என்று குறிப்பிட தந்நலம் என் றுமே எழுதவேண்டும். தன்னலம் ஒருமை; தந்நலம் பன்மை.

அக்கறை - அக்கரை

அக்கறை-அக்கரை என்ற இரு வேறு சொற்களையும் பொருஅ வேறுபாடு புரியாமல் பயன் படுத்துதல் தவறு. ஈடுபாடு, விழிப்பு, கவனம் எனும் பொரு ளில் வரும்போது அக்கறை என் றும், அந்தக் கரை என்று சுட்டுப் பொருளில் வரும்போது அக்கரை என்றுமே எழுதவேண்டும்.

தண்ணீர் - வெந்நீர்

கொஞ்சம் தண்ணீர் கொடுங் கள் என்று கேட்டால், 'சுடு தண் ணீரா, பச்சைத் (குளிர்ந்த) தண் ணீரா' என்று கேட்பவரைக் காண் கிறோம். தண்ணீர் என்றாலே குளிர்ந்த நீர் என்றுதான் பொருள். எனவே, குளிர்ந்த தண்ணீர் என்றோ பச்சைத் தண் ணீர் என்றோ குறிப்பிட வேண் டியதில்லை. அடுத்து, வெந்நீர் என்றாலே வெம்மை+நீர், சுடுநீர் என்றுதான் பொருள்படும். எனவே, தண்ணீர் வேண்டுமா? வெந்நீர் வேண்டுமா என்று கேட் டாலே போதும்.

மனம்

மனம் என்ற சொல்லை மனசு என்றும், மனது என்றும் பலர் பிழையாகப் பயன்படுத்துகின்ற னர்; 'மனஸ்' என்று எழுது வோரும் உண்டு. மனம் என்பது தூய தமிழ்ச் சொல். அது வேற் றுமை உருபு பெற்று வரும்போது மனத்தை - மனத்தால் - மனத் திற்கு - மனத்தின் - மனத்தினது மனத்தின்கண் என்றே வரும்.

ஏழைமை

ஏழை என்ற சொல் சாதாரண மாகப் புழக்கத்தில் உள்ள ஒரு

சொல். ஏழைத் தன்மையை உணர்த்த எழுந்த ஒரு சொல்லாக ஏழ்மை என்ற தவருன சொல்லைப் பலர் பயன்படுத்துகின்றனர். ஏழைத் தன்மையை உணர்த்த, ஏழைமை என்றே வழங்கவேண்டும். எடுத்துக் காட்டாக பிள்ளைமை-தாய்மை—பெண்மை என்பனவற்றைக் குறிக்கலாம்.

எது பிழை?

கோவை

அவர் பேசும்போது சொற்கள் கோர்வையாக வந்தன; இவை அவரது கருத்துக் கோர்வை என்றெல்லாம் பலர் வழங்கக் காண்கிருேம். கோர்வை என்பது பிழை. கோவை என்பதே சரி. நான்மணிக் கோவை - செய்யுட் கோவை என்பனவற்றை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

ஆற்ருேரம் - சுவரோரம்

ஆறு ஓரம் என்ற இரு சொற்கள் இணைந்து வரும்போது அதை ஆருேரம் என்று எழுதுவது பிழை. ஆற்ருேரம் என்றே எழுத வேண்டும். சுவர் ஓரம் என்ற இரு சொற்கள் இணைந்து வரும்போது சுவரோரம் என்றே எழுத வேண்டும். சுவற்ருேரம் என்று குறிப்பது பிழை.

முதலில் வரும் சொல் வல்லெழுத்தில் முடிந்தாலும் அடுத்து வரும் சொல் வினைச் சொல்லாகவே வினைமுற்ருகவே இருந்தால் ஒற்று மிகுந்தோ வலிந்தோ வராது. எடுத்துக் காட்டாக நீறு அணிந்தான் என்ற இரு சொல் இணையும்போது நீறணிந்தான் என்று வருவதைக் குறிப்பிடலாம்.

அருவி

வெள்ளையர்கள் இந்நாட்டிற்கு வந்து, முருங்கைக் காயைக் கண்டனர். (**Drum stick**) 'மேளம் அடிக்கும் குச்சி' என்றனர். வெண்டைக்காயைப் பார்த்தனர். (**'Lady's Finger'**) 'பெண் விரல்' என்றனர். ஆனுலும் நாம் அவர்களது ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ் மொழி பெயர்ப்பைக் கையாளவில்லை. ஆனுல் மேலிருந்து விழும் நீரைப் பார்த்ததும் (**Water Falls**) நீர் வீழ்ச்சி என்றனர். துரதிருஷ்டவசமாக நாமும் அந்த 'வீழ்ச்சி'யையே கையாளத் தொடங்கிவிட்டோம். இலக்கியங்களில் எல்லாம் 'அருவி' என்ற சொல்லே வருகிறது. எடுத்துக் காட்டாக. 'ஓங்குவீழ் வெள் அருவி' என்ற புறப்பாடல் வரியைக் கொள்ளலாம்.

அவற்கு - அவர்க்கு

அவற்கு - அவர்க்கு என்ற இவ்விரு சொற்களுக்கும் உள்ள பொருள் வேறுபாட்டைப் புரிந்து கொள்வது நல்லது. 'அவனுக்கு' என்பதைக் குறிப்பிட ''அவற்கு'' என்ற சொல்லையும், 'அவருக்கு' என்பதைக் குறிப்பிட 'அவர்க்கு' என்ற சொல்லையும் பயன்படுத்து

வதே சரியான மரபாகும். இது போலவே மரியாதை ஒருமையாகவோ பன்மையாகவோ, 'ஆசிரியர்க்கு' எனக் குறிப்பிட நேரும்போது, 'ஆசிரியர்க்கு' என்றும், ஒருமையாக 'ஆசிரியனுக்கு' என்று குறிப்பிட நேரும்போது 'ஆசிரியற்கு' என்றும்தான் எழுத வேண்டும்.

பசுப்பால்

பசுவினது பால் என்பதை 'பசுவின் பால்' என்றும், 'பசும் பால்' என்றுமே எழுதி வருகின்றோம்; சொல்லும்போதும் 'பசும்பால்' என்றுதான் சொல்லுகிறோம். ஆனால் அது சரியல்ல. 'பசும்பால்' என்பதைப் பிரித்து எழுதினால் 'பசுமைப் பால்' என்றேதான் வரும். அது பசுமையான பால் என்பதையே குறிக்கும். எனவே, 'பசுவின் பால்' என்பதை உணர்த்த 'பசுப்பால்' என்று குறிப்பிடுவதே சரியானது.

மடத்துத் தலைவர்

'மடத்தின் தலைவர்' என்பதை 'மடத் தலைவர்' என்று பிழையாக எழுதியும், பேசியும் வருகிறவர்கள் பலர் உண்டு. மடம் தலைவர் என்பது இணைந்து வரும்போது இடையே 'அத்து' என்னும் சாரியை பெற்று 'மடத்துத் தலைவர்' என்றே வரும். அது தான் சரியானது.

பிரிட்டிஷ் டாக்டரின் அற்புதச் சாதனை

குட்டைக்காலும் கூனலுமுள்ள ஓர் சிறுமியை அறுவை வைத்தியத்தின் மூலம் நிமிர்ந்து நடக்கச் செய்துவிட்டார் பிரிட்டனைச் சேர்ந்த டாக்டர் ராபர்ட் ரோஃப்.

ஆறு வயதுள்ள சிறுமி ஆன் ஸிடால், இப்போது ஓடவும் தாவவும் கற்றுக்கொள்கிறாள். இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு, அவளுடைய முதுகில் கூனல் விழுந்திருந்தது. வலது கால் இடது காலைவிட ஆறு அங்குலம் குட்டையாக இருந்தது. ஆஸ்வெஸ்டரி (மேற்கு இங்கிலாந்து) நகரத்திலுள்ள ராபர்ட் ஜோன்ஸ் அன்டு ஏக்னஸ் ஹண்ட் ஆர்தோபீடிக் ஹாஸ்பிடலைச் சேர்ந்த டாக்டர் ராபர்ட் ரோஃப், அவளைச் சோதித்துப் பார்த்தார். அவளுக்கு நிமிர்ந்த நடை வழங்கிவிடமுடியும் என்ற நம்பிக்கையில் சிகிச்சையைத் தொடங்கினார். வெள்ளைக்களிமண் கவசமிட்டு அவளைப் படுக்கையில் கிடத்திவைத்தார். பல மாத காலம் அவள் அப்படி இருக்க நேர்ந்தது. ஓராண்டுக்கு முன்பு டாக்டர் ராபர்ட் ரோஃப் அவளுடைய முதுகு எலும்புகளைச் சோதித்து அறுவைச் சிகிச்சை மூலம் ஒவ்வொன்றாகப் புதுப்பிக்கத் தொடங்கினார். வைத்தியசாலையிலுள்ள 'எலும்பு சேமிப்பு' நிலையத்திலிருந்து முதுகுத்தண்டு எலும்புகளை ஒவ்வொன்றாகப்பெற்று, அவற்றை ஆன் உடம்பில் பொருத்தினார். இப்போது அவள் காலில் சப்பாணிச் செருப்பு இருக்கிறது, அவள் நிமிர்ந்து நடக்கிறாள்.

இன்று, ஒரேஒரு எலும்பைத் தவிர அவளுடைய முதுகிலுள்ள எலும்புகள் அனைத்தும் வேற்றுடலிலிருந்து எடுத்துப் பொருத்தியவை. அந்த ஓர் எலும்பையும் அகற்றிப் புதியது ஒன்றைப் பொருத்திவிட்டால் சிகிச்சை முடிந்துவிடும். அப்போது அவள் சப்பாணிச் செருப்பை அகற்றிவிட்டு மற்றக் குழந்தைகளைப் போல 'ஆடி ஓடி' விளையாடமுடியும்.

காதலெனும் கோயில்

கௌசல்யா

'காதல்...காதல்...காதல்!'

அப்பப்பா, இந்தக் காதலுக்குத் தான் எத்துணை சக்தி? ஆண்டவன் மனித இனத்தைத்தான் படைத்தான்; அதனூடே இந்தக் காதலென்னும் மூன்றெழுத்து மந்திரத்தையும் ஏன் படைத்தானோ? இதனால் எண்ணிறந்த மங்கையர் கூட்டம் எப்படி எப்படியெல்லாமோ அல்லல்பட்டு அவதியுற்று இருக்கிறதே! ஆனாலும், அதில் வெற்றிப் பெற்று வாழ்க்கைப்படகை செம்மையாக ஓட்டிய பெண்களும் இல்லாமலில்லை.

காதல் என்னும் வார்த்தையை நம்பி, இளமை என்ற விருட்சத்தைக் கருகிய மலராக ஆக்கிக் கொண்ட பெண்கள் ஏராளம்தாம்! அந்த வரிசையில் நானும் ஒருத்தியாகப் பதிந்திருப்பேன்!

வெளியே வராந்தாவில் என் கணவரும் காலையில்தான் விருந்தாளியாக வந்திருந்த மூர்த்தியும் சுவாரஸ்யமாக ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர். இந்நிகழ்ச்சியை மறுபுறமாக கவனித்துக்கொண்டிருந்த எனக்குச் சிறிது துணுக்குறத்தான் செய்தது. காரணம் விருந்தாளியாக வந்திருந்த மூர்த்தியைப் பற்றிய வாழ்க்கைப்படத்தின் இறுதிக்கட்டம் வரை—அதுவும் என் மூலமாக அறிந்திருந்த என் கணவர் அவருடன் அப்படிக் குதூகலமாகபேசிக்கொண்டிருக்கிறாரென்றால் நான் வேறு என்ன கூற இருக்கிறது?

அப்போது எனக்குப் பதினைந்து வயதிருக்கும். பெண்களின் பருவப் பேறு என்னிடம் பவித்திரமாகக்குடி கொண்டிருந்த காலம். பெற்றோரும் மற்றோரும் பார்த்து வியப்புறும்படியான அழகுக்கோலம், அளவுக்கு மீறியே என்னிடம்அமைந்திருந்தது. பெண்களே பார்த்துப் பெருமைப் படும்படியான பொலிவு என்னிடம் இருந்ததென்றால் பின்னர் ஆண்களின் ஆரவாரத் தன்மையை எடுத்துரைக்கவா வேண்டும்?

ஒரு நாள் தியாகராய நகருக்குச் சென்று பஸ்ஸில் திரும்பிக்கொண்டிருந்தேன். பஸ்ஸில் நெரிச்சல் தாங்க்முடியாத அளவுக்குக்கூட்டம் வழிந்துகொண்டிருந்தது. ஒரு மூலையில் அமர்ந்தவாறு அந்த நிலையிலும் கதைபுத்தகமொன்றை வைத்துப் படித்துக்கொண்டிருந்தேன். நான் பஸ்ஸில் ஏறியதிலிருந்தே என்னை

கோவி. இளங்கோவன்

விழுங்கிவிடுவதைப்போல பார்த்துக்கொண்டிருந்தது—ஒரு ஆண் ஜோடி. ஆண் இனத்தில் சிலருக்கு இது ஒரு தனிக்கலையாக ஆகிவிட்டிருந்தபடியால் அந்தக் கண்களுக்குரிய நபரை நான் என்னவென்று கண்டிப்பது?

“என்னம்மா தாயே! செருப்பைத் தான் போட்டுண்டு வர்றீங்க! அதை மற்றவங்கமேலே பிரயோகம் செய்யறதுக்காகத்தான் உபயோகப்படுத்திறீங்களா?”

நான் திடுக்கிட்டேன் என்பக்கத்திலிருந்த ஒரு வயதான அம்மாள் தான் என்னைப் பார்த்து அப்படிக் கேட்டாள். உண்மையிலேயே என் கால்களின் செருப்புகள் அந்த அம்மாளின் பாதங்களை நன்ருகப் பதம் பார்த்துவிட்டிருந்தன.

நான் அந்த அம்மாளிடம் மன்னிப்புக் கேட்க வாய்த் திறப்பதற்குள் என்னையே வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்த அந்தக் கண்களுக்குரிய உருவம் “ப்பாட்டி! இன்னைக்கு நீங்க சொல்லீட்டீங்க இல்லே! நாளையிலிருந்து கண்டிப்பா செருப்பு அணியா விரதம் நடத்துவாங்க! கோவிச்சிக்காதீங்க?” என்று குறும்பாகக் கூறியது.

மறுகணம் பஸ்ஸில் ‘கலகல’ வென்ற சிரிப்பொலி பலவித கோணத்திலிருந்து எழுந்து அடங்கியது. எனக்கு ஒரே அவமானமாய் போய்விட்டது. வெளிறிய முகமுடன் மௌண்ட் ரோடில் இறங்க வேண்டிய நான் இதற்காக ஆயிரம் விளக்கிலேயே இறங்கிவிட்டேன். என்னை அந்த நிலைக்கு ஆளாக்கிய பேர்வழியை உள்ளூரச் சபித்தவாறே நடந்தேன். அந்த நபர் மூர்த்திதான்!

இது நடந்து ஒருவார காலமிருக்கும்.

பஸ்ஸில் பலபேரின் ஏளனத்திற்கு என்னை ஆளாக்கிய மூர்த்தி எங்கள் தெருவில் கோடிவீட்டில்தான் குடியிருக்கிருர் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது. அதன் பிறகு கேட்கவா வேண்டும்? உள்ளத்தில் அழுந்தியிருந்த ஆத்திரத்தைப் பொறுமிக்கொட்ட நான் ஒருவளாக அவருடைய வீட்டின்மீது படையெடுத்தேன். அதன் விளைவு? மூர்த்தியின் வயதான தாய்க்கு நான் அன்புக்குரியவளாக ஆகிவிட்டபரிதாபம் தான்!

என்னுடைய பொறுமிய குற்றச் சாட்டுகளைக் கேட்ட அந்தப் பாட்டி எப்படியோ நயமாகப்பேசி என்னைத் தன் பக்கம் வசப்படுத்திக்கொண்டாள். அதன் பிறகு அடிக்கடி மூர்த்தி இல்லாத சமயங்களில் பாட்டியிடம் சென்று பல விஷயங்களைப்பற்றி பேசுவேன். அவையெல்லாம் அந்தக் காலத்து புராணக்கதைகளைப் பற்றியே இருக்கும்.

இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்தும் பாட்டியிடம் போவதை மட்டும் நிறுத்தவில்லை. தினம் தினம் செல்வேன். பிறகு அதுமாறி மூர்த்தி இருக்கும் நேரங்களிலும் போகத் தலைப்பட்டேன். நான்போக மறுத்தாலும் என் மனம் போவதற்குத் துரிதப்படுத்தியது.

நானும், மூர்த்தியும் மறைமுகமாகப் பேசத் தலைப்பட்டோம். வெகு நேரம்வரை அவர் வீட்டிலேயே இருந்து பேசிவிட்டுத் திரும்புவேன்.

நாளடைவில் எங்கள் உறவைப் பற்றி ஊரில் பலவித பெரிய பேச்சுக்கள் அடிப்பட்டுத் திரிந்தன. அப்படிக் கூறி ஒழிந்தாலும் பரவாயில்லையே! அவர்கள் எல்லாரும் மூர்த்தியைப்பற்றியல்லவா கேட்கமுடியாத வார்த்தைகள் கூறி காதைமட்டுமல்லாமல் உடலையும் கூசச் செய்தார்கள். புற உலகை வெளுப்பாகப் பார்த்துப் பழகிப்போன என் மனம் அதையெல்லாம் புரிந்துகொள்ள சக்தியில்லாமல் இருந்தது.

“கௌசல்யா! உன்னுடன் பழகிய தோழிகள் என்ற முறையில் உரிமையுடன் கூறுகிறேம்! உன்னுடைய எதிர்கால உலகம் ஊறின்றிச் செல்ல

வேண்டுமென்று நீ விரும்பினல் மூர்த்தியை மறந்துவிடவேண்டும். இவையெல்லாம் உன்னுடைய வாழ்க்கை வளம்பெறத்தான் கூறுகிருேமே தவிர, இதை வேறுவிதமாக நீ நினைத்துக்கொள்ளாதே!''

''மூர்த்தி உன்னை உண்மையாக காதலிக்கிருர் என்று நம்புகிருயா? அவ்வளவும் வெளிவேஷம். நாங்கள் கூறுவது உனக்குப் பிடிக்கவில்லை

''கௌசல்! நம் திருமணம் நடைபெறவேண்டும் என்று நான் எவ்வளவு ஆசையோடு காத்துக்கொண்டிருக்கிறேன் தெரியுமா? உன்னை மருமகளாக வரவேற்பதற்கு என் அம்மா தயார்தான். ஆனல், என்னை மருமகனுகக்கொள்வதற்கு உன்னைப் பெற்றவர்களின் சம்மதம் வேண்டுமல்லவா?''

மூர்த்தி இவ்வாறு கருணை

யென்ருல் போகப்போக நீயே தெரிந்துகொள்வாய். மூர்த்தி ஒரு காமுகன்.

'என்னை அன்பொழுக நேசிக்கும் மூர்த்தியா காமுகன்? இவர்கள் கூறுவதெல்லாம் கட்டுக்கதை. அழகான ஒரு வாலிபரைநான்காதலிக்கிறேன் என்பதற்காக பொருமைக்கொண்ட இவர்கள் செய்யும் சூழ்ச்சி இது' என்று வெதும்பி அலறினேன்.

ததும்ப கூறினர். அப்போது, இந்தப் புனிதரையா இந்த உலகம் பழித்து கூறுகிறது?' என்று உலகத்தாரைப் பழித்துக்கொண்டேன்.

என்னுடைய பெற்ருேர்களின் சம்மதத்தை எப்படியோ சிரமம் கொண்டு பெற்றுவிட்டேன். இன்னும் இரண்டு வாரங்களில் எனக்கும் மூர்த்திக்கும் திருமணம் நடக்கப் போகிறது. அந்தப் பொன்னுன

விழுங்கிவிடுவதைப்போல பார்த்துக்கொண்டிருந்தது—ஒரு ஆண் ஜோடி. ஆண் இனத்தில் சிலருக்கு இது ஒரு தனிக்கலையாக ஆகிவிட்டிருந்தபடியால் அந்தக் கண்களுக்குரிய நபரை நான் என்னவென்று கண்டிப்பது?

“என்னம்மா தாயே! செருப்பைத் தான் போட்டுண்டு வர்றீங்க! அதை மற்றவங்கமேலே பிரயோகம் செய்யறதுக்காகத்தான் உபயோகப்படுத்திறீங்களா?”

நான் திடுக்கிட்டேன் என்பக்கத்திலிருந்த ஒரு வயதான அம்மாள் தான் என்னைப் பார்த்து அப்படிக் கேட்டாள். உண்மையிலேயே என் கால்களின் செருப்புகள் அந்த அம்மாளின் பாதங்களை நன்ருகப் பதம் பார்த்துவிட்டிருந்தன.

நான் அந்த அம்மாளிடம் மன்னிப்புக் கேட்க வாய்த் திறப்பதற்குள் என்னையே வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்த அந்தக் கண்களுக்குரிய உருவம் “ப்பாட்டி! இன்னைக்கு நீங்க சொல்லீட்டீங்க இல்லே! நாளையிலிருந்து கண்டிப்பா செருப்பு அணியா விரதம் நடத்துவாங்க! கோவிச்சிக்காதீங்க?” என்று குறும்பாகக் கூறியது.

மறுகணம் பஸ்ஸில் ‘கலகல’ வென்ற சிரிப்பொலி பலவித கோணத்திலிருந்து எழுந்து அடங்கியது. எனக்கு ஒரே அவமானமாய் போய்விட்டது. வெளிறிய முகமுடன் மௌண்ட் ரோடில் இறங்க வேண்டிய நான் இதற்காக ஆயிரம் விளக்கிலேயே இறங்கிவிட்டேன். என்னை அந்த நிலைக்கு ஆளாக்கிய பேர்வழியை உள்ளூரச் சபித்தவாறே நடந்தேன். அந்த நபர் மூர்த்திதான்!

இது நடந்து ஒருவார காலமிருக்கும்.

பஸ்ஸில் பலபேரின் ஏளனத்திற்கு என்னை ஆளாக்கிய மூர்த்தி எங்கள் தெருவில் கோடிவீட்டில்தான் குடியிருக்கிறுர் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது. அதன் பிறகு கேட்கவா வேண்டும்? உள்ளத்தில் அழுந்தியிருந்த ஆத்திரத்தைப் பொறுமிக்கொட்ட நான் ஒருவளாக அவருடைய வீட்டின்மீது படையெடுத்தேன். அதன் விளைவு? மூர்த்தியின் வயதான தாய்க்கு நான் அன்புக்குரியவளாக ஆகிவிட்டபரிதாபம் தான்!

என்னுடைய பொறுமிய குற்றச் சாட்டுகளைக் கேட்ட அந்தப் பாட்டி எப்படியோ நயமாகப்பேசி என்னைத் தன் பக்கம் வசப்படுத்திக்கொண்டாள். அதன் பிறகு அடிக்கடி மூர்த்தி இல்லாத சமயங்களில் பாட்டியிடம் சென்று பல விஷயங்களைப்பற்றி பேசுவேன். அவையெல்லாம் அந்தக் காலத்து புராணக்கதைகளைப் பற்றியே இருக்கும்.

இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்தும் பாட்டியிடம் போவதை மட்டும் நிறுத்தவில்லை. தினம் தினம் செல்வேன். பிறகு அதுமாறி மூர்த்தி இருக்கும் நேரங்களிலும் போகத் தலைப்பட்டேன். நான்போக மறுத்தாலும் என் மனம் போவதற்குத் துரிதப்படுத்தியது.

நானும், மூர்த்தியும் மறைமுகமாகப் பேசத் தலைப்பட்டோம். வெகு நேரம்வரை அவர் வீட்டிலேயே இருந்து பேசிவிட்டுத் திரும்புவேன்.

நாளடைவில் எங்கள் உறவைப் பற்றி ஊரில் பலவித பெரிய பேச்சுக்கள் அடிப்பட்டுத் திரிந்தன. அப்படிக் கூறி ஒழிந்தாலும் பரவாயில்லையே! அவர்கள் எல்லாரும் மூர்த்தியைப்பற்றியல்லவா கேட்கமுடியாத வார்த்தைகள் கூறி காதைமட்டுமல்லாமல் உடலையும் கூசச் செய்தார்கள். புற உலகை வெளுப்பாகப் பார்த்துப் பழகிப்போன என் மனம் அதையெல்லாம் புரிந்துகொள்ள சக்தியில்லாமல் இருந்தது.

“கௌசல்யா! உன்னுடன் பழகிய தோழிகள் என்ற முறையில் உரிமையுடன் கூறுகிறோம்! உன்னுடைய எதிர்கால உலகம் ஊறின்றிச் செல்ல

நான் கௌசல்யாவைத் துணிந்து திருமணம் செய்துகொண்டதால், பலர் எதிர்ப்பு தெரிவித்தார்கள் அவள் யாரோ ஒருவனைக்காதலித்து விட்டாளாம். அதற்காகநான்அவளை மணந்துகொள்ளக் கூடாதாம். என்ன விசித்திரமான கற்பனை?

நானும்வாலிபத்தில்ஒருபெண்ணை காதலித்தேன். உள்ளத்தால்மட்டும் அவளோடு உறவாடி வந்த என்னை உலகம் அதைப் பழியான கண் கொண்டு பார்த்து பலவாறு தூற்றியது. அதனால் அவளுடைய பெற்றோர்கள் அவளை வேறொருவனுக்குத் திருமணம் செய்துகொடுத்துவிட்டார்கள். அப்போது நான் பாலைவனத்துத் தனிமரம்போல்நின்றேன் கௌசல்யாவை மூர்த்தி காதலித்தார். ஆனால் அவருடைய நடத்தை சரியில்லாமல் போய்விடவே அவள் என்னை மணந்துகொண்டாள். இப்போது மூர்த்தி தனியாக நிற்கிறார். அதே நேரத்தில் கௌசல்யாவை நான் மணக்கக்கூடாது என்று எண்ணி இருந்தால் நான் முன்பு காதலித்த அந்தப் பெண்ணை மணந்தவனும் மனிதன்தான் என்பதை உணரவேண்டும் அல்லவா?

கௌசல்யாவைகரம்பிடித்தபிறகு ஒரு நாள் அவளே தன்னுடைய வாழ்க்கையின் வேடிக்கைக் கதைகளை ஒன்றுவிடாமல் கூறிவிட்டாள். அதனால் அவளை நான் ஊனப் பார்வைகொண்டு பார்க்கவில்லை. அவளுடைய உண்மையான அந்த உள்ளத்தைக்கண்டு போற்றினேன்.

ஒரு நாள் எங்களைத் தேடி பட்டணத்திற்கு வந்துவிட்டார் மூர்த்தி. அவர்உள்ளேவந்து என்னைப்பார்த்து கரம் கூப்பியபோது நான் கௌசல்யாவைப்பார்த்தேன். அவள் வாய் திறந்து ஒன்றும் பேசாது 'இவர் தான் என் இளமையின் பூகம்பம்' என்று கண்களால் கூறினாள். நான் அன்புகொண்டு வந்தவதைவரவேற்றேன். இருப்பினும் என் மனைவி அவரை வரவேற்காது போகவே அவர் முகம் அந்தக் கணத்தில் களை யிழந்தது.

மூர்த்திஎன்னிடம்பேசிக்கொண்டு வரும்போது, அவர்கௌசல்யாவைக் காதலித்ததும் பின் அவளே அவரை வெறுத்ததுமான எல்லாவற்றையும் மனமுருகக் கூறிவருவார், அதை அவர் கூறிவிட்டதற்காக பின்னால் கௌசல்யாவை இம்சிக்கவேண்டாமென்றும் கேட்டுக்கொண்டார்.

நான் அதைக்கேட்டுச் சிரித்துவிட்டேன்.

''மிஸ்டர் மூர்த்தி! வாழ்க்கையில் தவறு என்பது சாதாரணமாக ஏற்படும் ஒன்று. அது தோன்றுவதும் மறைவதும் மனித குலம் பிறந்ததிலிருந்தே இருந்துவருகிறது. அப்படியிருக்கும்போது உங்களைப்போன்றவர்கள் அதனுள் ஒன்றாகிவிட்டதில் தவறில்லையே! அப்படி வலுக்கட்டாயமாகத் தவறு புரிந்தவர்களை தர்க்க ரீதியாக ஒதுக்கிவைத்துவிட்டால் பின் அவர்கள் எப்போது திருந்துவது? நல்லவர்களாக எப்போது ஆவது?'' என்று கேட்டு மீண்டும் சிரித்தவாறே நெற்றியைச் சுழித்து அவரை நோக்கினேன்.

என்னுடைய ஆழ்ந்த பேச்சு ச்மூர்த்தியை வாயடைக்க செய்தது. இறுதியில் அவர் என்னிடம் என்று கூறி என் சிரிப்பையே போக்கிவிட்டார். அது—

'நன் எப்போதோ திருந்திவிட்டேன் சுந்தர்!'

காதல் இல்லையேல் சாதல்!

நான் இன்னும் சாகாமல் இருக்கிறேன். என் உயிர்தான் இறக்கவில்லையே தவிர உன் மனம் கௌசல்யா எப்போது மாற்றானுக்கு மாலையிட்டாளோ அப்போதே இறந்துவிட்டது.

கௌசல்யா என்னை மனதார

பெண் முடிந்தபோது சிரிப்பாள்; ஆனால் நினைத்த போது அழுவாள்.

உங்களுக்குத் தெரியுமா?

ஓட்டுப்போடச் சென்று; ஓட்டளிக்க முடியாமல் திரும்பி வந்தவர்கள் தொகை ஏராளம் காரணம் ஓட்டுப் பதிவு செய்து மறந்திருந்தது. பதிந்திருந்தாலும் வாக்காளர் குறிப்பில் பதிவாக விடுபட்டுப் போயிருந்தது. நமது உள்நாட்டு அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் அன்னை வோட்டுச் சாவடிக்குச் சென்று தனக்கு வாக்குச் சீட்டு கேட்டபொழுது — அங்கு வாக்காளர் ஜாபிதாவில் அவர்கள் பெயர் இல்லாத காரணத்தால் ஓட்டளிக்க முடியாமல் அவர்கள் திரும்பிவிட்டார்களாம்.

* * *

நம் நாட்டில் சிலருக்கு இளமையிலேயே முதுமை ரேகை படர்வதைப்பார்த்திருக்கிறோம்.ஆனால் ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற அதிசயத்தைப் போல் நாம் கேள்விப்பட்டது கூட இல்லை. அங்கு 112, வயது நிரம்பிய பல்லுப்போன ஒருகிழவிக்கு மீண்டும் இளமை திரும்பி இருக்கிறதாம் பல் முளைத்து, வெள்ளையாக இருந்த நரை மயிர்கள் கருமையாகி வருகின்றதாம். அந்த இளமை பெரும் மூதாட்டிக்கு 90, வயது மகனும், 19 பேரன்களும், 30 கொள்ளுப் பேரக் குழந்தைகளும் இருக்கிறார்கள். இதிலே ஒரு வேடிக்கை என்ன வென்றால் திரும்பும் இளமையை கொஞ்ச நாட்களுக்கு அனுபவிக்க வேறு விரும்புகிறாளாம் அந்தக் கிழவி. பெயர் திருமதி அவான ஓர்ட்டி காவிலேரியா.

காதலித்தாள். ஆனால் நான் அவளைக் காதலிப்பதைக் கண்ட உலகம் அது வெளித்தோற்றம் என்று பழித்தது. நான் பல பெண்களின் பாவத்திற்கு ஆளானவன் என்பது என்னவோ முழு உண்மை. அதற்காக கௌசல்யாவை நான் காதலித்ததால்அவளையும் அந்த வரிசையில் ஒருத்தியாக ஆக்கிவிடுவேன் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? அப்படிப் பார்த்தால் அவள் என்றோஎன்னால் பழிக்கு ஆளாகி இருப்பாளே!

அந்தத் தீய நோக்கத்தோடு நான் அவளிடம் பழகியதே இல்லை அவள் தான் என் வருங்காலத் துணைவி என்றுநிச்சயப்படுத்தியேபெருமளவு காதலித்தேன். அத்தகைய காதலை துண்டித்துவிட்டது நான் செய்த கொடுஞ்செயல்!

நான் திருந்திவிட்டேன். என்னுடைய பாவச் செயல்களைக் காண என் மனம் பொறாமல் என் தாயும் செத்துவிட்டாள். முன்பெல்லாம் வெறுத்து ஒதுக்கிய அதே ஊர் மக்கள் இப்போது என்னை நல்லவன் என்று பட்டும் படாமலும்கூறுகிறார்கள். எப்படியோ; இப்போது நான் திருந்திய மனிதன்! அந்த ஒரு வார்த்தைதான் என் பாவங்களுக்கு ஒரு பிராயச்சித்தமாக இருந்தது.

கௌசல்யாவிடம் என்னுடைய புதிய நிலையை எடுத்துக்கூற அவள் கணவனுடன் இருந்த ஊருக்கு விரைந்தேன். என்னைக் கண்ட அவள் ஏனோ தீயை மிதித்தவள் போல் வெளிர்ந்துபோனாள். அதற்குப் பன்னீர் தெளிப்பதுபோல் அவளுடைய கணவன் என்னை இன்முகங்காட்டி வரவேற்றார். கௌசல்யா செய்த பேறு; அவளுக்கு அப்படியொரு கணவன் கிடைத்ததே தெய்வாதீனம் என்று கூறலாம்.

அன்றுமாலைசுந்தரம்எங்கோ புறப்பட்டுக்கொண்டிருந்தார். .வெளியே உலாவிவிட்டுவந்தநான் அவருடைய புறப்பாட்டைக் கண்டு ஒன்றும் புரியாமல் விழித்தேன்!

"என்ன மூர்த்தி அப்படிப் பார்க்கிறீர்கள்? கம்பெனி வேலையாகப் பக்கத்து ஊர்வரை போகவேண்டியிருக்கிறது. அதனால்தான் இந்தத் திடீர் புறப்பாடு. நாளை மறுநாளேதிரும்பி வந்துவிடுவேன். அதுவரை உங்களுக்குப் பேச்சுத் துணைக்காக கௌசல்யா இருப்பாள் என்று கூறி என்னைப் புரியவைத்தார்.

ஆனால், நானும் கௌசல்யாவும் அவர் கூறிச் சென்றபடி பேசவேயில்லை. அவள் பேசினால்தானே நான் பேசுவதற்கு? இரவுக்கான சிற்றுண்டியை நான் இருந்த அறையில் வைத்துவிட்டுபோய்விட்டாள். நான் அவளுடைய செய்கையைக் கண்டு பெருமூச்செறிந்தவாறே சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொண்டேன்.

நினைவுகள் பல என்னுள்எழும்பிக் கொண்டிருந்தபோது என் கரங்களை ஏதோ பற்றும் ஸ்பரிசம்ஏற்பட்டது. திடுக்கிட்டு எழுந்தவனாய் பக்கத்திலிருந்த விளக்கைப் போட்டேன். என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை. அங்கு புன்னகை வடுமுகத்தில் கொள்ள நின்றுகொண்டிருந்தது—கௌசல்யா.

"கௌசல்யா! நீயா! இந்த நேரத்தில் இங்கு உனக்கென்ன வேலை?" என்று கண்களில் கனல் பறக்கக் கேட்டேன்.

அதற்குப் பதில் கூறாதஅவள் மீண்டும் பெரிய புன்னகையொன்றைபலமாகப் பொலிந்து காட்டினாள்.

"உன்னைத்தான் கௌசல்! இந்த நேரத்தில் இங்கு ஏன் வந்தாய்?"

"மூர்த்தி! ஏன் இப்படிக் காட்டுக் கூச்சல் போடுகிறீர்கள்? பெண்கள் எதையும் காரணமில்லாமல் செய்ய மாட்டார்கள். அதுவும்—

"கௌசல்யா புரிந்துவிட்டது உன் போக்கு. தயவு செய்து போய்விடு. மறுபடியும் மனிதனாகமாறியிருக்கும் என்னை மீண்டும் மிருகமாகப்பழைய நிலைக்குக் கொண்டுவந்துவிடாதே!

உங்களுக்குத் தெரியுமா?

காணாமல் போன புடவையைக் கூட எத்தனை மாதமானாலும் அடையாளம் கண்டு கொள்வார்கள் பெண்கள். ஆனால், ஆறு மாதம் கணவனைப் பிரிந்திருந்த ஓர் இளம் பெண் திரும்ப கணவனைச் சந்தித்த பொழுது அவன் அடையாளங்களை அடியோடு மறந்து விட்டாளாம். அது மட்டுமல்ல இது என் கணவர் அல்லவென்று உறுதியாக மறுத்து விட்டாளாம்.

கணவன் அவளைக் கோர்ட்டுக்கு இழுத்து விட்டான்.

அங்கே அவள் சொன்னது இது தான்;

"நான் என் கணவரைவிட்டுப் பிரிந்தபோது அவர் தாடி வைத்துக் கொண்டிருந்தார் இப்பொழுது அவருக்குத் தாடி இல்லையே? முகம் வழுவழுவென்று இருக்கிறதே? அவரை எப்படி நான் என் கணவர் என்று ஏற்றுக் கொள்ள முடியும்."

"அப்படியானால் உன் கணவர் யார்?" என்று நீதிபதி கேட்டதற்கு—அங்கு தாடியுடன் நின்ற ஓர் ஆசாமியைச் சுட்டிக் காட்டி "அவராய்த்தான் இருக்கலாம் என்று நினைக்கிறேன்" என்று இழுத்தாற்போல் பதிலளித்தாளாம் அந்தப் பெண்.

பாவம்! தாடியை இழந்த அந்தக் கணவன் அதோடு மனைவியையும் இழந்து விட்டான்.

உன்னுடைய கணவனும் இங்கு இல்லே. யாராவதுபார்த்துவிட்டால் உனக்குத்தான் ஆபத்து. போய்விடு, கௌசல்யா போய்விடு!

என்னுடைய ஆவிதான் வீணுயிற்று. அவள் கல்லாக சமைத்துஒரு வித கூரிய பார்வையுடன் என்னைப் பார்த்து நின்றுகொண்டிருந்தாள். எனக்குச் சினம் சீறிக்கொண்டு வந்தது. சிரமப்பட்டு துணிவை வரவழைத்துக்கொண்டேன். ஒயிலாக நின்றுகொண்டிருந்த அவளே கதவுக்கு வெளியே இழுத்துத் தள்ளிவிட்டு தாழ்ப்பாள்போட்டுக்கொண்டேன்.

அமைதியான மூச்சு என்னுள் வருவதற்கு வெகு நேரமாயிற்று. இன்னும் நான் அங்கிருந்தால் பழைய மூர்த்தியின் நிலேக்கே வந்துவிடுவேனே என்று பயந்துகொண்டேன்.

கதவை லேசாகத் திறந்தேன். வெளியே அவள் இல்லே. அப்போதே பெட்டியை எடுத்துக்கொண்டு இரவோடு இரவாக அங்கிருந்து நீங்கினேன்.

வாரமொன்று சென்றது.

இந்த ஏழு நாட்களிலும் கௌசல்யாவின் வீட்டிற்குச் சென்றதின் பயங்கர சூழ்நிலேயையே எண்ணி பொறுக்கமாட்டாதவனுக இருந்தேன்.

வெளியே தபால்காரன் ஒரு கடித உறையைப் போட்டுவிட்டுச் சென்ருன். அதை எடுத்துப் பார்த்தநான் திடுக்கிட்டேன், அது சுந்தரத்திடமிருந்து எனக்கு வந்திருந்தது. உறையைப் பிரித்து கடிதத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன்.

அன்புள்ள மூர்த்திக்கு,

சுந்தரம் வணக்கத்துடன் எழுதிக்கொண்டது. இப்பவும் நானும் கௌசல்யாவும் இங்கு சுகமாகஇருக்கிருேம். உன்னுடைய சுகம் அங்கு எப்படியிருக்கும் என்பது நீ கூருமலேயே எங்களுக்குத் தெரிகிறது.

மூர்த்தி!

'வாழ்க்கையில் மனிதன் செய்யும் தவறுகள் அவனேப் பிற்காலத்தில் வாழவும் செய்யும்—சாகவும் செய்யும்' என்று முன்பே ஒருமுறைஉனக்குக் கூறியிருக்கிறேன் அல்லவா? ஆனுல் அவையிரண்டும் உன்னிடம் ஏனோ ஒத்துவர மறுக்கிறது.

நீ இங்கு வந்தாய். வந்ததும் எங்களிடம் திருந்திவிட்டதாகக்கூறினுய்? நீ திருந்தியது என்னவோ பெரும் உண்மை. ஆனுல் அதற்கு சாட்சியம் வேண்டாமா? பள்ளிக்கூடத்தில் மாணவன் எவ்வளவுதான் கெட்டிக்காரனுக இருந்தாலும் அவனுக்குத் தேர்வு வைப்பதில்லேயா? அது போலவே நீ எங்களிடம் கூறிய வார்த்தையை நம்பவேஉனக்கு அன்றிரவு ஒரு தேர்வு வைத்தோம். அதில் நீ வெற்றிபெற்றுவிட்டாய். அன்று நான் வெளியூர் எங்கும் செல்லவில்லே. இரவுமுழுவதும்உனக்குப் போக்குக் காட்டிவிட்டு வீட்டினுள்ளேயே தான் இருந்தேன். இனி உன்னேப்போன்ற நல்லவன் என்னேப் பொறுத்தவரையில் வேறு யாருமே கிடையாது.

இப்படிக்கு,

சுந்தரம்.

பி. கு:—கூடிய விரைவில் நீஇங்கு வந்து சேரவேண்டும். என் தங்கை சுகுமாரியை திருமணம் செய்து வைக்க நாங்கள் இருவரும் நிச்சயம் செய்துள்ளோம்.

இதைப் படித்து முடித்தஎன்நெஞ்சம் வரண்டுவிட்டது. கண்களின்நீர் முத்துக்கள் வந்து கோத்துக்கொண்டன. என்னுடைய வாழ்க்கை திருந்திய நிலேயை அடைய தன் மனேவியையே கருவூலமாகஅமைத்துவிஷப்பரீட்சை நடத்திய சுந்தரத்தின் தியாக உள்ளத்தை நினேத்து நெகிழ்ச்சி அடைந்தேன். அந்தச் செய்கைக்கு உடன்பட்ட கௌசல்யாவை என் இதயக் கோவிலில் வைத்து என்றும் பூஜிப்பேன்.

இலக்கியத் திறனாய்வு

- **நாவல் என்பது படித்து மகிழப் பயன்பட்டால் மட்டும் போதாது—**
- **பயன் பெற - சிந்திக்க - வழிகாட்டியாய் அமைய வேண்டும்.**
- **சிறந்த எழுத்தாளர் சமுதாயத்திற்கு எவ்வளவு அவசியமோ அந்த அளவு சிறந்த விமர்சகர் தேவை.**
- **மஞ்சள் இலக்கியம் குறையட்டும்!**
- **"மண் குடிசை"கள் பெருகட்டும்!**

— எழுதியவர் "கிரிட்டெக்" —

மண் குடிசை

"நாடகமே யுலகம்" என்கிறான் ஞானிஷேக்ஸ்பியர் "உலகம் ஓர் செம்மறியாட்டுக் கூட்டம்" என்கிறார்கள் எழுத்தாளர்கள். உலகம் இறைவனின் விளையாட்டுக் கூடம் என்கின்றார்கள் பக்திமான்கள். இவ்வுலகச் சமுதாயம் ஓர் "மண்குடிசை" என்கிறார். ஆசிரியர் மு.வ. அதுமட்டுமல்ல பண்பட்ட உலகச் சமுதாயம் உருவாகவும் வழி கூறுகிறார் தம் "மண்குடிசை" என்ற நாவலில்.

பெருச்சாளிகளும் மண்ணெலிகளும்மண்குடிசையைச்சிறிது சிறிதாய் உருக்குலைப்பதுபோல இன்றய சமுதாயத்திலும், பெருச்சாளிகளும் மண்ணெலிகளும் போன்ற மக்கள் இருந்து நம் சமுதாயத்தை அழிந்த மண்குடிசைகளாக்கி வருகின்றனர். இன்று நம் சமுதாயம், தமிழ்ச்சமுதாயம் அழிந்து உருக்குலைந்த நிலையில் அதன் தூண்களெல்லாம் உளுத்துப் போய் சுவர்கள் எல்லாம் வெடிப்புண்டு தரையெல்லாம் உவர்த்துக்கொட்டி அழிந்த நிலையில் ஆகியும் இன்னமும் பெருச்சாளிகள் ஓயவில்லை மண்ணெலிகள் துளைப்பதை விடவில்லை— ஆனல்?

பெருச்சாளிகளான இவர்கள் என்றுமே பெருச்சாளிகள் அல்ல! மாறி பண்படுவதற்கு வாய்ப்பு உண்டு! அப்படிப்பட்டவர்கள் மாற வாய்ப்பினை நாம் அவர்களுக்கு அளிக்கவேண்டும்! இது தான் மண்குடிசை நாவலின் கரு. உருக்குலைந்த மண்குடிசை வாழ்வு போதும், மீண்டும் பழயவாழ்வை பாதுகாப்பான வாழ்வை அடையுங்கள் இன்றேல் புத்தம் புது செங்கல்லாலான வீட்டுவாழ்வை

அடைய முயலுங்கள்— என்று வளம் பெற்ற சமுதாயம் உருவாக தம் நாவலில் அறிவுறுத்துகிருர் மு. வ.

தமிழில் நாவல் இலக்கியம் தோன்றியது முதல் இன்றுவரை, எத்தனையோ நாவல்கள் தோன்றி அழிந்து மறைந்து கொண்டே இருக்கிறதை நாமே காண்கின்ருேம் உலகின் எந்தச் சமுதாயமும் திருந்த வேண்டுமென்றுதான் எண்ணுகிறது! ஆனுல், திருந்திய சமுதாயம் இன்று வரை தோன்றியதில்லை வாழ்ந்ததில்லை. ஒவ்வொரு சிந்தனையாளனும் உலகத்தைத்திருத்தவே முயன்ருன் ஆனுல்?-ஒவ்வொரு இனமும் தான் திருந்த முயன்றதே தவிர தன் தனியுறுப்புக்களான மனிதர்கள்திருந்தினுர்களா? தனிமனிதன் திருந்தினுனு எனப்பார்க்க முயன்றதா? இதற்கு விடைதான் மு. வ. வின் தனிப்பெரும் நாவல்கள், தனிப்பதவி வகிப்பதைக் காணலாம்.

காதலைப்பற்றிய நாவல்கள் மனித மனங்களின் ஆசைகளைப் பற்றிய நாவல்கள் கலைஞர்கள் பற்றிய நாவல்கள் இப்படி எத்தனையோ நாவல்கள் தோன்றி வளர்ந்துள்ள கலையுலகிலே மு.வ. வின் சிந்தனை நாவல்கள் ஒரு புதுப்பாணியை வகுக்கவில்லையென்ருலும் வேறு யாரும் பின்பற்ற முடியாத ஒரு தனித்வத்தைக் கொண்டுதான் இயங்குகின்றதைக் காணலாம். அதுவே அவர் கலை! திருக்குறளுக்குப்பின் அது போன்ற இலக்கியம் தோன்றவேயில்லை! காரணம் அவைகளில் வேறுயாரும் பின்பற்ற முடியாத ஒரு தனித்வம் இருந்தது என்கிருர் விமர்சகர் எஸ். வையாபுரிப்பிள்ளை. அது போல மு. வ. வின் நூல்களிலே ஓர் அமைதி! தனித்வம் உண்டு! ஆனுல் கதாசிரியனின் மனத்தைப் புலப்படுத்தும் தனித்வம் இல்லை என்கிருர்கள் சிலர். இருந்தாலும் அவரது நூல்களில் காணப்படும் ஒரு அமைதி வேறெங்கும் காண முடியாதது! அதுதான் அவர் முழுமைத்வம்.

'மனிதன், மனித உறவு என்பதில் நாவலைத் தொடங்காமல் முற்போக்கு, அரசியல், சமூகம் முதலியவை பற்றிய சிந்தனைகளில் திருக்குறள் பண்புகளில் தொடங்கி ரோமான்ஸில் தன் நாவல்களை எழுதுகிருர் மு. வரதராசன்'—கா. நா. சுப்ரமண்யம்.

இது முற்றிலும் ஓர் புதிய முறை. மு. வ.வின் நாவல்கள் சிந்தனை நாவல்கள், பயன் கருதிய நாவல்கள் சிந்தனையைத் தூண்டுவதே மு. வ. வின் நாவல்களின் அழகு என்றும் கூறலாம். ஆனுல் சில விமரிசனவிசாரகர்கள் மு. வ. வின் நடை அத்துணை சிறப்பான நடை என்றுகூற முடியாது. என்றும் அது சிறந்த இலக்கியமும் அல்லவென்றுகூறுகிருர்கள்.இவர்களது பேச்சு உண்மையா இல்லையா என்பதைக்காலம் காட்டிவிடும்! அதில் ஐயமே இல்லை.

மு. வ. வின் நாவலில் வரும் கதாபாத்திரங்கள் நிலையானவர்கள் அல்ல, அவரது சிந்தனைகள் தாம். நிலைபட்ட சிந்தனையைத் தூண்டுவித்து சிந்திக்கவைப்பார் ஆனுல், சிந்தனையின் போக்கை முடிவை கூறிவிடமாட்டார் இதுவும் மு. வ. விடம் மட்டுமே காணும் அழகு. இதை ஒருவர்

இரண்டு காதுகள் சொல்லும் சாட்சியைவிட
ஒரு கண் சொல்லும் சாட்சியே மேலானது.

''சிந்திக்கச் செய்வது தேவை தான் ஆனுல், சிந்தனையின் பயனை மு. வ. கூருமல் நழுவு வதை ஒவ்வொரு நூலிலும் காண லாம் என்பார்''—இது அத்துணை சரியல்ல.

மு. வ. வின் நாவல்கள் இப்படி இருக்க வேண்டும் இப்படி வாழ வேண்டும் என்கிற கனவுச் சமு தாயத்தை விரித்துக்காட்டுவது. உயர்ந்த பல மனிதர்களை அவரது நாவல்களில் சந்திக்கலாம்-ஆனுல் அம்மனிதரும் சிந்தனை உருவில் காட்சியளிப்பார் அவரும் நம் சிந்தனையைத் தூண்டுபவராக அமைவார் இதில்தான் மு. வ. வெற்றிபெறுகிருர்.

இப்படித்தான் எழுத வேண் டும் என்ருே ஏன் இப்படி எழுதி ஞய் இவ்வாறுதான் உன் நாவல் அமையவேண்டும் என்ருே கூறு வதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாதுதான் — ஆனுலும் மொழியின், இலக்கியத்தின் வளர்ச்சி விரும்புகிற ஒவ்வொரு இலக்கிய மதிப்பீட்டாளனும். வழி காட்டியாகவும் தீயனவற் றைச் சுட்டிக் காட்டி ஒடுக்கவும் தயங்கிவிட்டால் மொழியின் இலக்கியத்தின் வளர்ச்சியின் போக்கு நல்ல வழியில்தான் செல் கிறதா? தீய வழியில் செல்கின் றதா என்று கூறவே முடியாமல் போய்விடும்-விமர்சகர்கள் ஆதர வாக அன்பாக நெருங்கி இலக் கியங்களை விமர்சனம் செய்ய வேண்டும் 'இலக்கியாசிரியனை அதைரியப்படுத்தி விடக்கூடாது சிறுகுறையிருந்தாலும் பாராட்டவேண்டும்'' என்கிருர் தி. ஜ. ர. இப்படிச் சிலர் கூறு வதால் என்ன வந்துவிடப்போகி றது? விமர்சகன் எதற்காக பரிவு காட்டவேண்டும் —தவற்றை சுட்டிக்காட்டாமல் இருந்து விட்டதால்தான் நம் தமிழ் மொழியில் இலக்கிய வளர்ச்சி இன்றைய அளவில் குன்றி இருக் கிறது இனியும் குன்றத்தான் வேண்டுமா? சிந்தித்துப்பாருங் கள் மொழியின் இலக்கிய வளம் உயர களைகள் பிடுங்கப்பட்டே யாக வேண்டும்.

அதனுல்தான் இப்படி வளருங் கள் என்று சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மண்குடிசைக் கதை வெகு சிறிய கதைதான். நிரபராதியான மெய்யப்பன் குற்றம் சாட்டப் பட்டு சிறையுள் ஆறு ஆண்டுகள் தள்ளப்படுகின்ருன். ஆறு ஆண்டு சிறைக்குப்பின் வீடுதிரும்புகிருன். ஆனுல், மனைவி ரேவதி அவனை குடும்பப் பெருமையைக் கொன்று விட்டதாகக்கூறிப் புறக்கணிக் கிருள்வெறுக்கிருள். மனம்நோகி ருன் மெய்யப்பன். வீட்டை வெறுத்து தலயாத்திரை போகும் நண்பனின் குடும்பத்துடன் வட நாட்டில் பல இடங்களைக்கண்டு தில்லியிலேயே வேலைக்கமர் கிருன்.

மனைவியைத் திருத்த முயற்சிக் கிருன் ஆனுல் முடியவில்லை மனம் நோகிருன் வேலையும் சலிப்புத் தருகிறது. பணம் அனுப்பினுலும் மனைவியின் அன்பைப்பெற இயல வில்லை. காஷ்மீர் போன்ற இடங் களில் சுற்றித்திரிகின்ருன் அப் போது ஒரு அறிஞரை சந்திக் கிருன். கொதிப்புள்ள அவன் நிலையை மாற்றி விடுகிறது. அவர் பண்பு. அறிவியல் துணையால் உரு வற்றுப் போய், தன் ஊருக்கே

முதலில் தூசியைக் கிளப்பி விடுகிருேம்
பின்னல் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகிருேம்
இது மனித சுபாவம்.

வந்து எல்லாவற்றையும் திருத்து கிருன் முயற்சிக்கிருன் மெய்யப்பன். மீண்டும் பழைய நிலையை நோக்கியே உலகம் போகிறது.

மீண்டும் அறிஞரை அடைகின்ருன் தன் மனைவி ஓரளவு திருந்தி விட்டதாகக்கூறுகிருன். அவரது அறிவுரைக்கடிதத்தைப் பெற்று மீண்டும் தன்னூருக்கு வருகிருன். மனைவி மாறியிருப்பது கண்டு மகிழ்கிருன். நண்பனின் அச்சகத்தை நடத்துகிருன். மெய் கண்டாரின் அறிவுரை அவனை உய்விக்கிறது.

'சமுதாயம் மண்குடிசையாக இருக்கும் வரை உய்வு இல்லை. பழைய வாழ்வாம் குகை வாழ்வை ஓடிப்பிடிக்க் வேண்டும் இல்லையேல் அடிப்படையிலிருந்து இன்றையச் சமுதாயத்தை மாற்றவேண்டும்' என்று நாவலில் விளக்குகிருர் மு. வ. மண்குடிசை யாக இருக்கும் வரை பூச்சிகளும் பெருச்சாளிகளும் எலிகளும் அழித்துக் கொண்டேதான் வரும் என்பதை நாவலின் இறுதியாகக் கூறுகிருர்.

இதுதான் நாவலின் கதை— இந்தக் கதையை ரசமாகப் பின்னவே முயன்றுள்ளார். முதல் ஐம்பது பக்கங்கள் வரை சுமாரான வேகத்தில் கதை நடையிடுகிறது, மனைவியின் புறக்கணிப்பு வெகுக் குரூரமாகத் தென்பட்டாலும் இது உண்மை என்பதை மு. வ. வின் நாவலின் போக்கு நிரூபிக்கிறது. ஆனுல் இந்த ஐம்பது பக்கத்திற்குமேல் நாவலில் ஓட்டமில்லை—இது பெருங்குறை. மெய்யப்பன் டில்லி செல்லும் வர்ணனைகளைச் சுழற்றிச் சுழற்றி எழுதுகிருர் மு. வ. ஒவ்வொரு இடத்தின் வர்ணனையும் நீண்டு கொண்டே போகிறது. கதைப் போக்குக்கு மெய்யப்பன் தில்லி போய்த்தாகை வேண்டுமென்ருலும் இவ்வளவு அதிகமாக. ஏறத்தாழ 95 பக்கங்கள் இந்த பிரயாண வர்ணனை நீண்டு கொண்டே போகிறது— தாம் சென்ற பயணக்கட்டுரையையும் நாவலுடன் இணைத்து விட்டாரோ தெரியவில்லை. ஆனுல் இது நாவலின் ஓட்டத்தை, போக்கை தடைப்படுத்துகின்றது

போனுல் போகட்டும்

நாடகம் நடந்து கொண்டிருந்தது. கொட்டகை இருட்டாக இருந்தது. அந்த இருட்டிலும் கீழே குனிந்து எதையோ தேடிக் கொண்டிருந்தார் ஒரு வயதான மனிதர்.

பக்கத்திலிருந்தவர் 'என்ன தேடுகிறீர்கள்' என்று கேட்டார்?

"என் வாயில் போட்டிருந்த 'சாக்லெட்' விழுந்து விட்டது அதைத் தேடுகிறேன்" என்ருர் பெரியவர்.

"ஒரு சாக்லெட்டுக்குத்தான் இத்தனை கஷ்டப் படுகிறீர்கள் போனுல் போகட்டும் உட்காருங்கள்."

இதற்கு பெரியவர் சொன்னுர்: "சாக்லெட் போகட்டும் ஆனுல் அதில் என் பற்களெல்லாம் ஒட்டிக்கொண்டிருக்கிறதே அதுதானே கவலை.

தடைபோட்டு - நிறுத்துகின்றது இடையே கதைதான் என்பதை நிருபணம் செய்ய மெய்யப்பனை தில்லியிலேயே சிறிது காலம் வேலை செய்வதாகக்காட்டிவிட்டு பின் வேலையிலிருந்து விடுதலை பெற்று காஷ்மீர் பக்கம் போவதாக எழுதியிருப்பது நல்லமுறை தான் என்ருலும் பழைய ஒட்டம் நாவலில் இல்லை! பிரயாணக்கட்டுரையாக அமைந்த பகுதிகளில் சிலசில நல்ல கருத்துக்கள் குடும்பத்திற்கு, கணவன் மனைவிக்குத் தேவையான சில கருத்துக்களை அழகியமுறையில் தனக்கே யுரிய பாணியில் சொல்லிக்கொண்டு விவாத உரையாடல்களாக மெய்யப்பனுக்கும் பிறருக்குமிடையே நடைபெறுவதாக எழுதிக்கொண்டே போகிருர்-சில இடங்கள் மிக அருமையாகவே அமைந்துள்ளது, என்ருலும் இது கதைப் போக்கை தடை பண்ணுதபடி அமைத்திருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

அவரே தம் நூலில் கூறுகிருர்:

''நாவலில் கூறப்படும் நிகழ்ச்சிகளோடு, செய்திகளோ கட்டடத் தூண்கள் போல கதைக்கு இன்றியமையாதவையாக இருக்க வேண்டும். இந்த வர்ணனைகள் இல்லையென்ருல் கதை இவ்வளவு சிறப்பாக அமைந்திருக்காது என்றுபடிப்பவர் எண்ணுமாறு அமையவேண்டும் அவ்வாறு அமைந்தால்தான் நாவலைக் கற்பவர் சுவையோடு கற்கமுடியும்'' என்கிருர் .(நூல்; இலக்கியமரபு 112ம் பக்கம்.)

இதற்குப் பின் கதை நாயகன் மெய்யப்பன் தமிழ்ச்சான்ருேரான மெய்கண்டாரைச் சந்திக்கின்ருன்—சந்தித்த பின்னும் சில பக்கங்கள் வெறும் வர்ணனையாகி இயற்கை வர்ணனையாக உள்ளது.

இதுபோன்ற வர்ணனைகளை ஓரளவு குறைத்திருந்தாராஞல் இன்னும் நாவல் சிறப்பாக அமைந்திருக்கும் ''ஒட்டாத அலங்காரங்கள் போல நாவலில் புகுத்தப்படும் வருணனைகளோ கருத்துக்களோ சுவையாய் அமைவதில்லை. கற்பவரால் எளிதில் மறக்கப்படும் கதையின் போக்குக்கு இடையூறு என்றெண்ணி அவை புறக்கணிக்கப்படும்'' என்று தமது 'இலக்கியமரபு' என்ற நூலில் மு. வ வே கூறுகிருர்.

நாவலின் மொத்த பக்கங்கள் 504 இதில் வர்ணனைகளையும் பிரயாணச் செய்திகள் சிலவற்றையும் ஓரளவு குறைத்திருப்பாரேயாஞல் இது இன்னமும் நல்ல முறையில் அமைந்திருக்கும். மெய்கண்டாரின் சந்திப்புக்குப் பின் மீண்டும் கதையின் ஓட்டம் தலையெடுக்கிறது. ''நாவலில் நிகழ்ச்சிகளையும் வர்ணனைகளையும் கூட்டவோ குறைக்கவோ நாவலாசிரியருக்கு உரிமை உண்டு''—என்று மு. வ. தன் 'இலக்கியமரபு' நூலில் கூறினுலும்உரிமை என்ற பெயரில் நாவலாசிரியர் செய்யும் தவறுகளையும் நாம் அனுமதிக்க முடியுமா? ரஸிக்கத்தக்கதாக அமைவதே கலை. ரஸனைக்கு மாறுபட்டதை கலையென்று அனுமதிக்க முடியுமா?

இதற்குப்பின் 61 பக்கங்களுக்கு மேலாக. மெய்கண்டாரின் பாத்திரம் பூரணப்படுத்தப்படுகிறது. இந்த முயற்சியில் மு. வ. பிரகாசிக்கின்ருர் — மெய்கண்டாராகவே மாறி மு. வ. உதிர்க்கும்

கருத்துமணிகள் நல்லன. ஆன்மீக வாழ்வு, ஆடம்பரம், பெண்திருத்தப் படுவது உலகம் இப்படிப்பட்ட விஷயங்களில் தத்துவரீதியான ஆய்ந்த கருத்துக்களைக் கூறினாலும் — அவைகளில் சில கதையுடன் ஒட்டாமல் பிண்டு பிண்டு நிற்கின்றன. இதற்குமேல் நம்மைப் படிக்கத்தூண்டுவது மெய்யப்பனின் தண்டனை அடைந்தது எப்படி? என்ற கேள்விதான் — அதற்குறிய விடையை நாவலின் நடுப்பகுதியில் உடைத்து விடுகிறார் மு. வ. இது சரியாகப்படவில்லை. ஏன் அநியாயமாக மெய்யப்பன் தண்டனைக்குள்ளாகிறான்என்றகேள்வி தான் நாவலை உருட்டும் உத்தி. அது நடுவிலேயே உரைக்கப்பட்டு விடுகிறது.—இதற்குப் பின் நாவலில் சற்று தளர்ச்சி ஏற்படவே செய்கிறது. 221 பக்கத்துக்கு மேலாக விஞ்ஞான சாதனை தலையெடுக்கிறது —ஞானியாயிருந்து இது வரை அறிவுரை கூறிவந்த மெய்கண்டார் இதற்குள் ஸயன்டிஸ்ட் ஆகமாறிவிடுகிறார்-உருத்தெரியாமல் போகும் மருந்து தயாராகிறது. மெய்யப்பன் சாப்பிடுகிறார் அருபமாகிறார்! பறக்கிறார்!—இது விஞ்ஞானசாதனை!-

> சாதி முறை மாற வேண்டும் என்று விரும்புகின்ற தலைவர்கள், ஊழியர்கள், கட்சிகள், அல்லது, அரசினர் மக்கள் மன்றத்திலே சாதிகளினால் வரும் கேடுகளை அவர்கள் மனம் கொள்ளும் முறையில் எடுத்துச் சொல்லி மன மாற்றத்தைக் காண முயலவேண்டும் அதுவே சாதி ஒழிப்பதற்கு சிறந்தவழி
>
> —தவத்திரு அடிகளார்.

இந்த நாவலின் உத்தி பழையதுதான் நடத்தும் முறையும் பழையதுதான் இந்த நாவலில் புதுமை என்று எதுவும் இருக்குமானால் இந்த விஞ்ஞானசாதனை தான் புதுமை.

விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நாவல்கள் தமிழில் வெகு குறைவுதான் விஞ்ஞான அறிவில் நாம் பின் தங்கி இருப்பதைப் போலவே விஞ்ஞான சார்பாக நாவல்களிலும் பின்தங்கியே இருக்கின்றோம். வெளியாகியுள்ள நாவல்களிலும் வெற்றிபெற்றவை ஒன்றுமில்லை. இதைத்தான் புதுமையாக தம் நாவலில் கையாண்டிருக்கிறார் மு. வ. ஆனால், இதனைப் புதுமை என்று கூறிவிட முடியவில்லை.

நாவலின் குறிப்புரையில் மு. வ. வே. கூறுகிறார். H. G. வெல்ஸின் ''உருத்தெரியா மனிதன்'' நாவலில் அறிவியல் பயன் பட்டதை அறிந்தேன் இங்கும் அறிவியல் உதவுவது நலம் என்றெண்ணி மாற்றினேன்'' என்கிறார்.

இம்முயற்சியில் மு. வ. வெற்றி பெற்றார் என்று கூறிவிட முடியாது. ஆனால் ஓரளவு சாதித்திருக்கிறார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் ஒன்று. தமிழில் இவ்வகை, நாவல்கள் வளர்ச்சி இல்லாதிருக்கும் போது தேவை எது என்று அறிந்து வழங்கியிருக்கும்ஆசிரியர் மு. வ. வைப் பாராட்டவே செய்கிறோம்.

இதற்குமேல் கதையின் ஓட்டத்துக்குத் துணைபுரிவது மெய்யப்பனின் சாதனைகள்தான்—247ஆம் பக்கத்திலிருந்து 418 பக்கங்கள் வரை கதையோட்டத்தில்

நல்லசலசலப்பு உண்டு. சற்றே சென்றாலும் சுவையாகப் பின்னப் பட்டுள்ளது. இப்பகுதியில் மு.வ. தன் அனுபவங்களைத் தெளிவாக்கு கிறார். நம் சமுதாயத்தின் பயங் கர ஊழல்கள், பிரிவினைகள் சகதிச் சேறுகள் முதலியனவற்றை அப் பட்டம் அப்பட்டமாக பிட்டு வைக்கிறார்— பிரச்சனைகள் தீர்க் கப்படும் விதம் அலாதி! இந்த இடத்தில்தான் மு. வ. எழுதும் சில செய்திகள் நம்பத்தக்கதாக இல்லை—இருந்தாலும் ஒரு சிலர் அப்படியும் வாழ்கிறார்கள் என்று காட்டுவதில், உண்மையில் அழகு இருக்கிறது 419ம் பக்கத் திலிருந்து மீண்டும் மனித உருப் பெறும் மெய்யப்பனைக் காண் கிறோம்—கதையில் வரும் சான் றோர் மெய்கண்டார் யார்?என்ற கேள்வியில் மிகுதியுள்ள கதை ஓடுகிறது.

பைபிள், குர்ஆன், திருக்குறள் போன்ற அரிய நூல்களின் அரு மையான கருத்துக்களையெல்லாம் பிழிந்து ''மண்குடிசை''க்குத்தரு கிறார் மு. வ. பயன் உண்டோ இல்லையோ? செய்வது சீரியபணி.

நாவலின் மையக்கருத்தை மெய்கண்டாரின் கடிதமாகத் தருகிறார். நாவலின் இறுதியில் கருத்து பொதிந்த கடிதமாக இருந்தாலும் அதில் சுவை இல்லை. அதாவது கதையைக்கூறி கருத்தை கலைஞன் விளக்கவேண் டும். கலையால் கருத்தைக்கூறி விடக்கூடாது.புலப்படுத்த வேண் டும்—கருத்தைக் கூறி விடுவது வெகு எளிதில் மறைந்துவிடும்— இந்தக் கடித முறையில் முடித் திருப்பதும் பழையமுறைதான்— மு. வ. வின் ''கரித்துண்டு'' இறுதி யில் கடிதத்தில்தான் முடிகிறது- இனிமு. வ. நாவல்எழுதும்போது

> விவசாயிகள்தான் இந்த நாட் டின் ஜீவன். அவர்கள் உழைப்பு நாட்டின் மூலதனம். அவர்கள் மகிழ்ச்சியோடி ருந்தால் ஒருமணி நேரத்தில் செய் யும் வேலையை அரைமணி நேரத் தில் செய்ய முடியும். எனவே விவ சாயிகளின் துன்பம் போக்கப் படவேண்டும். அவர்களின் தேவைகள், இவர்களை தேடிச் செல்ல வேண்டும் அவர்கள் முன் னேற்றம்தான் திட்டத்தின் வெற்றி.
>
> —தவத்திரு அடிகளார்

அவர் கடைப்பிடிக்க வேண்டுவது புதுமை! புதுமை—அது ஒன்றே.

தமிழிலக்கியத்தில் புதுமைக் குத்தான் வாழ்வு கிடைத்து பல ஆண்டு நிலைத்திருக்கிறது. என் பதை வரலாறுகாட்டும். புது மையை வரவேற்க வேண்டும் என்று எண்ணம் வேண்டும். அப் போதுதான் நம் மொழியும் உய ரும்.

அடுத்ததாக 504 பக்கங்கள் இந்த நாவலுக்குத் தேவையா? என்பதுதான் மு. வ. தன் இலக் கிய மரபு நூலில் கூறுவது போல் ''விளக்கமும் வர்ணனையும் கொண்ட நாவல் வகை ஒரு தனி வகைஅதுவிளக்கம்மிக்கன'' என்று கூறுகிறார்—மண்குடிசையும் அந்த விளக்கம்மிக்க நாவலின் வரிசையில் சேருகிறது என்றாலும் 380 பக்கங்கள் 400 பக்கங்களுக் குள் முடித்திருந்தால் தமிழன் பெருமைப்படக்கூடிய அளவில் இருந்திருக்கும்.

மண்குடிசை நாவல் தமிழன் படித்துப்பரவசம் அடைய எழுதப்பட்டது அல்ல. உளுத்துப் போன அவன் சமுதாயத்தை இடித்துக்காட்டி கல்வீட்டு

வாழ்வை அவனுக்கு அளிக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையை அடிப்படையாகக்கொண்ட நாவல்—குறைகள் உண்டு ஆனுல் நிறைகள் மனத்தை இன்புறுத்துகின்றன. மு. வ. இது வரை எழுதிய அத்தனை நாவல்களிலும் கூருத பல அருமணிக் கருத்துக்களை இந்நூலில் பெய்து தருகிருர். இத்தனை ஆண்டுகாலமாக அவர் தன் சிந்தனையின் குறிக்கோளுலக மக்களை அறிமுகப்படுத்துகின்ருர்.

தமிழன் வாழ வேண்டும்! தமிழன் வளரவேண்டும் தமிழன் உயரவேண்டும் என்ற ஏக்கத்தின் பேரொலி நாவல் முழுதும் எதிரொலிப்பதை நல்ல இதயத்துடனும் சிந்திக்க வேண்டுமென்ற கருத்தை ஆர்வத்துடன் படிக்கும் எவருக்கும் புலப்படும். அந்த நேரத்தில் அவனும் அதற்காக ஏங்குவான் இதுவே மு. வ. வின் வெற்றி என்று கூறலாம்.

1962ஆம் ஆண்டில் எத்தனையோ நாவல்கள் வெளிவரத்தான் போகின்றன எத்தனையோ வளர்ச்சி எய்தத்தான் போகிறது—ஆனுல் அதற்குள் தமிழர்கள் தங்கள் குழந்தைப் பருவ கோர ரஸனைகளை விட்டு, மஞ்சள் இலக்கியங்களில் உழல்வதை விட்டு எழுத்து நுண்ணிய உயர்ந்த உணர்வுகளை உணரும் திறன் பெற வேண்டும் மு. வ. போன்ற இலக்கியாசிரியர்கள் இன்று வரவேற்கப்படுவதைக் கண்டு நாம் மகிழ்கிருேம். ஆனுல் அதை வாங்குபவர்கள் படிப்பவர்கள் உண்மையில் சிந்திக்கிருர்களா என்பதை உற்றுப்பாருங்கள்.

இந்த வளர்ச்சி போதாது. தமிழிலக்கியம் உயர வேண்டுமானுல், கல்லூரி மாணவர்கள் கையில் மஞ்சள் இலக்கியம் திகழ்வது நீங்கவேண்டும். மக்கள் கையில் மஞ்சள் ஆபாச இலக்கியம் நிற்பது நிறுத்தப்பட வேண்டும். அப்போதுதான்—நம் இலக்கியம் வளரும் வாழும்—குறைகூறுவது எம்தொழிலல்ல. வளர்ச்சியைச் சுட்டுவதே எம் பெரும் பணி!

இந்த வளர்ச்சியெல்லாம் யார் கையில் உள்ளது?

உங்கள் கரங்களில் உங்கள் எண்ணங்களில் உங்கள் சிந்தனைகளில்......

தூங்கிறுரு ?

பையன் கட்டிலில் படுத்திருந்தான்

அப்பொழுதுதான் வீட்டுக்கு வந்தார் அப்பா, அம்மாவிடம் சத்தம் போட்டுப் பேசினுர். "உஷ்... சத்தம் போடாதீர்கள் பையன் அயர்ந்து தூங்குகிருன்'' என்று மெதுவாகச் சொன்னுள் அம்மா.

அம்மாவின் எச்சரிக்கையை மறந்து', திரும்பவும் உரக்கப் பேசினுர் அப்பா.

அப்பொழுது கட்டிலில் படுத்திருந்த பையன் எழுந்து சொன்னுன்: "ஏன் அப்பா இன்னும் உரக்கப் பேசுகிருய். நான் அயர்ந்து தூங்குகிறேன் என்று அம்மா சொன்னது தெரியவில்லே.''

கதம்பம்

பழைய ரோமாபுரியில் நடந்த விஷயம் இது. ராணுவ வீரன் ஒருவன் யுத்தமுனைக்குப் புறப்பட்டான். தன் அழகிய இளம் மனைவியைப் பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு, அவளை ஒருஇரும்பு கவசத்திற்குள் வைத்துப் பூட்டினான். பிறகு அதன் சாவியைத் தன் நெருங்கிய நண்பனிடம் கொடுத்து இதை வைத்துக்கொள். நான் ஆறு மாதங்களுக்குள் வரவில்லையானால் இந்தச் சாவியை உபயோகப்படுத்து என்று கூறிவிட்டுப் போனான்.

அவன் சிறிதுதூரம் கூடப் போயிருக்க மாட்டான். அவனுடைய நண்பன் அவனைத்தேடி இரைக்க இரைக்க ஓடி வந்தான். வந்ததுமே ராணுவ வீரனிடம் ''நண்பா நீ தவறான சாவியைக் கொடுத்து விட்டாய். ஒரிஜனல் சாவியைக் கொடு'' என்று கூறினான்.

*   *   *

இங்கிலாந்தில் ஒரு கிராமத்தில் நடந்தது இது. ஒவ்வொரு கிராமத்திலும் கிளைத் தபால் நிலையங்களைத் திறக்க எண்ணினார் தபால் இலாகா இன்ஸ்பெக்டர்.

அதன்படி ஒருகிராமத்தில் ஒருகிளைத் தபாலாபீஸைத் திறந்தார். உள்ளூரில், படித்தவர்கள் ஒருவருமே இல்லை. அவ் ஊரில் ரொட்டிக் கடைக்காரர் ஒருவர்தான் சுமாராகப் படித்தவர். அதுவும் அரைகுறைப் படிப்பு தான்.

எல்லோரும் ஏகமனதாக தங்களுடைய ஊர் போஸ்ட்மாஸ்டராக அவரை நியமிக்க விரும்பினார்கள்.

இன்ஸ்பெக்டரும் அவர்களுடைய அபிப்பிராயத்தித்திற்கிணங்க அந்த ரொட்டிக் கடைக்காரரையே போஸ்ட் மாஸ்டராக நியமித்து விட்டுப் போனார்.

தபால் நிலையம் திறந்து ஒரு வாரமாகி விட்டது, அவ்வூரிலிருந்து மத்திய தபால்நிலையத்திற்கு அனுப்பும் வர வேண்டிய தபால் பை வரவே இல்லை.

என்னவோ ஏதோ என்று கவலையடைந்த இன்ஸ்பெக்டர் தானே மறுபடியும் அவ்வூருக்குப் புறப்பட்டு வந்தார்.

வந்தவர் ரொட்டிக் கடைக்காரனைச் சந்தித்து என்னவிஷயம் என்று விபரம் கேட்டார்.

இன்னும் தபால்பை நிரம்பவில்லையே சார் நான் அரைகுறையாக எப்படி அனுப்ப முடியும்? என்று கேட்டார் அந்த ரொட்டிக்கடை போஸ்ட் மாஸ்டர்!

*   *   *

ஆசிரியர் ஒருவர் தம் மாணவர்களிடம் கிரிக்கெட் மாட்ச் பற்றி ஒரு கட்டுரை எழுதச்சொன்னார். எல்லா பையன்களும் பக்கம் பக்கமாக வரிந்து தள்ளி ஆசிரியரிடம் கொண்டு கொடுத்தார்கள்.

கணேஷ் ஒரே வரியை மட்டும் எழுதி நோட்டைக் கொண்டுபோய் ஆசிரியரிடம் கொடுத்தார்கள்.

அவன் நோட்டைப் பார்த்த ஆசிரியர் திகைத்துப் போய் உட்கார்ந்து விட்டார். அவன் எழுதி இருந்தது இது தான்:

மிகவும் கடுமையான மழையின் காரணமாகக் கிரிக்கெட்மாட்ச் ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது!

கௌடில்யன்

ஏழைக் கற்சிலை

காரிகையின்

பாய் விரித்தது போல் நல்ல தார் விரித்த ரோடு, நானும் திரு. ஜார்ஜ்ஜும் பூனு வீதியில் எங்கள் வண்டியை வேகமாக ஓட்டிச் சென்றோம்.

தற்செயலாக அண்ணாந்து பார்த்தேன். வண்டி "கர்—கர்" என்று நின்றது.

"கர்" என்ற ஓசையைக் கேட்டதும் என்னமோ வென்று பயந்தே போனேன்" என்றார் நண்பர்.

வண்டி அதற்கு மேல் ஓட மறுத்துவிட்டது. இருவரும் வண்டியிலிருந்து இறங்கினோம். ஒரு கற்சிலையை நோக்கி நடந்தோம். என் வாயும் பேச மறுத்துவிட்டது. "கண் இமையை மூடினாலும், அந்த நேரத்தில் அச்சிலையைக் காண முடியாமல் இழந்து விடுவோமோ" என்று இருந்தது என் உள்ளம்.

"எவ்வளவு நேரம் நான் நின்றேன் என்றது எனக்குத் தெரியாது. அவர் "கனைத்தார்" திரும்பினேன்.'

"என் கால்கள் வலிக்கின்றன என்னை மன்னிக்கவேண்டும்" என்றார் நண்பர்.

அப்போதுதான் திரு. ஜார்ஜ் அவர்கள் என் பக்கத்தில் இருப்பது நினைவுக்கு வந்தது. "என்னங்கோ! அப்படியே கற்சிலையைப் போல் நின்றுவிட்டீர்களே. நீங்கள் நின்ற நிலையைக் கண்டு, எனக்கே அச்சம் மேலிட்டது" என்றார் நண்பர்.

"இல்லை! இந்தச் சிலை என்னை சிலையாக்கியது. என்னையே இந்த வீர மங்கை வெட்டிவிடுவாள்போல் இருக்கிறதே; முதுகில் குழந்தையைச் சுமந்து இரும்புக் கவசத்துடன் போர்க் கோலத்தைக் கண்டதும் எனக்கு பழைய நினைவுகள் வந்தன. துரோகிகள்! பெண் என்றும், பாலகன் என்றும் பார்க்கவில்லை" என்று என் பற்களைக் கடித்தேன் "பழைய நினைவுகள்! என்று கூறினீர்களே அது என்ன?" என்று கேட்டார் நண்பர்.

"பாரத தேசத்தின் விரிந்த சரித்திரத்தில் கற்பிற் சிறந்த காரிகைகள் பலர் உண்டு. வீரம் செறிந்த வனிதையரும் பலர். அவர்களுடைய வீரச் சிறப்பு எப்பொழும் வெளியாவதில்லை. சங்கடம் நேர்ந்த காலங்களில் அவ்வீரம் கொழுந்துவிடும்.

முகப்பு விளக்கக் கட்டுரை

எதற்கும் அஞ்சாத நிலையில் ஒளிரும். இங்ஙனம் கோடிக் கணக்கான மங்கையர்கள் இன்றுமுண்டு ஆனல், அவர்கள் மறைந்து வாழ்கின்றனர். காலமும் நேரமும் வரும்போது, அவர்கள் வீரம் கொழுந்துவிட்டு எரியும். இந்தியாவின் உண்மைச் சரிதம் இன்னும் சரியாக உருவாக வில்லை. அதனை உருவாக்கும் நோக்குடன் சரித்திரப் பேராசிரியக் குழு ஒன்றை நியமித்துள்ளார்—ஜனதிபதி பாபுராஜேந்திரப்பிரசாத். அவர் அக்குழுவின் தலைவர். பாரத தேசத்தின் முதல் பாகம் விரைவில் வெளிவரும் என்று பலரும் எதிர் பார்க்கின்றனர். ஆனல் சிலர் தனித்தனியாக எழுதவும் செய்கின்றனர். அங்ஙனம் உண்மைச் சரித்திரம் எழுதும் நூலாசிரியரை அதிகாரத்திலிருக்கும் சில போலி சரித்திர ஆராய்ச்சியாளர்களின் அடக்கு முறையால் அவர்களால் எழுதப்படும் நூல்களும், அவர்களும் மேலே வரமுடியாமல் தவிக்கின்றனர்.

இன்றளவும் வெளி வந்த இந்தியச் சரித்திர நூல்களோ அயலார் எழுதியவை. அன்னர் உள்ளது உள்ளவாறு எழுதவில்லை. நம்மவரிலே சரித்திர ஆராய்ச்சியில் சாலச் சிறந்தோரும் சுதந்தரத்துடன் நமது தேச சரிதையை எழுத இன்றுவரை இயலாது போயிற்று. இனிமேலாவது அவர்கள் உள்ளதை உள்ளவாறு எழுதலாம். எழுதியவர்களையும் ஊக்குவிக்கலாம்.

அங்ஙனம் எழுதும் நூலாசிரியரை இனியாகிலும் கொண்டாடுவர் என்பது திண்ணம்.

இந்த மங்கையின் சிலையைக் கண்டதும், உடனே அவளுடைய சரித்திரமும். வீரமும் கண்முன் வரும்படி தீட்டினனே சிற்பி அவனே உயர்ந்தவன்.

"காசியில் வாழ்ந்த மௌரி பந்தன் பாகீரதி பாய் என்பவர்கள் பரம ஏழையர். ஆனல் நற்குணம் படைத்தவர்கள். அவர்களுக்கு 1835-ஆம் ஆண்டு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு, 'மானுபாய்' என்ற பெயரிட்டனர். இவர்கள் வாழ்க்கையில் ஏழையாக வாழ்ந்தாலும், செய்கையில் உயர்ந்தவர்களாக நடந்துகொண்டார்கள். ஆகையால் அக் கிராம மக்கள் இவர்களிடம் தனி அன்பும் விசுவாசமும் வைத்திருந்தார்கள். அக்காலத்தில் பிரமவர்த்தம என்ற நகரத்தை, பாஜிராவ் பீஷ்வா ஆண்டு வந்தார். இந்த பீஷ்வாவிடம் மற்றவர்களைப் போலவே மௌரி பந்தனும் பாகீரதி பாயும் சேர்ந்து வாழ்ந்தார்கள். ஆகையால், "மனுபாயும்" பீஷ்வாவின் சுவீகார புத்திரனுமாகிய, 'நானசாகிப்' சிறுவயது முதல் இணைபிரியாத நண்பர்களாக விளங்கினர்.

இவர்கள் இருவரும் பல இராமாயணக் கதைகளையும் இதிகாசக் கதைகளையும் கேட்டு இன்பம் அடைவார்கள். எங்கு சென்றாலும் இருவரும் ஒன்றாகவே சென்றார்கள். பல கலைகளையும் வீரத்துடன் கசடறக் கற்றனர். இவர்களின் நற் குணத்தைக்கண்ட ஒருவன், இவர்களிடம் தோழமை கொண்டு துலங்க "காந்தியா தோபி" நட்பு கொண்டான். மநுபாய், மங்கைப்பருவம் அடைந்ததும், ஜான்சிநாட்டு மன்னனுன கங்காதர ரவி என்பவன், அவளை மணம் புரிந்தான். திருமணம் ஆனதும் மநுபாய், 'இராணி இலட்சுமிபாய்' என்ற பெயரைச் சூட்டினுள். "பாய்" என்பது அரசகுல மாதருக்குரிய பட்டப்பெயர். இவர்கள் இருவரும் ஜான்சி நாட்டை நல்ல முறையில் அரசு புரிந்து வந்தார்கள். 1852ம் ஆண்டு கங்காதரரால் மரணம் அடைந்தார்.

பிலோ இருதயநாத்

ஆனுல் உயிர் விடும்போது, "மநு பாய்! நீயும் என்னுடன் உயிர் விட்டால், நம் நாட்டை ஆள நமக்குக் குழந்தைகள் இல்லை. ஆகையால், தாமோதரன் என்ற பாலனை மைந்தனுகக் கொண்டு, அவன் வயது வரும் வரையில் நீயே அரசாள வேண்டும்" என்று கூறினுன்.

அதன்படி ஜான்சி நாட்டை, 'தாமோதரன்' என்ற பாலகன் மூலம் அரசியே ஆண்டுவந்தாள். அப்படி அரசாளும் காலத்தில் மக்களின் சுகதுக்கங்களை நேரில் கேட்டு, அவைகளை நீக்குவாள். மாலை மூன்று மணிக்கு வெள்ளை உடை அணிந்து, தர்பாருக்கு வருவதுண்டு. அவள் கொடுக்கும் தீர்ப்புகள் எல்லாம் தெளிவாக இருக்கும். இலட்சுமி பாய் ஏழைகளுக்கும் வயோதிகர்களுக்கும் கோடிக் கணக்கான நன்மைகள் செய்தாள். இராணியாக இருந்தாலும் தன் கீழ் வேலை செய்யும் எல்லா ஆண்மகனுக்கும் மரியாதை கொடுப்பது வழக்கம். ஜான்சி இராணி அரசாளும் காலத்தில், வியாபாரம் செய்ய வந்த வெள்ளை ஜாதியினர் அரசாளும் பதவிக்கு வர, நெறியில்லா நெறியில் அவன் அப்பன் வீட்டுப் பூமியைப்போல், சட்டம் ஒன்றிட்டனர். அன்று லார்டுடல்ஹௌசி என்ற கவர்னர், "ஜான்சி நாட்டை ஆண்ட அரசன் பிள்ளையின்றி மாண்டதால், அந்நாடு ஆங்கிலேயருக்கே சொந்தம்" என்று அவன் ஆணையிட்டான்.

இவ்விதமாக மூளையின்றி முட்டாள்களாக அன்று நடந்ததால் தான், நமது திரு. ராஜாஜி அவர்கள் அதிகாரத்திற்கு வந்ததும், "இந்த அயோக்கியர்களுக்குத் தமிழ் நாட்டில் சிலையா?" என்று சென்னையில் இருந்த பல ஆங்கிலேயர்களின் சிலைகளை அப்புறப்படுத்தினுர் என்பதை நினைக்கும்போது உண்மையில் அவருடைய தேச பக்தியைப் போற்ற வேண்டும் அல்லவா?

அங்ஙனம், "ஆங்கிலேயருக்குச் சொந்தம் என்று 1858 ஆம் ஆண்டு, "சர் இயூரோச்" அன்றும் ஆங்கிலேயர் சேனையுடன் ஜான்சி நாட்டின் மேல் படையெடுத்தார். தேசத் துரோகி களாகிய, ஐதரர்பாத், சிந்தியா முதலிய குறுநில மன்னர்கள் ஆங்கிலேயப் படைகளுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்து கொடுத்தார்கள். ஜான்சி இராணியின் படையிலும் சிலர் தேசத் துரோகிகளானுர்கள். ஆனுல், யார் எப்படி யாருடன் சேர்ந்துகொண்டாலும் சரி, தன் சேனைகளுக்கு ஊக்கம் கொடுத்து, ஆண் வீரனைப் போல் இரும்புக் கவசம் அணிந்துப் போர் புரிந்தாள். குருதி வெள்ளம் போல் ஓடியது. உணவுப் பொருள் வைத்திருக்குமிடம், நீர் நிலைகள், வெடிமருந்துகளிருக்குமிடம் முதலிய இடங்களை தேசத் துரோகிகள், ஆங்கிலேயருக்குக் காட்டிக் கொடுத்தனர். ஆனுல் நாளைக்கு அவர்களுக்கும் இக்கதிதான் என்பதை உணராதவர்போலும்.

"மற்ற சிற்றரசர்களும், தேசத் துரோகிகளும் நமக்கு உதவிசெய்யாவிட்டால், இந்தப் பெண் அரசிகாளியின் கையில் அவ்வளவு போர் விரர்களும் மடிய வேண்டியவர்கள்தான்" என்று ஆங்கிலேய அதிகாரிகள் பின்னுல் உணர்ந்து பேசினுர்கள். சிறு வயது முதல் தோழமைக் கொண்டு சகோதரனுக விளையாடிய தாந்தியா தோபிக்கு செய்தி போனது. உடனே அவன் ஒரு படையுடன் வரும் வழியில் யார் யார் ஆங்கிலேயருக்கு உதவி செய்தார்களோ, அவர்களை எல்லாம் போரில் வென்று, அவர்களிடமிருந்து பல பொருள்களைக் கொண்டுவந்தான். பிறகு தாந்தியா தோபி படைகள் ஜான்சி நாட்டை முற்றுகையில் சூழ்ந்திருந்த ஆங்கிலேயர் படைகளைத் தாக்கின. சின்னு பின்னமாக்கின. ஆனுல் திடீரென்று ஆங்கிலேயர் படைக்கு உதவி வரவே தாந்தியா தோபியின் படைகளில் பலர் திரும்பி ஓடினர். அங்ஙனம்

ஓடிய போர் வீரர்களின் பொருள்கள், ஆங்கிலேயருக்குக் கிடைத்தன.

இதைக் கண்ட ஜான்சிராணி, "வீரர்களே தாந்தியதோபி நமக்கு உதவிக்கு வருவார்" என்று நாம் போரில் இறங்கினோம். ஆகையால் நாமே போர் புரிவோம்" என்று தன் போர் வீரர்களுக்கு ஆறுதல் கூறினாள்.

இராணியின் வீரத்தைக் கூறுவதில் என்ன பயன். முடிவில் ஜான்சி இராணியின் கோட்டை சில தேசத் துரோகிகளால், ஆங்கிலேயரிடம் கிடைத்தது. இராணியின் உள்ளம் மற்றவர்களின் உதவியை நாடி, மறுபடியும் இந்த வெள்ளையர்களை இரத்தவெள்ளத்தில் ஆக்கவேண்டும் என்று எண்ணினாள்.

ஆகையால் இரும்பு கவசம் பூண்டு, பச்சைப் பாலகன் தமோதரனை முதுகில் கட்டிக்கொண்டு, சில படை வீரர்கள் உதவியாகப் பின் தொடர, ஜான்சி இராணி இரண்டு நாட்கள் பரியின் மேல் பறந்தாள். மறுநாள் இராணி, "கல்பிநகரம்" சேர்ந்தாள். இராணியின் உயிரைக் காத்த பரி, கல்பி நகரம் சேர்ந்ததும் 'தொப்'பென்று தரையில் விழுந்து உயிர் விட்டது. கல்பி நகரத்தின் அரசன் ஜான்சி இராணியை அன்புடன் வரவேற்றான்.

"இராணி கல்பி நாடு சேர்ந்தாள்!" என்று கேள்விப்பட்டதும், ஆங்கிலேயர் படை கல்பியின்மீது போர் தொடுத்தது. இருபத்தொன்றே வயதுடையவள் செய்யும் போரைக் கண்டு, எல்லோரும் வியந்தார்கள்.

கடைசியில் கல்பி நகரமும் கைப்பற்றப்பட்டதால், இராணி குவாலியர் நாட்டிற்கு உதவிக்குச் சென்றாள். இவள் வருகையைக் கண்ட அந்நாட்டு அரசன், ஓடிவிட்டான். ஆனால் அந்த ஊர் மக்கள் ஜான்சி இராணியுடன் சேர்ந்து கொண்டு ஆங்கிலேயரை எதிர்த்து போர் புரிந்தனர்.

ஆங்கிலேயரின் மற்றொரு படை, 'ஜெனரல்ஸ்மித்' தின் தலைமையில் குவாலியரைத் தாக்கியது. ஜான்சி இராணியும் தன் படையுடன் ஆங்கிலேயர் படையைத் தாக்கினாள்.

இராணியின் பழைய பரி இல்லாததால், புதிய குதிரையின் உதவி சரியாககிடைக்க வில்லை. ஆகையால் பகைவரின் வாள் இராணியின் தோளை வெட்டியது. ஆனால் இராணியின் வாள், தன்னை வெட்டியவனை உடனே தரையில் வீழ்த்தியது. ஆனால், இராணியும் பரியின் மேல் சாய்ந்தாள்.

தன் பாலகன் தாமோதரனை அணைத்துக்கொண்டு வீர மங்கையின், கண்கள் அந்நியனின் கொடி கோட்டையின் மேல் பறப்பதைப் பார்க்க மனமில்லாமலும், தேசத் துரோகிகளின் முகத்தைக் காணக் கண்ணில்லாதவளைப் போலவும் மூடின" என்று சிலையின் வீரத்தைக் கூறி என் கண்களையும் மூடினேன். என் கண்களிலும் கண்ணீர் கசிந்தது. இவ்வளவையும் கேட்ட திரு. ஜார்ஜ் அவர்கள், இவ்வளவு வீரத்தோடு உருவாக்கிய சிற்பிக்கே என் வணக்கம் உரியது" என்று கூறி சிலையை வணங்குவதைப் போல் உள்ளத்தில் சிற்பியை வணங்கினார்.

இல்லாத ஒன்றுக்காக....

சோவியத் ரஷ்யாவின் ராணுவ அதிகாரிஒருவன் நெப்போலியனிடம் "நாங்கள் கௌரவத்திற்காகப் போராடுகிறோம். பிரஞ்சுக் காரர்களைப் போல லாபத்திற்காக அன்று" என்றுகூறினான்.

"முற்றிலும் சரிதான் எவரிடம் எது இல்லையோ அதற்காக அவரவர் போராடுகின்றனர். என்று பட்டென்று பதில் கொடுத்தான் மாவீரன் நெப்போலியன்!

கொலை செய்தவர் யார்? இரத்தக் கறையை வைத்துக் கண்டுபிடிக்க புதிய முறை! யாருடைய ரத்தம் ஆணு? பெண்ணு? மனிதனு? மிருகமா? வெள்ளாவி வைத்து வெளுத்த துணியிலும் உள்ள ரேகையைக் காட்டும் கருவி!

ஒரு கடுகளவு இரத்தக் கறையிலிருந்து குற்றத்தை நிருபிக்கஅல்லது தவருக குற்றம் சாட்டப்பட்டவரை விடுவிக்க சாத்தியமாகும் முறை ஒன்று ஒரு பிரிட்டிஷ் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் பெண். டாக்டர் பார்பாரா டாட் என்னும் அந்தப்பெண் லண்டன் ஆஸ்பத்திரி வைத்தியக் கல்லூரியில் குற்றவியல் பகுதியில் விரிவுரையாளர். மற்றவர், டாக்டர் ராபின் கூம்பஸ் என்பவர், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சியாளர்.

போதிய அளவு இரத்தக்கறை கிடைக்காத சந்தர்ப்பங்களில் நீதிமன்றங்களில் சாட்சி கூறும் இரத்த ஆய்வு நிபுணர்களுக்கு எதையும் நிச்சயமாகக் கூறமுடியாமல் போவதுண்டு. இந்த நிலைமையை மாற்ற இப்புதுமுறை பெரிதும் பயன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய முறையும் புதிய முறையும்

ஈரமான இரத்தத்தைஒட்டு முறையிலும் இரத்தக்குறையை உறிஞ்சுதல் முறையிலும் தற்போது பரிசோதித்து வருகிருர்கள். 'அக்ருடினேசேஷன்' எனப்படும் ஒட்டு முறையில், இரத்தத்திலுள்ள சிகப்பு அணுக்களை 'ஆண்டி-செரம்' என்று அழைக்கப்படும்பகைப்பாலால்ஒட்ட வைத்து பிறகு அதை சோதனைக் கூடங்களில் பல இன இரத்தங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து குறிப்பிட்ட இரத்தம் எந்த இனத்தைச் சேர்ந்தது என்று நிர்ணயிக்கிருர்கள்.

புதுமுறையில் ஒருசிறிய இரத்தக் கறையையும் பரிசோதித்து அது எந்த இனத்தைச் சேர்ந்தது என்று நிருபிக்கலாம், கறைப்பட்ட துணியிலிருந்து மிகமிகச் சன்னமான இழையை ஈர்த்து, அதற்கு'ஆண்டி-செரம்' (பகைப்பால்) பெய்து சோதனைக் கூடங்களில் பல்வேறு இன இரத்தங்களுடன் நுணுக்கமாக ஒப்பிட்டுப் பார்த்து, அதை மிருக இரத்தமா, அல்லது மனித இரத்தமா, என்பதையும் பின்னதாயின் அது எந்த இனத்தைச் சேர்ந்தது என்பதையும் உறுதியாகக் கூறலாம். நான்கைந்து வருஷங்களுக்கு முற்பட்ட இரத்தக் கறைகளை சோதிப்பதிலும் புது முறை வெற்றியுடன் கையாளப்பட்டிருக்கிறது, கொலைகாரர்கள் தங்கள் கறைப்பட்ட துணிகளை வெள்ளாவியில் வைத்தோ அல்லது வேறு முறைகளிலோ துவைத்து கறைகளை நீக்க முயலுவது சகஜம். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் இரத்த இன நிர்ணயம் மிகக்கடினமாக இருந்து வருகிறது. புதுமுறை இப்போது இதையும் எளிதாக்குவதாக நடத்தப்பட்ட சோதனைகள் நிருபிக்கின்றன.

ஆராய்ச்சிக்கு வித்து

பிரிட்டிஷ் அகாடெமி ஆஃவ் போரன்ஸிக் ஸைன்ஸஸ் ஆண்டு கூட்டம் ஒன்றில் பங்கு கொள்ள டாக்டர் டாடும், டாக்டர் கூம்ப்ஸூம் வந்திருந்

கொலை செய்

அண்மையில் நடைபெற்ற பெரிய கொலை வழக்கு எது? துப்பறிவதில் திறமை பெற்ற நிலையம் எங்கே உள்ளது? புது முறையைக் கண்டுபிடித்த அந்த புகழுக்குரியவர்கள் யார்? எவர்?

தனர். அவ்வமயம் துப்பறியும் நிபுணர்கள் போதிய அளவு இரத்தக் கறை கிடைக்காத சந்தர்ப்பங்களில் இரத்த இன நிர்ணயத்திற்காக மிக நுணுக்கமான புது முறையைக் கண்டுபிடிக்குமாறு விஞ்ஞானிகளுக்கு வேண்டுகோள் விடுத்தனர். இதைக் கேட்ட இருவரும் கூட்டு ஆராய்ச்சி நடத்த ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

ஓராண்டுக்கும் மேலாக டாக்டர் டாட் இரு சிறிய பரிசோதனைக் கூடத்தில் ஆராய்ச்சி செய்தார், ஒரு பூதக்கண்ணாடி பலவிதமான சிமிட்டாக்கள், கொரடாக்கள், கண்ணாடி வில்லைகள் இவைகளே அன்னாருடைய கருவிகள். ரகம் ரகமான துணிகள்மீது பல இன இரத்தத்தைச் சிந்தி அது உலர்ந்து கறையான பிறகு அதற்கு பல சோதனைகள் செய்து, புதுமுறையை அன்னார் கண்டுபிடித்தார். யாருடைய வேண்டுகோளினால் தன் ஆராய்ச்சிக்கு வித்திடப்பட்டதோ அதே பிரிட்டிஷ் அகாடெமிஆவ்ஃ போரன்ஸிக் சயன்ஸஸ் குழுவினருக்கு தமது கண்டுபிடிப்பை டாக்டர் டாட் அண்மையில் விளக்கிக் கூறினார். ''நாசூக்காகவும் எளிதாகவும் செயல்படும் முறை'' என்று தம் முறையை அன்னார் வர்ணிக்கிறார்.

''பெரும்பாலான கறைகளைச் சோ

தவர் யார்?

திக்க உதவும் தற்போதைய முறையைத் தம்கண்டுபிடிப்பு என்று தாம் எதிர்பார்ப்பதில்லை என்றும், குற்றவியல் ஆராய்ச்சி சாலைகளுக்கு தம் முறை மேலும் ஒரு கருவியாகவே விளங்கும்'' என்றும் அவர்கூறுகிறார். துப்பறியும் நிபுணர்கள் டாக்டர் டாடின் கண்டு பிடிப்பு கொலை, தாக்குதல் முதலிய வழக்குகளை நிரூபிப்பதற்குப் பெரிதும் உதவும் என்று பாராட்டுகிறார்கள். துப்பறியும் கேந்திரமான 'ஸ்காட்லாண்ட் யார்டு' தனக்கே உரித்தான சோதனைகளுக்கு இப் புது முறையை உள்ளாக்கி வருகிறது. அமெரிக்காவிலும், கனடாவிலும் உள்ள விஞ்ஞானக்கூடங்கள் இந்த முறையைப் பரீட்சித்து வருகின்றன.

அண்மையில் நடந்த கொலை வழக்கொன்றில் பிரிட்டனில் இம்முறை வெற்றிகரமாக கையாளப்பட்டிருக்கிறது. ஆனால் அதிகாரபூர்வமாக அல்ல. பிரஸ்தாப வழக்கில் தன் நண்பனை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டவர் தன்னுடைய டிரவுசரைத் நன்றாக துவைத்து இரத்தக் கறைகளை நீக்கி இருந்தார். இந்த உடுப்பை டாக்டர் டாட் அனுமதி பெற்று ஆராய்ந்து, முழங்கால் பாகத்தில் இருந்த ஒரு சிறு இரத்தக் கறையைக் கண்டுபிடித்து தம் முறையின் மூலம் அந்தக்கறை இறந்தவருடைய இனத்தைச் சேர்ந்தது என்று நிரூபித்துள்ளார். இத்துடன் திருப்தியடையாத டாக்டர் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்தி, தம்முறையை மேலும் எளிதாகவும் குறிப்பாக பழைய இரத்தங்களை நிர்ணயிக்கவும் பாடுபடுவார் என்று தெரிகிறது.

படித்தறிய வேண்டிய சிறப்புக் கட்டுரை

வளரும் விஞ்ஞானம்

இரண்டாம் போருக்குப் பிறகு நகரங்களிலும் தொழிற்றுறையிலும் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டுள. அன்றாட வாழ்க்கையில் புதுமையான பொருள்களையும் வசதிகளையும் கையாளுவதால் புதுப்புதுச் சிக்கல்களும் புதுமையான விபத்துக்களும் ஏற்படுகின்றன. தீயணைக்கும் படையினர் பல புதிய செய்திகளைத் தெரிந்துகொண்டால்தான் தற்காலத்தில் திறமையாகச் செயலாற்ற முடியும். இருபதாண்டுகளுக்கு முன்பு, இன்றுள்ளதுபோல சிக்கல்கள் இல்லை; விதம் விதமான விபத்துக்களும் இல்லை. அன்று திறமையும் பயிற்சியுமிருந்தால் தீயை அணைத்துவிட முடியும். இன்று அப்படி இல்லை. தீயணைப்புப் படையைச் சேர்ந்தவர்கள் விஞ்ஞான அறிவுடையவர்களாக இருத்தல் அவசியம். புதுவகைப் பிளாஸ்டிக் பொருளுடைய தீத்தடுப்பு ஆற்றலைப் பற்றியும், அழுத்திப்பின்னப் பட்ட காங்கிரீட்டின் தீயைத்தாக்கும் ஆற்றலைப் பற்றியும், ஜெட் எஞ்சினுக்குப் பயன்படும் எரி எண்ணெய் எவ்வளவு விரைவில் தீப்பற்றிக்கொள்கிறது என்றும் இதுபோலப் பலசெய்திகளைத் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். பல உயிர்களைக் காப்பதும் ஒரு தொழிற்சாலையில் சேதத்தைத் தடுப்பதும் தீயணைப்புப்படை வீரரின் அறிவைப் பொறுத்த செயலாகும். விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்படக்கூடிய சிக்கல்களை முன்கூட்டி அறிந்து, ஸர் ரேயில் ஒட்டன் ஹவுஸிலுள்ள தீயணைப்புப் பயிற்சிக் கல்லூரியில் விஞ்ஞான தேசீயப் பயிற்சிப் பிரிவு ஒன்றை நிறுவினார்கள். சோதனைக் கூடம், செய்முறை விளக்க அறைகள், சாதனங்கள், நிபுணர்கள் சேவை எனப் பல வசதிகள் நிறைந்த இந்தப் பிரிவில்தீயணைப்புப் படையில் புதிதாகச் சேர்ந்தவர்களும், நீண்டகாலமாகப் பணியாற்றும் அதிகாரிகளும்கூட, ஒன்று முதல் பதினாலு வாரங்கள் வரையில் நடைபெறும் பல்வேறு பயிற்சி வகுப்புக்களில் பயின்று செல்கிறார்கள். இந்தப் பிரிவின் பத்தாண்டு நிறை

வை அண்மையில் கொண்டாடினர்கள்.

ஆண்டு விழாவை யொட்டி வெளியிட்ட தோர் பிரசுரத்திலுள்ள ஒரு பகுதியை இங்கு தருகிறோம்: "காலத்திற்கு காலம் கட்டடங்களைக் கட்ட உபயோகிக்கும் பொருள்களும் மாறுகின்றன. இரண்டாம் போருக்கு முன்பு செங்கலும் மரமும் உபயோகித்துக்கட்டிய மாளிகைகளுக்கும், போருக்குப் பிறகு நிர்மாணித்த கட்டடங்களுக்கும்வேற்றுமைகள் பல உண்டு. வெளிமுகப்பிலும், உட்புற அமைப்பிலும் புதிய கட்டடங்கள் பழைய கட்டடங்களுக்கு மாறுபட்டவை. புதிய கட்டடங்கள் பல மாடிகளுள்ளவை; நூதனப் பொருள்களைக்கொண்டு புதிய உத்திமுறைகளைக் கையாண்டு நிர்மாணிக்கப் பட்டவை. கட்டடக் கலையிலேற்பட்ட புரட்சிகரமான மாறுதலால் புதுப்புது விபத்துக்களும் நேரிடுகின்றன. கட்டடக் கலை முன்னேற்றம் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொண்டால்தான், தீயணைப்புப் படையினர் மீட்சிப் பணியைத் திறம்படச் செய்ய முடியும்."

புதிய பொருள்கள் உத்திமுறைகளால் ஏற்படக்கூடிய அபாயங்களையும் சிக்கல்களையும் தெரிந்து கொள்வதற்கே பயிற்சி அவசியம். நேரக்கூடிய அபாயங்களைப்பற்றி தெரிந்துகொண்டால்தான், அவற்றைத்தடுக்கவும் நேர்ந்த பிறகு பரிகாரம் காணவும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும்.

புதுமுறைப் பயிற்சி வகுப்புக்களில் கல்லூரி ஆசிரியர்களைத் தவிர வெளியிலிருந்து வரும் நிபுணர்களும் விரிவுரை யாற்றுகிறார்கள். பயிற்சித் திட்டத்தில் விரிவுரை வகுப்பு, செய்முறை விளக்கம், கவாத்து எனப்பல அம்சங்கள் உண்டு. அண்மையில் நடந்த பயிற்சி வகுப்பில் பிரிட்டிஷ் அணுவாற்றல் துறை நிர்வாகத்தைச் சேர்ந்த பிரதான அதிகாரி ஒருவர் அணுவிசை நிலையங்களைப் பற்றியும் தொழிற்றுறையில் ரேடியோ-ஐஸோடோபுகளின் உபயோகம் பற்றியும் உரை யாற்றினார். வேறு இரண்டு மேற்பார்வையாளர்கள் தற்காலத் தொழிற்சாலைகளில் ஏற்படக்கூடிய மின்சார விபத்துக்களைப் பற்றியும் வெடி விபத்துக்களைப் பற்றியும் உரை யாற்றினார்கள். நவீன வசதிகள் நிறைந்த இன்றையக் கட்டடங்களில் விபத்து ஏற்பட்டால் வெளியே தப்பியோடும் வழிகளை, கட்டடக்கலையில் ஈடுபட்டுள்ள ஒருவர் எடுத்துக் கூறினார்.

தற்காலக்கட்டடநிர்மாணப் பணியில் கண்ணாடி,அலுமினியம்,பிளாஸ்டிக் பொருள்கள், நானாவித வர்ணங்கள், செயற்கை முறையில் தயாரிக்கப் பட்ட பலகைகள், எனப் பல பொருள்களை உபயோகிக்கிறார்கள், இவற்றின் இயல்புகளைப் பற்றியும் தீத்தாக்குதலால் ஏற்படக்கூடிய மாறுதல்களைப் பற்றியும் நிபுணர்கள் கூறும் செய்திகளை பயிற்சியாளர்கள் தெரிந்து கொள்கிறார்கள். 'ஏர் கண்டிஷன்' ஏற்பாடு, ஓசைத்தடுப்புச் சாதனங்கள், தானேயியங்கி தீயணைக்கும் பொறிகள் இவை எல்லாம் நவீனக் கட்டங்களில் இடம் பெறுகின்றன. இவைபற்றியே பல செய்திகளையும் விபத்துக் காலத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்களையும் அவற்றைச் சமாளிக்கக்கூடிய உபாயங்களையும் தெரிந்துகொள்வது அவசியமாகிறது. பல நிலை மாடக்கட்டடங்களில் மீட்சிப்பணி புரிவதற்கும் தனிப்பயிற்சி தேவை. தொழிற்சாலைகளில் பலவகை அமிலங்களை உபயோகிப்பதால் அவற்றாலேற்படக்கூடிய விபத்துகளைப் பற்றியும் தடுப்புமுறைகளைப்பற்றியும்தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. தொழிற்சாலைகளில் உபயோகிக்கப்படும் கதிரியக்கப் பொருள்கள், அபாய காலத்தில் அவற்றைக் கையாளும் முறைகள் முதலியவை பற்றியும் அறிந்து கொள்வது அவசியம்.

பயிற்சி வகுப்புகளில் இவை போன்ற பல செய்திகளை உரை மூலமும் செய்முறைப் பயிற்சி மூலமும்

மாணவர்கள் புரிந்துகொள்கிறார்கள். இன்று ஆக்கத் துறையில் அணுவாற்றல் உபயோகம் அதிகரித்து வருகிறது. அணுவின் அமைப்பு, ஆற்றல், கதிரியக்கப் பொருள்கள், கதிரியக்கத்தால் திசுக்களுக்கு ஏற்படும் கேடு, தடுப்புமுறை செவ்வனே ஆற்ற முடியும்.

விமானத்துறை முன்னேற்றம் பற்றியும் தீயணைப்புப் படையினர் அறிந்து கொள்வது அவசியமாகிறது. விமானத்தின் அமைப்பு, எரிபொருள்கள், விபத்துக் காலத்தில் விமானத்துக்குள் செல்லக்கூடிய உத்தி முறைகள், உள்ளிருப்பவர்களை மீட்கும் பணி எனப்பல செய்திகளைப் போதிக்க ஓட்டல் ஹவுஸில் சாதன வசதிகள் உண்டு; சிறந்த ஆசிரியர்களும் உண்டு.

ஓட்டல் ஹவுஸ் கல்லூரி நிர்வாகிகள் வாழ்க்கையில் ஒவ்வோர் அம்சத்தில் ஏற்படும் முன்னேற்றத்தையும் கவனித்து சாதன வசதிகளை அதிகரித்துக் கொள்கிறார்கள். புதிய சிக்கல்களையும் அபாயங்களையும் கவனித்து தடுப்பு முறைகளையும் துயர்துடைப்பு முறைகளையும் உருவாக்குகிறார்கள்.

ஒரே தெய்வம்! ஒரே நீதி!

மனிதன் பிறக்கும்போது வேறுபாடு இல்லாமல் பிறக்கிறான். பிறகு சூழ்நிலையில் மதம் அவனைப் பற்றிக் கொள்கிறது.

நாம் பொருளாதாரத்தில் லாப நஷ்டக் கணக்கைப் பார்ப்பது போல நம்மைப்படைத்த சக்தியையும், அதன் பலன் என்ன? என்பதையும் எடைபோட்டுப் பார்க்கவேண்டும். அப்போதுதான் நாம் பிறந்த பயனை வாழ்க்கையில் அனுபவிக்க முடியும்.

அமெரிக்க நாட்டில் சட்டம் இல்லை. நடைமுறையில்தான் சட்டம் இருக்கிறது. ஆனால் நம் நாட்டில் சட்டம் போட்டு இருக்கிறோம். அதன் படி நடப்பது இல்லை.

போடப்பட்டு இருக்கும் சட்டத்தில் இருந்து எப்படித் தப்பிக்க வேண்டும் என்றுதான் முயற்சிக்கிறோம்.

முன்பு நமது நாட்டில் ''அரசு'' ஆக இருந்தது. இப்போது ''அரசியல்'' ஆக இருக்கிறது. முன்பு அரசுவுக்கும் மதத்தலைவர்களுக்கும் தொடர்பு பிரிக்க முடியாமல் இருந்து வந்தது.

ஆனால் இப்போது அரசியலைப் பற்றிப் பேசும் என்னைப்பார்த்து, இவருக்கும் அரசியலுக்கும் என்ன தொடர்பு? என்று கேட்கிறார்கள். இது பொருத்தமான கேள்வியாக எனக்குத் தெரியவில்லை.

மதத் தலைவர்கள் தங்களுக்குப் பின்னால் மக்கள் இருப்பதை நினைப்பது இல்லை!

சில மதத் தலைவர்கள் சித்தாந்தத்தைப் பற்றி மக்கள் மத்தியில் அழகாகப் பேசுகிறார்கள். ஆனால் அதன்படி அவர்கள் நடந்து கொள்வது இல்லை.

கோவிலுக்கும் குடிசைக்கும் இருக்கும் தூரம் குறைய வேண்டும். குடிசை மக்கள் கோவிலுக்குப் போனால் பிரசாதம் கொடுப்பது இல்லை. சில இடங்களில் திருநீறுகூடத் தருவது இல்லை. பத்து ரூபாய் கொடுத்தால் கொட்டு மேளத்துடன் பிரசாதம் கொடுக்கிறார்கள். ஏன் இந்த நிலை நாட்டில் இருக்க வேண்டும்!

—தவத்திரு அடிகளார்

தனி வீட்டில்

அவளொருத்தி நானொருவன் தனித்தி ருந்தோம்;
அதுவோவோர் பெரும்வீடு; என்ன செய்வோம்!
பவளவிதழ் தனைத்திறந்து பிறையைக் காட்டிப்
பாலுடனே தேனுண்ண ''வாவா'' என்றாள்;
''அவலின்றி வெறும்வாயை மெல்லு வோன்நல்
அவல்கிடைத்தால் விடுவானா?'' என்னை ஈர்த்த
கவலையெலாம் பறந்திடவே விரைந்து சென்றேன்;
கட்டியொரு முத்தமிட்டேன்! சிரித்துப் பெற்றாள்!

நிலவிருக்கும் முகமுடையாள்; உள்ளம் கொள்ளும்
நீலவிரு விழியுடையாள்; முத்துப் பல்லாள்;
கலகலக்கச் சிரிக்கின்ற திறத்தைக் கொண்டாள்;
கற்கண்டும் குழல்யாழும் தோற்கும் பேச்சாள்;
சலசலக்கும் சதங்கையொலி காதில் கொஞ்சச்
சதிராடி முன்நிற்பாள்; அவளைக் கண்டால்
நலமளிக்கும் மகிழ்வாலே பூத்துப் போவேன்;
நானவளை அணைத்திட்டேன்; முத்தம் ஈந்தோம்

இருவருமே இணையாகி மகிழ்ந்தி ருந்தோம்;
ஏதேதோ அவள்பேசிக் கொண்டி ருந்தாள்;
உருவமைய வந்தவளை மடியி ருத்தி
ஊக்கமுடன் நான்கேட்டுக் கொண்டி ருந்தேன்;
இருவிழியால் கதைபேசி என்றன் நெஞ்சின்
இயக்கத்தைக் கணக்கிட்டாள்; அவள் தந்தை
அருகினிலே வருபோதும் அஞ்ச வில்லை;
அவளென்றன் நண்பனுடைக் குழந்தை ஆவாள்!

சொக்கு சுப்பிரமணியன், M. A.,

கல்வியும் புகழும்

கல்வி ஒரு மனிதனுக்குவளர்ச்சியும், பயிற்சியும் தருகிறது. இப்படி அவன் பெறும் பயிற்சியும், வளர்ச்சியும் சமுதாய வாழ்வில் அவனைச்சிறப்புடையவனுக்குகிறது. இவ்வாறு அவன் பெறும் சிறப்பு, தனிப்பட்ட முறையில் அவன் முன் குறுக்கிடும் பிரச்னைகளைச் சுலபமாய்ப் புறங்கொள்ள உதவுவதோடு, சமூக வாழ்வில் குறுக்கிடுகின்ற பிரச்னைகளிலும் துணிவுடன் நடந்து கொள்ள உதவுகிறது. கல்விப் பயிற்சி புகழ் என்ற பாதையில் நடக்கும் போது குறுக்கிடுகின்ற தடைகளைத் தகர்த்தெறிய உதவுகின்ற ஓர் ஆயுதம்என்றுணர்தல் வேண்டும்.

மனிதன் இன்று கல்விப் பயிற்சியினுல் பலப்படுத்தப் பட்ட அறிவு, பண்பின் துணை கொண்டு தன் பிரச்னைகளை ஒதுக்கி விட்டு சுகமாக, இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். இந்தக் காட்சியையா நாமின்று காணுகின்ருேம்?...இல்லை. ஆயிரக்கணக்கான மாணவர்கள் உயர்தரக் கல்வி பெற்று கல்லூரியை விட்டு வெளிவருகின்றனர். இப்படி வருகின்ற அவர்கள், தாங்கள்பெற்ற கல்வியின் துணை கொண்டு தங்கள் வாழ்க்கையைச் சீர்பெற அமைத்துக் கொண்டு புகழ்ப் பாதையில் நடந்து நல்வாழ்வு வாழ்கின்ருர்களா ? — இல்லவே இல்லை!

தாங்கள் கல்விச் சாலைகளில் பெற்றநற்சான்றிதழ்களைக் கையிலேந்திக் கொண்டு '' வேலை, வேலை'' என்று தங்கள் படிப்பை ஏலம் போடுகின்றஅவலக காட்சியைத்தான் காண முடிகிறது. வாழ்க்கைப் பிரச்னையைத் தீர்க்க வேண்டிய கல்வி, வாழ்க்கைப் பிரச்னைக்கே உரியதாகஆகிவிட்ட பரிதாப நிலை, எவ்வளவு வேதனையைத் தருகிறது. நமது வாழ்க்கைக்கு எந்த வகையிலும் துணை புரியாத கல்வி முறை; நடைமுறையிலிருப்பதுதான்காரணம். இன்று கிடைக்கப் பெறும் கல்வி வெறும் ஏட்டுக் கல்வி. ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது'' என்ற பழமொழிக்கு ஈடு கட்டுவதாகக் கல்வி நமக்குக் காட்சி அளிக்கிறது.

குரங்காட்டியின் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து குட்டிக் கரணம் போடும் குரங்குக் குட்டியைப் போன்று, புத்தகங்களில் உள்ள பலசெய்திகளைவிழுங்கி, தேர்வின் போது அவற்றை உமிழ்வது தான் இன்றையக் கல்வி, உடலின் ஒரு பகுதியை மட்டுமே வளர்க்கின்றது. கல்வியானதுமனிதனது உடலை வளர்க்க வேண்டும். அதே நேரத்தில்தான் மனதையும் விசாலப்படுத்த வேண்டும். மனிதன் பெறும் கல்வி அவனுக்கு வளர்ச்சியையும், சமுதாய வாழ்வில் இணைவதற்கான பயிற்சியையும் தருவதாக இருத்தல் வேண்டும். தனி மனித வளர்ச்சியும், பயிற்சியும் சேர்ந்து வாழும் போதுதான் அது பிரகாசிக்கத் தொடங்குகிறது.

இன்றைய படிப்பாளியால் சமுதாயத்துக்கு எவ்விதப் பயனு,

மில்லை. அது மட்டுமல்ல, அவன் சமுதாயத்துக்கு வேதனை தரும் ஒரு பாரமாகவுமிருப்பான். கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் ஒரே மாதிரியான பாடங்களைப் பயிலுகிறார்கள். அப் பாடங்கள் அவர்களை ஒரே மாதிரியாக உருவாக்குகின்றது. கல்விப் பயிற்சி முடிந்ததும், அவர்கள் ஒரே மாதிரியான வேலையை நோக்கிப் படையெடுக்கிறார்கள் காரியாலய வேலைகளுக்கு அப்பாற் பட்ட தொழிற்றுறைகளில் ஈடுபட அக் கல்வி உதவிபுரிவதில்லை. அதனால் அவர்கள் வாழ்க்கையை வெறுக்கின்றனர். பனி நிறைந்த ஓரிடத்திற்குப் புதிதாக சென்ற ஒருவன் சிக்கலைத் தடுக்க முடியாமல் தடுமாறுகிறான். இதற்குத் திடமான நம்பிக்கையும் உடலுறுதியும் தேவை. அது போன்று சிக்கல் நிறைந்த வாழ்க்கைப் பாதையில் திடமாக அடியெடுத்து வைக்க மூளையின் ஒரு பக்க வளர்ச்சி மட்டும் போதாது. பல துறைகளில் அனுபவம்பெற்ற பூரண வளர்ச்சி பெற வேண்டும்.

புத்தகப் படிப்பு கல்வியின் ஒரு பகுதியாக இருக்க முடியுமே தவிர, பூரணமாகக் கல்வியாகி விட முடியாது. முடியவே முடியாது. எனவே புத்தகப் படிப்பை மட்டும் கல்வியாக மதிக்கவில்லை. ''சில விடயங்களை மனப்பாடம் செய்வது மனிதனால் மட்டும் தான் முடியுமா? குரங்குகள் கூட குரங்காட்டி சொல்லித் தரும் வித்தைகளை ஞாபகத்தில் வைத்திருந்து, அவன் சொல்வது போன்றே செய்கிறது'' என காந்தியடிகள் கேலி செய்கிறார். அதனால் இன்றுள்ள புத்தகக் கல்வி முறையை மாற்றியமைத்துத் தொழிலோடிணைந்த கல்வி முறையைச் செயல் முறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று கூறியிருக்கிறார்-மகாத்மா காந்தி.

குழந்தைகளுக்கு இயல்பாகவே உழைப்பின் மீது ஆர்வமிருக்கிறது. சிறு குழந்தைகள் எப்பொழுதாவதுஅமைதியாக இருப்பதைக் காண முடிகிறதா? முடிவதில்லை. ஒரு குறிப்பிட்ட வயது வரைகுழந்தைகள் தமக்கே இயல்பான உழைப்பு மனப்பான்மையை விளையாட்டுக்கள் மூலம் வெளிப்படுத்துகிறார்கள். ஐந்து வயதுவரை குழந்தைக்கு உண்ணுவது, உறங்குவதை விட விளையாட்டே முக்கியமாக இருக்கிறது. பிறகு பள்ளிக்கூடம் என்ற சிறைச்சாலைக்கு அனுப்புகிறோம். அங்கே சில பிள்ளைகள் குறும்புத்தனமாக இருக்கின்றனர். சில பிள்ளைகள் சாதுவாக இருப்பதையும் கண்கூடாகக் காண்கிறோம். குறும்புத்தனமாக இருக்கின்ற அப்பிள்ளையின் எதிர்க் காலம் கட்டுப்பாட்டிற்குள் அடங்குகிறது. ஆனால் நல்ல பிள்ளைகள் என்ற பெயரை வாங்கிய சில பிள்ளைகள் எதிர் காலத்தில் சோம்பேறிகளாக மாறுவதையும் காணலாம். இயற்கையை ஒட்டியே வாழ வேண்டும். இயற்கையே அவர்களுக்கு உழைப்பில் ஆர்வத்தைத் தருகின்றது.

பள்ளியில் ஒரு சிறுவன் செய்கின்ற தொழிலின் வருவாய் அவனது கல்விச் செலவைக் கட்டுப்படுத்தும் வண்ணம் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்பொழுது தான் அவன் தனது உழைப்பின் சக்தியை உணர வாய்ப்புக்கிட்டும்.

இந்த அனுபவத்துடன் வாழ்க்கைப் பாதையில் அடியெடுத்து வைக்கின்ற மனிதனின் உடல், உள்ளம், ஒழுக்கம் ஆகிய மூன்றி

லும் சிறப்பான வளர்ச்சியைப் பெற்று மனிதத் தன்மையுடன் மிளிர்கிறுன். சமுதாயத்துடன் இணைந்து நிற்கும் தகுதி அவனை அறியாமலேயே வந்து அடைகிறது. அவன் சமுதாயத்தின் நலத்துக்காகப் பாடுபடுவதின் மூலம் தனதுகுணச்சிறப்புக்களைப் பிரகாசப் படுத்து கின்றுன். இவனை அங்கமாகப் பெற்ற சமுதாயம் அசைக்க முடியாதபடி வலுப்படு மென்பது திண்ணம். இப்படித் தனி மனித வளர்ச்சிக் கான திட்டங்களை வகுக்காத வரை மனிதன் புகழ்ப் பாதையில் முன்னேறி பெருமையடைய முடியாதென்பது நன்கு புலப்படும்.

தமிழ்வேந்தன்

மறைமலையடிகள் மன்றக் கட்டுரை, கவிதைப் போட்டிகள்

தனித்தமிழ் வளர்ச்சி பெருகவும் இளங்கவிஞர்கள் ஊக்கம் பெறவும் மறைமலையடிகள் மன்றத்தாரால் கட்டணமின்றி நடத்தப்பெறும் கட்டுரை கவிதைப்போட்டிகளில் எல்லோரும் கலந்துகொள்ளலாம். மேத் திங்களில் நடைபெறும் மன்ற ஆண்டுவிழாவின்பொழுது வெற்றியடைந்தவர்க்கு வெள்ளிக்கோப்பைகளும் நூற்களும் பரிசாக வழங்கப் பெறும். கட்டுரை கவிதைகள் அனுப்புவோர் அவற்றேடு பதினைந்து காசு அஞ்சலுறை ஒன்று அனுப்பவும்.

கட்டுரை

(ஒன்றைப்பற்றி, முழுத்தாளில் பதினைந்து பக்கங்களுள்)

1. தனித்தமிழ் இயக்கம்
2. மறைமலையடிகளின் நூற்கள் பற்றிய திறனுய்வு

கவிதை

(ஒன்றைப்பற்றி, ஐம்பது அடிகளுக்குள்)

1. எழில், 2. கண்ணீர், 3. செந்தமிழா; செங்குருதியா?
4. காணுதோ வானில் கதிர்.

கட்டுரை கவிதைகள் கடைசி நாளும்
10—4—62

கிடைக்கவேண்டிய முகவரியும்
புலவர் அ. மு. உசேன்
மறைமலையடிகள் மன்றச் செயலாளர்
1, முதல் சந்து,
நீலி வீராசாமி செட்டித் தெரு,
திருவல்லிக்கேணி*,
சென்னை—5.

கவிதைக் கொத்து

நாடுவையோ?

பூங்குயில் கூவிடும் சோலையிலே—வந்து
புக்கதே ஆந்தையின் கூட்டமடி
தீங்கினைச் செய்திடும் போதினிலே—அங்குச்
சேர்ந்தவை வாழ்ந்திட எண்ணுவையோ?

தேங்குரல் கிள்ளையின் தோப்பினிலே—வந்து
சேர்ந்தது மந்தியின் கூட்டமடி
ஆங்கது துன்பமும் செய்திடுங்கால்—அதன்
ஆட்சியைப் போற்றிட எண்ணுவையோ?

தென்றலைக் கண்டதும் வாழ்த்திடும்நீ!—வட
திக்கினில் தோன்றியே வீசிவரும்
கொன்றிடும் வாடையைக் கண்டவுடன்—நலம்
கூடிய சொல்லினால் வாழ்த்துவையோ?

அன்னமே சொல்வதைக் கேளடிநீ—இங்கே
ஆந்தையும் மந்தியும் வாடையொடு
உன்னையே நாடியே வந்திடுமேல்—அவை
ஓங்கிட இன்னமும் எண்ணுவையோ?

— முத்தன்

இரத்தஞ் சிந்துவோம்

தியாக வீரர் நாங்களென்று
திறந்து சொல்லுவோம்
தயாள சிந்தை பெருகவென்று
துணிந்து பாடுவோம்
நியாயமுள்ள மக்களாக
நின்று வாழுவோம்
வியாதி போக்க மருந்துகளை
விரைந்து செய்குவோம்

மன் பதைகள் விடுதலைக்கு
முரசு கொட்டுவோம்
இன்பத் தமிழ் மொழிவளர
இரத்தஞ் சிந்துவோம்
துன்ப மென்ற சொல்லகலத்
துணிந்து வாழுவோம்
அன்பு ஆசை நேசம்வளர
இணைந்து வாழுவோம்

அடிமை யென்ற தளையகற்றி
ஆட்சி செய்குவோம்
மடியும் ஏழை எளியவரை
மகிழச் செய்குவோம்
கொடிய வறுமைப் பேயகலக்
கொடுத்து வாழுவோம்
முடிவு ஒன்று காணுமட்டும்
முயன்று வாழுவோம்.

ஆணும் பெண்ணும் ஒன்றுசேர்ந்து
அல்லல் போக்குவோம்
ஊணுக்காக இரந்து வாழும்
இழிவை யகற்றுவோம்
வீணுக் கெதையும் நாடாமல்
வினையை நாடுவோம்
காணு மெதையும் செய்யாமல்
கடமை செய்குவோம்

—வதுளை, நெடுங்கீரன்

நமக்கு வேண்டியது

காசு பொருள் நமக்கு வேண்டியதில்லை—கையில்
கட்டும் கடிகாரம் வேண்டியதில்லை
மாசு படிந்த மனம் வேண்டியதில்லை—மக்கள்
மதிக்கும் புகழ் நமக்கு வேண்டியதில்லை

இறைவன் அருள் நமக்கு வேணுமேயடா—உடன்
இன்பத் ''தமிழ்'' அமுதும் வேணுமேயடா!
அறிவுச் சுடர் நமக்கு வேணுமேயடா—தமிழ்
அள்ளிப் பருக மனம் வேணுமேயடா!

மாடு மனை நமக்கு வேண்டியதில்லை— இளம்
மாதர் இதழ் அமுதும் வேண்டியதில்லை
சூடும் துணி மணிகள் வேண்டியதில்லை—ஒரு
சொந்த பந்தம் நமக்கு வேண்டியதில்லை

காடு கரம்பை யெல்லாம் சென்றுவருவோம்—அங்கு
காணும் கனிகளை நாம் உண்டுவருவோம்!
பாடும் குயில்களை நாம் கூடிமகிழ்வோம்—அதன்
பாட்டில் ஒரு சிறிதைக் கேட்டுமகிழ்வோம்!

தமிழின் சுவை நமக்கு வேணுமேயடா—உயர்
தமிழை அறியும் திறன் வேணுமேயடா!
அமிழ்தில் இனிய தமிழ் கற்றபின்புநான்—என்றன்
ஆவி உடலை விட்டு நீங்குமேயடா!

— ஈழம் - ''அருண்மொழி''

உவமைகள் ஏதம்மா?

நெஞ்சில் குழந்தையம்மா—மன
நினைவில் குழந்தையம்மா
கொஞ்சும் குழந்தையம்மா—மனதில்
குதித்து நட மாடுது!
செஞ்சொல்லில் தேனருவி—நிதம்
சிறக்கத் தவழ்ந்திடுது!
பிஞ்சுக் குழந்தையம்மா—ஒளி
பொன்துகள் வண்ணமம்மா!

புத்தம் புதுக்கவியோ!—எழில்
பூத்த சிறுமலரோ!
முத்து ஒளிச்சுடரோ!—சுவை
முகிழ்க்கும் பழச்சாறே!
நித்திரைப் பாட்டழகோ;—தென்றல்
நடந்திடும் பூங்காவோ!
முத்தம் பதித்தவர்கள்—சேர்ந்து
முடித்த கதைஉருவோ!

கற்பூர வாசனையோ!—தவழும்
கலமோ! மதுத்துளியோ!
பொற்புறும் வெண்ணிலவோ!—குழலின்
பண் சுவையோ! பைந்தமிழோ!
கற்பனையின் நல்விருந்தோ!—மங்கை
கண்விருந்தோ! வானவில்லோ

சின்ன மலர்ச்செண்டோ!—தாய்
சிந்திய பட்டொலியோ!
மின்னல் ஒளிக்கோடோ!—வானில்
மிதக்கும் சிறுமீனே!
அன்னத்தின் தூவியோ!—உலக
அழகின் மறுஉருவோ!
இன்பக் குழந்தைக்கு—ஏற்ற
உவமைகள் ஏதம்மா?

— மதியன்

யாரவள்?

பள்ளியில் முதல்நாள் காலடி வைத்ததும்
அள்ளிவிட்ட சிரிப்போடு அவள் நிற்கக் கண்டேன்,
அவளாக எனை நெருங்கி வந்தாள்; அமர்ந்தாள்
அன்றே என்னுடன் உறவும் கொண்டாள்.
நான்சென்ற இடமெல்லாம் என்னைத் தொடர்ந்தாள்,
பெண்ணென்ற நினைவின்றி என்நிழல் போலானாள்.
நானும் வளர்ந்தேன், அவளும் வளர்ந்தாள்,
நாளும் வளர்ந்தது எங்களின் உறவு.
உயர்நிலைப் பள்ளி முடிக்கும் வேளையில்
துயர்தரும் செய்தி என்செவி மடுத்தது.
கல்லூரி தன்னில் அவள்கால் வைத்திட
பலபேர் பலவாறு யோசனை செய்தனர்,
முடிவாக ஓர்நாள் ஒப்புதல் தந்தனர்.
துடித்து நின்றேன் புகழ்ந்திட அவர்களை,
அப்படிப் பட்டபெண் "யாரவள்" என்றால்
செப்புவேன் தயங்காது "தமிழ்க்கன்னி" என்றே.

— "சகுபாலன்"

இளங்கோவின்

மறதி

மறதியே

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். அதன் ஆசிரியர் இளங்கோவடிகள். அவர் மறதிக்கு ஆளாகியுள்ளார் என்ற தம் கருத்தை, திரு. ம. பொ. சி, அவர்கள் 'இளங்கோவின் மறதி' என்ற தலைப்பில் 'தமிழ்நாடு' பொங்கல் மலரில் எழுதியுள்ளார்கள்.

அதன் பிறகு, வித்துவான் கி. இராமசாமிக் கோனார் அவர்கள் திரு. ம. பொ. சி. அவர்களின் கருத்தை ஓரளவு ஒப்புக்கொண்டார் எனினும், அது 'மறதியன்று மாண்பு' என்ற தலைப்பில் 'தமிழ் நாடு' *(28—1—62)* ஞாயிறு மலரில் எழுதியுள்ளார்கள்.

அதன் பிறகு, லால்குடி ஆ. சோமசுந்தரம் அவர்கள் திரு. ம. பொ. சி. அவர்களின் கருத்தை அடியோடு மறுத்து, இளங்கோவின் மறதி என்ற தலைப்பில் தமிழ் நாடு (25—2—62) ஞாயிறு மலரில் எழுதியுள்ளார்கள்.

மேற் கண்ட மூவர் தம் மூன்று கட்டுரைகளையும் கண்ணுற்ற பிறகு, யான் இக்கட்டுரையை எழுதியுள்ளேன். எனவே, தமிழன்பர்கள் மேற் கண்ட மூன்று கட்டுரைகளையும் ஒரு முறை பார்த்துக் கொள்ளுதல் நன்று. ஏனெனில், அப்பொழுது தான் என்னுடைய கருத்துக்களைக் கொள்ளவும் தள்ளவும் முடியும்.

**"வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேல்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பால் காலைவாய்ப்
புண்தாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் அவன் தன்னைக் காணாக் கடுந்துயரம்"**

என வரும் மேற்கண்ட ஊர்சூழ் வரியில் உள்ள

எழுதியவர்

★

வலம்புரி அண்ணாமலை

பகுதியில், வெட்டுண்டு கிடக்கும் கோவலனைக் கண்ட கண்ணகியின் நிலையை இளங்கோவடிகள் கூறுகின்றார்.

மேற்கண்ட நான்கு வரிகளில் முன்னைய இரண்டு வரியில் முதல் நாள் காலை நிகழ்ச்சியும், பின்னைய இரண்டு வரியில் மறுநாள் மாலை நிகழ்ச்சியும் கூறப்படுகிறது. இரண்டையும் இணைத்துக் கூறுகின்ற அடிகள், இரு நிகழ்ச்சிகளும் ஒரே நாளில் காலையும் மாலையும் நடந்தன போல, கலைவாய், மாலைவாய் என்ற சொற்றொடர்களை அமைத்துப் பொதுவாகப் பாடியுள்ளார். முதல் நாள், மறு நாள் என்று கருதத் தக்க வகையில் சொல்லாட்சியில்லை. எனவே, இஃது இளங்கோவின் மறதியாகும் என்று திரு, ம. பொ. சி. அவர்கள் எழுதியுள்ளார்கள்.

கோவலனும் கண்ணகியும் மாலை நேரத்தில் மாதரிமனையை அடைந்ததும், மறுநாள் காலையில் 'நறுமலர்க் கோதை'யாகிய கண்ணகியைஅவர்கள் நாள் நீராட்டியதும், அதன்பின், 'நாள்வழிப் படூஉம் அடிசில்' சமைப்பதற்குப் பாத்திரங்கள் கொடுத்ததும், கண்ணகி சமைத்துப் படைக்கக் கோவலன் உண்டு மகிழ்ந்ததும், பின் சிலம்பு விற்கச் சென்றதும், சென்ற அன்றே வெட்டுண்டு இறந்ததும், அடுத்த நாள் பாண்டியன் கோயிலிற் 'காலை முரசம் கனை குரல்' கேட்ட மதரி இன்று 'நெய்ம் முறை நமக்கு' என்று கருதித் உயிர்கடையச் சென்றதும், பால் உறையாமலும், நெய் உருகாமலும் இருப்பது கண்டு ஏதோ உற்பாதம் என எண்ணி, 'மண்ணின் மாதர்க்கு அணியாகிய கண்ணகியுந்தான் காணக்' குரவை யாடியதும், குரவை

முடிவில் 'வையைத் துறை படியச்' சென்றதும், அங்கு 'ஊர் அரவங் கேட்டுத் திரும்பி வந்ததும், வந்து சொல்லாடாமல் நிற்பதைக்கண்ட கண்ணகி, 'காதலற் காண்கிலேன்' என்று கூறி 'நன்பகற் போதே நடுங்கு நோய் கைம்மிகும்' என்று கூறுவதும், அதன் பின் கண்ணகி காய்கதிர்ச் செல்வனை நோக்கி என் கணவன் கள்வனு? என்று கேட்பதும், அவன் கள்வனல்ல என்று கூறியதும், அதன்பின் கண்ணகி எஞ்சிய சிலபுடன் மதுரை புகுந்து மாலையில் துன்புற்றதைப் ''பட்டேன் படாத துயரம் படு காலை'' என்று கூறுவதும், மதுரை மக்கள்க் காட்ட கணவன் உடலைக் காண் பதும், அதன் பின் 'செவ்வென் கதிர் சுருங்கிச் சென்றொளிப்பதும்,' 'புல் லென் மருள்மாலை வந்ததும்,' அதன்பின் புலம்பும் பொழுது, 'யாருமில் மருள்மாலை இடருறு தமியேன்முன்' எனப் புலம்புவதும் கொண்டு, நடந்த நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்ருகக் காலத்துடன் தொடர்பு படுத்தி ஆராய்ந்தால், திரு. ம. பொ. சி. அவர்களின் கருத்துப்பொருத்தம் உடைத்து என்பது புலனுகும். மேலும் ''ஆடித்திங்கள்... வெள்ளிவாரத்து'' என்ற கருத்தும்அதற்குத் துணையாகும்.

இளங்கோவடிகள் கூறிய 'காலைவாய், மாலைவாய்' என்ற சொற்களையே மறுபடியும் 'காலை வாய், மாலை வாய்' என்று அரும்பத உரைகாரர் சொல்லி யுள்ளார். காலைப்பொழுது மாலைப்பொழுது என அடியார்க்கு நல்லார் கூறி யுள்ளார்.

28—1—62 ஆம் தேதித் 'தமிழ் நாடு' ஞாயிறு மலரில் வித்துவான் திரு. கி. இராமசாமிக்கோனுர் அவர்கள் 'மறதியன்று மாண்பு' என்று தாம் எழு திய ஆய்வுக்கட்டுரையில், இரண்டுநாள் நடந்த நிகழ்ச்சிகள் என்பதை ஒப் புக்கொண்டாலும் அது மறதியல்ல மாண்பு என்று குறிப்பிடுகின்ருர்கள்.

மேலும் ''மறதி என்பது மதிமயக்கம் கொண்டோரைச்சார்ந்து நிற்கும் ஓர் பிணியாகும். தெள்ளத்தெளிந்த பேரறிவு வாய்க்கப்பெற்ருேருடன் கள்ளத்தனமாகக்கூட இம்மறதி கரந்துறைய முடியாது. மறதி புகழின் பகைவன். 'பொச்சாப்புக்கொல்லும் புகழை' என்பர் வள்ளுவர். எனவே புகழ் எய்தத்தக்க சான்ருேர்களிடம் மறதி என்பது இருக்கவே முடியாது. இது ஒளியுள்ள இடத்தில் இருள் இருக்கிறது என்று கூறுவது போலாகும். முத்தமிழ்க் காப்பியம் செய்த இளங்கோவடிகள் முற்றத்துறந்த துறவி. அறிவின் திருவுரு. புகழின் புகலிடம். இத்தகைய அடிகளிடம் மறதி குடி கொள்ள இயலுமா'' என்று எழுதியுள்ளார்.

மேலும் ''துன்ப நிகழ்ச்சிக்கு இலக்கான மனித உள்ளம் அந்நிகழ்ச்சிக் குத் தொடர்புடையதாக முன்னர் நிகழ்ந்துபோன இன்ப நிகழ்ச்சியில் ஈடு பட்டு, மீண்டும் துன்ப நிகழ்ச்சியில் ஊன்றிக் கடுந்துயர் எய்தும்'' என்றும், அதற்கேற்ப இளங்கோவடிகளும் ''துன்பத்தின் வரம்பின்மையோடு விரைவு தோன்ற ஓர் காலைப்பொழுதில் நடந்த இன்ப நிகழ்ச்சியை உடன் கூறினுர்'' என்றும், ''இங்கு காலை மாலை தொடர்புடையன அல்ல; இன்பதுன்ப நிகழ்ச்சிகள்தான் தொடர்புடையன'' என்றும் குறிப்பிடுகின்ருர்.

மேலும். ''இளங்கோவடிகள் பெண் உள்ளம் படும் துன்ப நிலையை எண் ணி, தானும் பெண்தன்மை பெற்றுக் கண்ணீர் வழிந்தோடப் பொதுவாக

''மலிவான சாமான் எடு'' என்று எவன் அதட்டிக் கேட்கிருனே அவன்தான் பணக்காரன்.

ஊர்சூழ்வரி முழுவதையும், சிறப்பாக இந்நான்கு வரிகளையும் எழுதியிருக்க வேண்டும். ஆகவேதான் உரையாசிரியர்களும் பொதுவாகவே காலைப் பொழுது—மாலைப்பொழுது என உரை கூறினர்கள்'' என்றும் கூறுகின்றார். அடுத்தபடியாக, கீழ்த்திசை வாயிலில் கணவனுடன் புகுந்து மேற்றிசை வாயிலில் தனியே பெயர்வதையும் சுட்டிக்காட்டி, இங்ஙனம் பொருந்தும் நிகழ்ச்சிகளை ஒருங்கு இணைத்து அவலச் சுவையைக் கூறுவது இளங்கோவடிகள் மாண்பு ஆகும்'' என்றும், வித்துவான் கி. இராமசாமிக்கோனார் அவர்கள் கூறுகின்றார்கள்.

இனி, யான் என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றேன். சிறப்பாக மறதி என்ற பண்பு மையமாக விளங்குவதால், மறதியைப்பற்றிய உண்மைகளை அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

நம்மாழ்வார் விருத்த விபூதியில்,' 'எண்ணமாய் மறப்பாய், உண்மையாய் இன்மையாய்'' என்று பாடுவதால் ஆண்டவன் மறதி என்ற குணமாகவும் உள்ளான் என்பது புலனாகிறது. எனவே மறதி என்ற பண்பு கொடிது கொடிது என அடியோடு களைந்து எறியத்தக்க குற்றமல்ல. சிலவற்றில் மறதி தேவை; சிலவற்றில் மறதி கூடாது. 'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று.' ஆகவே மறதி என்ற குணம் வாழ்க்கையில் முற்றத் துறந்த துறவிகள் உள்பட அனைவருக்கும் தேவையாக இருக்கிறது. தானாக மறதி ஏற்படவில்லை, என்றால் நாமாகவாவது சில சமயங்களில் மறதியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதிருக்கிறது. இவற்றிலிருந்து மறதி முற்றக் கடியும் குற்றமல்ல என்பது விளங்கும்.

இனி, உளநூலார் மறதியைப்பற்றிக் கூறுவதைக் காண்போம். நினைவின் மறுதலை மறதியாகலின், முதற்கண் நினைவாற்றலை நோக்குவோம்.

உளநூலார் நினைவாற்றலை மனத்தின் முக்கிய தொழில்களில் ஒன்று என்பர். அத்தகைய நினைவாற்றலில் மனிதருக்கு மனிதர் வேறுபாடு உண்டு என்றும் கூறுவர். சிலர் நீண்ட நாள் நினைவுவைத்திருக்கலாம். சிலர் குறைந்தநாள் நினைவு வைத்திருக்கலாம். சிலருக்கு உடனே நினைவுக்கு வரும். சிலருக்கு உடனே நினைவுக்கு வராது. அந் நினைவாற்றலில் நான்கு உட்பிரிவுகள் உண்டு என்பர் உளநூலார்.

1. ஐம்புலன்களின் மூலமாகக் கற்றல்.

2. அங்ஙனம் கற்றவற்றை நினைவில் இருத்தல்.

3. அவற்றை மனத்தில் வருவித்தல். (அஃதாவது மீண்டும் நினைவுக்குக் கொண்டுவருதல்.)

4. முன்பு நிகழ்ந்ததாக அறிதல்.

இவற்றில் ஓர் உட்பிரிவு சரியாக இல்லை என்றாலும் நினைவாற்றல் குறையும் என்பர்.

மூன்றாவது உட்பிரிவாகிய மனத்தில் வருவித்தலில் ஏற்படும் தடையைத்தான் உளநூலார் மறதி என்று கூறுகின்றனர்.

அங்ஙனம் தடை ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு என்பர். அவை:

சூதாட்டமானது, முட்டாள்கள் மீது விதிக்கப்படும் கடுமையான வரி.

உங்களுக்குத் தெரியுமா?

ஓட்டுப் போட்டதற்கு அடையாளமாக விரலில் இடும் குறியை எதிர்த்து ஒரு வழக்கறிஞர் ஓட்டுப் போடாமலே போய்விட்டாராம். காரணம் விரலில் குறியிடுவதால் ஆபாசமாகி விடுகிறதென்றும் தனக்குக் குறியிடுவதற்குப் பதில் அடையாளச் சீட்டுத் தரும் படி கேட்டாராம். தேர்தல் அதிகாரிகள் மறுக்கவே சட்டம் தெரிந்த வழக்கறிஞர் ஓட்டுப்போடாமல் கோபமாகப் போய்விட்டாராம்.

* * *

ஓட்டுப்போடவந்த சில அலிகள் பெண் வாக்காளர் வரிசையில் போய் நின்றார்களாம் அவர்களின் பெயர் ஆண்களின் பட்டியலில் இடம் பெற்றிருந்ததால் அவர்களை ஆண்கள் வரிசையில் வந்து நிற்கும்படி அதிகாரிகள் வேண்டிக் கேட்டுக் கொண்டார்களாம். அரைமணிநேரம் விவாதத்திற்குப் பிறகு அலிகள் ஆண் வாக்காளர் வரிசையில்வந்து நாணத்துடன் ஒதுங்கி நின்று ஓட்டளித்துச் சென்றார்களாம்.

* * *

ஓட்டுச் சீட்டில் முத்திரையிடுவதற்காக வைக்கப் பட்டிருந்த வட்ட வடிவமான ரப்பர் ஸ்டாம்ப் சில பெண்களின் மனத்தைக் கவர்ந்து விட்டதாம். ஓட்டுச் சீட்டில் முத்திரையிடுவதற்குப் பதிலாகத் தங்கள் நெற்றியில் அதைத் திலமாக இட்டுக் கொண்டார்களாம். பாவம்! அவர்கள் ஓட்டளித்து விட்டார்கள் என்பதற்கு அதுவும் ஒரு நல்ல அடையாளமாக இருக்கலாம்.

(1) அரங்கத் திகைப்பு.

(2) அச்சம்.

(3) துக்கம்.

(4) தன்உணர்ச்சி.

(5) மன எழுச்சியின் நெருக்கடி

(6) களைப்பு முதலியனவாகும்.

கற்றவற்றைக், கேட்டவற்றை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவரும் பொழுது ஏற்படும் தடைக்குக் காரணங்களாகிய மேற்கண்டவற்றுள் எதன் மூலமாவது, ஆண்டி முதல் அரசர் வரை, சான்றோர் முதல் சாலார் வரை, துறவி முதல் இல்லறத்தார் வரை எத்தகையோரும் மறதிக்கு ஆளாகிவிடுவது இயல்பு.

இந்த உளநூல் கருத்திலிருந்து, ஒருவர் அரங்கத் திகைப்பால் மறதிக்கு ஆளாகிவிடலாம். ஒருவர் அச்சம் காரணமாக மறதிக்கு ஆளாகிவிடலாம். ஒருவர், துக்கம் காரணமாக மறதிக்கு ஆளாகிவிடலாம். ஒருவர் உணர்ச்சி வசப்படுதல் காரணமாக மறதிக்கு ஆளாகிவிடலாம். ஒருவர் மன எழுச்சி காரணமாகக் கருத்துக்கள் ஒன்றோடு ஒன்று மோதும் நெருக்கடி காரணமாக மறதிக்கு ஆளாகிவிடலாம். இவற்றை எல்லாம் கடந்து நின்றாலும், களைப்பின் காரணமாக அனைவரும் மறதிக்கு ஆளாகிவிடலாம்.

இதுவரை மறதியைப் பற்றிப் பொதுவாகவும், உளநூலார் கூறிய முறையில் சிறப்பாகவும் கண்டு கொண்டோம், இனி, இங்ஙனம் மறதிக்கு ஆளான புலவர்தம் நிகழ்ச்சிகள் சிலவற்றைக் கூறுகின்றேன். பரிமேலழகர், கம்பர், மோசிகீரனார் முதலானோர் முற்றவும் கற்றறிந்த சான்றோர்கள்தாம். அவர்களும் மறதிக்கு ஆளாகிவிட்டனர்.

பரிமேலழகரின் மறதி:—

விளக்கவுரை எழுதுவதில் தலை சிறந்தவர் பரிமேலழகர் என்பர். அத்தகைய பெரியாரும் விளக்கவுரையில் மறதிக்கு ஆளாகியுள்ளார்.

'அகர முதல உலகெல்லாம்' என்ற முதற் குறட்பாவுக்கு உரை எழுதுகின்றபொழுது, 'உலகு' என்ற ஆகு பெயர்ச் சொல்லுக்கு விளக்கவுரையாக, 'உலகு' என்றது ஈண்டு உயிர்கள் மேல் நின்றது' என்று கூறுகின்றார். பிறகு அதைத்தொடர்ந்து, 'காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுதலின் ஆதிபகவன் முதற்றே என உலகின்மேல் வைத்துக் கூறினார்' என்றும் விளக்கவுரை எழுதுகின்றார்.

வெள்ளியம்பலவாணத்தம்பிரான் மேற்கண்ட விளக்கவுரை தவறு என மறுத்துள்ளார். அதற்கு அவர் கூறும் காரணம் வருமாறு. உலகு என்ற சொல் உயிர்கள் மேல் நின்றது என்று கூறிவிட்டார். பிறகு அதைத் தொடர்ந்து 'காணப்பட்ட உலகத்தால்' என்று கூறுகின்றார். உயிர்கள் எப்படிக் காணப்பட முடியும்? எனவே இவ் விளக்கவுரை தவறு எனக் கூறியுள்ளார்.

பரிமேலழகர்தம் உரைக்கு விளக்கம் தந்த புலவர்கள், இந்த இடத்தில் பரிமேலழகரைக் காப்பாற்ற எண்ணி அதற்காக "வானின்று உலகம் வழங்கி வருதலான்" என்ற இரண்டாம் அதிகாரத்து முதற் குறட்பாவிலே வருகின்ற 'உலகம்' என்ற சொல்லுக்கு, "உலகம் என்றது ஈண்டு உயிர்களை. அவை நிலை பெற்று வருதலாவது பிறப்பு இடையறாமையின் எஞ்ஞான்றும் உடம்போடு காணப்பட்டுவருதல்" என்று பரிமேலழகர் விளக்கம் கூறும் பகுதியை எடுத்துக் காட்டி, முதற் குறட்பாவிலே வருகின்ற உலகு என்ற சொல்லுக்கு 'உயிர்களை' என்று கூறியதும், உடம்போடு காணப்பட்டுவரும் உயிர்களையே யாகும் என்று சமாளிக்கின்றனர்.

இத்தகைய தொல்லை ஏன்? பரிமேலழகர் முதற் குறட்பாவிலே உலகு என்றது உடம்போடு காணப்பட்டு வரும் உயிர்கள்மேல் நின்றது'

உங்களுக்குத் தெரியுமா?

தன் காதலியைக் காணாமல் தேடி அலைந்தான் காதலன். ஒரு நாள் தேம்ஸ் ஆற்றிலிருந்து அவள் பிணத்தைக் கண்டு பிடித்து எடுத்தான். கண்ணீர் விட்டுக் கதறினான், அழுதான். பிறகு பிரேத விசாரணை நடத்தப்பட்டு அவன் காதலியான குமாரி பாலின் மக்கி இறந்து விட்டதாகப் பஞ்சாயத்தார் தீர்ப்புக் கூறினார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு குமாரி பாலின் மக்கி தான், ஆற்றில் விழுந்து இறக்கவில்லையென்றும், உயிரோடு திடகாத்திரமாக இருப்பதாகவும் மனுச் செய்து கொண்டாள். ஆனால்பஞ்சாயத்தார் இதை நம்பவில்லை. அவள் இதை எதிர்த்து உயர்நீதி மன்றம் வரை சென்றாள் அங்கேயும் நீதிபதி சொன்ன தீர்ப்பு இதுதான்.

"தாங்கள் இறக்கவில்லை என்பதை நாங்களும் ஒப்புக் கொள்கிறோம். தங்கள் காதலரும் தாங்கள்தான் உண்மையான குமாரி பாலின் மக்கி என்று சொல்லியிருக்கிறார். ஆனால் சட்டப்படி தாங்கள் இறந்து விட்டதாக ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கும் அந்தத் தீர்ப்பை ஹைகோர்ட் ரத்து செய்யும் வரை தாங்கள் இறந்தவர் பட்டியலில் தான் இருக்கவேண்டும்" என்று தீர்ப்புக் கூறினாராம். பாவம் தீர்ப்பைக் கேட்டு அந்தப் பெண் நடைப் பிணமாகச் சென்றாளாம்.

என்று கூறியிருந்தால், பின்னீடு சொல்லவில்லை என்றாலும் பாதகமில்லையே. இப்பொழுது பின்னர்ச் சொன்னதைத்தானே முன்னதற்கு ஆதாரமாகக் காட்டவேண்டியதிருக்கிறது. இது பரிமேலழகரின் மறதிதானே. மறதி தெள்ளத் தெளிந்த பேரறிவாளரையும் அடையும் என்பதற்கு இஃது ஒரு சான்று.

கம்பரின் மறதி:—

திரு. சி. என். ஏ. அவர்கள் பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு திருப்புத் தூரில் பேசுகின்றபொழுது, கம்பரின் மறதியாக ஓரிடத்தைக் குறிப்பிட்டுக் கூறினார்கள்.

இராமன் முடி துறந்து மரவுரி தரித்துக் காட்டுக்குச் செல்லும் பொழுது, சீதையும் மரவுரி தரித்துக் காட்டுக்குச் செல்லுகின்றாள். தவக் கோலத்திற்கு ஏற்ற மரவுரி தரித்துக் காட்டுக்குச் செல்லுகின்றவர்கள் பொதுவாகப் பொன்னாபரணங்களைப் பூணுவதில்லை. சிறப்பாகச் சீதை மங்கலநாணை அணிந்திருக்கலாம்.

இராவணன் சீதையை வஞ்சித்துச் சிறை எடுத்துச் செல்லும்பொழுது ஆபரணங்களையெல்லாம் கழற்றி மூட்டையாகக் கட்டிப் போட்டதாகக் கூறிச் சுக்ரீவன் இராமனிடம் கொடுக்கின்றான். அதனை,

"மழைபொரு கண்ணிணை வாரி யோடுதன்
இழைபொதிந்து இட்டனள் யாங்கள் ஏற்றனம்"

(கிட்கிந்தா காண்டம்-கலன்காண் படலம்—3)

என்று கம்பர் கூறுகின்றார். இராமன் ஒவ்வொரு உறுப்பு அணிகளையும் நோக்கும்பொழுது அவ் அவ்வுறுப்புக்களாகத் தோன்றியதாகக் கம்பர் மேலும்பாடுகின்றார். சீரை சுற்றிய தேவி, மூட்டையாகக் கட்டிப் போடுகின்ற அளவிற்கு ஆபரணங்கள் எப்படிக் கிடைத்தன? இது கம்பருடைய மறதி யல்லவா? என்று திரு. சி. என். ஏ. அவர்கள் அன்று குறிப்பிட்டார்கள். சிலர் இவற்றைச் செருகு பாடல்கள் என்று கூறுவாரும் உண்டு. கம்பர் பாடல் என்றால் நிச்சயமாகக் கம்பர் மறதிக்கு ஆளாகிவிட்டார். பேரறி வாளரின் மறதிக்கு இஃதும் ஒரு சான்று.

மோசிகீரனாரின் மறதி:—

மோசிகீரனார் என்னும் கடைச்சங்கப் புலவர், சேரமான் பெருஞ் சேரல் இரும்பொறையைக் காணச் சென்றார். புலவர் அரண்மனையை அடைந்தபொழுது, அரசன் முரசை நீராட்ட எடுத்துச் சென்றிருந்தான். முரசு இல்லை; முரசு கட்டில் மட்டும் இருந்தது. வழி நடந்த களைப்பால் முரசு கட்டிலில் அமர்ந்தவாறு உறங்கிக்கொண்டிருந்தார்.

முரசை நீராட்டிக்கொண்டுவந்த அரசன், முரசு கட்டிலில் ஒருவர் படுத்துறங்குவதைக்கண்டவுடன், வாளை உருவிக்கொண்டு விரைந்துவந்தான். நெருங்கி வந்தவுடன் தமிழ்ப் புலவர் என அறிந்தான். உருவிய வாளை உறையிலே திணித்துவிட்டுக் கவரி கொண்டு வீசினான்.

முரசு கட்டிலில் அமர்ந்தவருக்குத் தண்டனை, அவரை இரு துண்டாக வெட்டிவிடுவது. ஆனால் அரசன் அங்ஙனம் செய்தானா? இல்லை. ஏன்? தமிழ்த் தாயே முரசு கட்டிலில் அமர்ந்திருப்பதாக எண்ணினான்; புலவரை வெட்டுவது தமிழ்த்தாயை வெட்டுவதற்குச் சமம் என்று கருதினான். எனவே வெட்டாமல் கவரிகொண்டு வீசினான்.

எழுத்தாளன் ஆவதற்குச் சாமர்த்தியம் மட்டு மிருந்தால் போதாது, சரக்கும் இருக்க வேண்டும்.

குளிர் காற்றுப் பட்டுக் கண் விழித்த புலவர் சிறிது களைப்புநீங்கினர். அரசன் கவரிகொண்டு வீசுவதையும், முரசு எதிரே காத்து நிற்பதையும், தாம் அமர்ந்திருப்பது முரசு கட்டில் என்பதையும் உணர்ந்தார். உடனே,

''அறியாது ஏறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்கும்நின் வாள்வாய் ஒழித்ததை''

(புறம் 50)

எனப் புகழ்ந்து பாடுகின்றார். அரசன் கவரிகொண்டு வீசும் அளவிற்குச் சால்பு மிக்க புலவராகிய மோசிகீரர், முரசு கட்டிலைப் பற்றியும் நன்றாகத் தெரிந்திருக்கத்தானே வேண்டும். அப்படி இருந்தும் அறியாது ஏறிய என்னை' என்று கூறுகின்றாரே, அவரை அறியாமைக்கு உள்ளாக்கியது எது? அதுதான் உளநூலார் கூறுகின்ற களைப்பை அடிப்படையாகக் கொண்டு பிறந்த மறதி. சான்றோர் மறதிக்கு இஃதும் ஒரு சான்றாகும்.

ஆண்டவன்பால் எல்லையற்ற அன்புடைய சிவனடியார் ''நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லும் நா நமசிவாயவே' என்று பாடுகின்றார், மறக்கினும் என்ற உம்மையால் மறக்கமாட்டேன் என்பதை உறுதிப்படுத்தினாலும், அவருக்கும் நம்பிக்கை இல்லை. ஒருவேளை மறந்துவிட்டாலும் பயிற்சி வசத்தால் நா நமசிவாய என்று கூறும் என்கின்றார். ஆண்டவன் அடியாருக்கே தன் சாதனையில் நம்பிக்கை இல்லை. ஏன்? மறதி என்ற குணம் அடியார் என்றுகூடப் பார்க்காது, கள்ளத்தனமாகப் புகுந்துவிடும். அதனால் அங்ஙனம் கூறினார்.

இங்ஙனம் சான்றோர் பலரின் மறதியைச் சுட்டிக்காட்டியது குறை கூறும் நோக்குடன் அல்ல. ''மறதி என்பது மதிமயக்கம் கொண்டோரைச் சார்ந்து நிற்கும் ஓர் பிணியாகும்'' என்றும், தெள்ளத் தெளிந்த பேரறிவு வாய்க்கப் பெற்றவருடன் கள்ளத்தனமாகக்கூட இம்மறதி கரந்துறைய முடியாது'' என்றும் கூறுகின்றனரே, அது பொருந்தாது என்பதற்காகத் தான் இவற்றைச் சுட்டிக் காட்டினேன். இவர்கள் எல்லாம் மதிமயக்கம் கொண்டவர்களா? இல்லை. தெள்ளத்தெளிந்த பேரறிவு வாய்க்கப் பெற்றவர்கள். ஏன் இவர்கள் மறதிக்கு ஆளானார்கள்?

உளநூலார் கூறுகின்றபடி மறதி ஏற்படுவதற்குரிய அடிப்படைக் காரணங்களுள் ஒன்றின் மூலம், சந்தர்ப்ப வசத்தால் மறதிக்கு ஆளாகிவிட்டனர். அதனால் இவர்கள் பெருமை குறைந்துவிடப் போவதில்லை. முற்றத் துறந்த துறவியாகிய இளங்கோவடிகளும் இங்ஙனம்தான் மறதிக்கு ஆளாகிவிட்டார்.

இனி, இளங்கோவடிகள் நிகழ்ச்சிக்கு வருவோம். ''வண்டார் இருங் குஞ்சி'' என்ற நான்கு வரிகளிலே இருநாளில் நடந்த இன்ப துன்ப நிகழ்ச்சிகளை இணைத்துத் துன்பச் சுவையைச் சித்தரிக்கும் இளங்கோவடிகள், ''காலை வாய் மாலைவாய்'' எனப் பொதுவாகத்தானா பாடவேண்டும்? முதல் நாள் காலை மறு நாள் மாலை என்று உணரத்தக்க வகையில் சொல்லமைத்துப் பாடக்கூடாதா? இல்லை, பாடத் தெரியாதா? தெரிந்தவர்தானே? ஏன் அங்ஙனம் பாடவில்லை?

இளங்கோவடிகள், சாத்தனார் கூறியவற்றைக் கேட்டு நினைவுக்குக் கொண்டுவந்து, பாடும்பொழுது, உளநூலார் கூறுகின்றமுறைப்படி நினைவிற்குக் கொண்டுவருதலில் ஏற்பட்ட ஏதோ ஒரு தடை காரணமாக மறதிக்கு

மிக உயரமான மரத்துக்குக் கூட அடியில்
கோடாரி காத்திருக்கிறது.

ஆளாகிவிட்டார். ஆகவேதான் முதல் நாள், மறு நாள் எனத் தெளிய உணருமாறு சொல்லமைத்துப் பாடாது விட்டுவிட்டார்.

சாதாரணமாக, இந்த நான்கு வரிகளுக்கும் ஒருவரை உரை காணச் சொன்னால், காலைவாய், மாலைவாய் என்ற சொற்களைக் கொண்டு ஒரு நாளில் நடந்த நிகழ்ச்சியாகவே அவர் உரை காண்பார்.

சிலப்பதிகாரத்திலே இந்த நான்கு வரிகளை இளங்கோவடிகள் பாடாது விட்டாலும், அல்லது இல்லை என்றாலும் கதைத் தொடர்ச்சிக்கு ஊனமில்லை. ஏனெனில்,

கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டச்
செம்பொற் கொடியனையாள் கண்டாளைத் தான் காணான்
....
....
ஒல்லென் ஒலிபடைத்த தூர்.

(மதுரை-ஊர் சூழ்வரி-29-34)

என்ற முந்திய வரிகளிலே கண்ணகி கோவலனைக் கண்ட செய்தியையும் அவளை அவன் காணாத செய்தியையும் கூறிவிட்டார். கதிர் மறைய மாலைக் காலம் வந்ததாகவும் கூறி முடித்துவிட்டார். அதற்குப் பின் "வண்டார் இருங்குஞ்சி என்ற நான்கு வரிகளுள், பின் இரண்டு வரிகளில் மறுபடியும் கண்ணகி கோவலனைக் கண்ட நிலைமையைத்தான் சித்தரிக்கின்றார். அதற்குப்பின் கண்ணகி அரற்றிப் புலம்புதல் ஆரம்பமாகிறது. எனவே இந்த நான்கு வரிகள் இல்லை என்றாலும் கதைக்கு ஊனமில்லை. மிகையாக ஏன் இந்த நான்கு வரிகளை இளங்கோவடிகள் பாடினார்? துன்பச் சுவைக்கோர் அழுத்தம் தருவதற்காக முன்னாள் நடந்த இன்பச் சுவையை இணைத்து இந் நான்கு வரிகளைப் பாடியுள்ளார்.

கீழ்த்திசை வாயில், மேற்றிசைவாயில் நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டி இதுபோல இளங்கோவடிகள் இன்ப துன்ப நிகழ்ச்சிகளை இணைத்துப்பாடு கின்றவர் என்றும், துன்ப நிகழ்ச்சிக்கு இலக்கான மனித உள்ளம் அந்நிகழ்ச் சிக்குத் தொடர்புடையதாக முன்னர் நிகழ்ந்துபோன இன்ப நிகழ்ச்சியில் ஈடுபட்டு மீண்டும் துன்ப நிகழ்ச்சியில் ஊன்றிக் கடுந்துயர் எய்தும் என்றும், துன்பத்தின் வரம்பின்மையோடு விரைவு தோன்ற ஓர் காலைப்போதில் நடந்த நிகழ்ச்சியை உடன் கூறினர் என்றும், குறிப்பிடுகின்றார் மறதியன்று மாண்பு எனக்கூறும் கட்டுரையாசிரியர்.

இன்பதுன்ப நிகழ்ச்சிகளை இணைத்துப் பாடுவதை ஒப்புக்கொள்வோம். பாடும்பொழுதும் தொடர்புடைய நிகழ்ச்சிகளை ஒன்றுபடுத்தும்பொழுதும் துன்பத்தின் வரம்பின்மையும் விரைவும் தோன்றக் கூறும்பொழுதும் இரு வேறு நிகழ்ச்சிகளும் நடந்த நாட்களைக் குறித்துப் பாடுதல் கூடாதா? பாட லாம் அல்லவா?

பறம்பு மலையையும் தந்தையையும் இழந்த பாரி மகளிர்கூட,

'அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்
எந்தையு முடையேம் எம்குன்றும் பிறர்கொளார்;
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றும் கொண்டார் யாம்எந்தையு மிலமே!

(புறம்—112.)

என்று, தொடர்புடைய இன்பதுன்ப நிகழ்ச்சிகளை இணைத்துப்பாடும் பொழுது, இருவேறு நிகழ்ச்சிகள் நடந்த மாதங்களை அற்றைத்திங்கள் என்

றும் இற்றைத் திங்கள் என்றும் சுட்டிப்பாடியுள்ளனரே. இளங்கோவடிகளும் ஏன் முதல்நாட்காலை, மறுநாள்மாலை எனப் பொருள்படுமாறு பாடக்கூடாது?

கீழ்த்திசைவாயில் மேற்றிசைவாயில் நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறும் பொழுதுகூட இளங்கோவடிகள் பொதுவாக 'வாயில்' என்று கூறிக் கற்போரைக், கலங்கவைக்காமல் கீழ்த்திசை மேற்றிசை எனச் சுட்டிக் கூறியுள்ளார். அதுபோலக் காலை வாய் மாலைவாய் என்ற இடத்திலும் நாள் விளக்கம் தெரியுமாறு கூறலாமல்லவா?

“முழுத்தும் பழுதற்ற முத்தமிழின் பாடல்” என்றுஅடியார்க்குநல்லார் பாராட்டியிருப்பதைக் குறிப்பிடுகின்றனர். ஒருவரையோ ஒரு நூலையோ பாராட்டுகின்றவர்கள், குணங்களைச் சிறப்பித்துப் பாராட்டுவார்களே அன்றிக் குற்றங்களையும் கூறிப் பாராட்டமாட்டார்கள். அந்த முறையில்தான் அவரும் பாராட்டி உள்ளார். காய்தல் உவத்தல் இன்றி ஆய்கின்றவர்கள்தாம் குற்ற நற்றங்களைக் கூறுவார்கள்.

இத்தொடரின் பொருளைச் சற்று நுணுகி நோக்கினால் 'முழுத்தும் பழுதற்ற' என்ற அடைமொழி முத்தமிழைத் தழுவி நிற்கிறதே அன்றிப் பாடலைத் தழுவி நிற்கவில்லை. முழுதும் பழுதற்றது முத்தமிழ்; அத்தமிழால் பாடப்பட்ட பாடல்' என்றுதான் பொருள்கொள்ளலாம்.

இனி, லால்குடி நண்பர் கூறும் கருத்துக்களை நோக்குவோம்.

லால்குடி நண்பர் அனைத்து நிகழ்ச்சிகளும்—அஃதாவது கோவலன் சிலம்பு விற்கச்சென்றதுமுதல் மதுரை எரியுண்டதுவரை, எல்லாம் வெள்ளிக்கிழமை ஒரே நாளில் நடந்தன என்று கூறுகின்றார்.

“காதலி தன்னை ஒருங்குடன் தழீஇ உழையோர் இல்லா ஒருதனி கண்டு உள்ளகம் வெதும்பி,” என்ற தொடரில் “உழையோரில்லா” என்ற தொடருக்கு அடியார்க்கு நல்லார், “துணையாயிருந்த ஆய்ச்சியர் எல்லாம் குரவையாடப்போனமை தோன்ற” என்று உரைகூறுவதை ஆதாரமாகக் காட்டி, கோவலன் சிலம்பு விற்கச் செல்லுவதற்கு முன்னரே ஆயர்பாடியில் தீக்குறி

நான் குதிரை

சென்ற நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் பிரபல நாவலாசிரியராயிருந்த டுமாஸ் என்பவருக்கு ஒரு இளைஞர் தாம் எழுதிய நாவலின் பகுதியை அனுப்பி தம்மோடு சேர்ந்து நாவல் எழுதி வெளியிடுமாறு அழைத்தார்.



இதைக் கண்டதும் டுமாசுக்குக் கோபம் பொங்கிற்று. “என்னப்பா! குதிரையுங் கழுதையும் ஒன்றாகச் சேருமா? என்னோடு உன்னையும் சேர்த்து எழுதிஇருக்கிறாயே-கூட்டுச் சேர்வது தகுதி பார்த்துச் சேர்” என்று ஆத்திரத்தோடு பதில் எழுதினார்.

அதற்கு எழுத்தாள இளைஞரிடமிருந்து வந்த பதில் டுமாஸ் அவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. அந்த இளைஞர் எழுதியிருந்த பதில் இதுதான்.

“ஐயா என்னைக் குதிரை என்று சொன்னதற்கு மெத்த நன்றி!”

கள் கண்டதாகவும், கண்ணகியைத் தனித்து விட்டுவிட்டுக் குரவைக் கூத் தாடியதாகவும் கூறுகின்றார்.

இது பொருந்தாது.

கோவலன் ''நாள்வழிப் படூஉம் அடிசில்'. (பகல் உணவு) உண்டு சிலம்பு விற்கச் சென்றுவிட்டான். அதன்பின் வெட்டுண்டு இறந்தான். மறுநாட் காலையில் ''பாண்டியன் கோயிற் காலை முரசங் கனை குரலியம்''பியது கேட்டு 'நெய்ம்முறை நமக்கு இன்று' என்று கருதிய மாதரி தயிர் கடையச் செல்லுகின்றாள். பால் உறையவில்லை. எனவே ஏதோ உற்பாதம் நேரப் போகிறது எனக் கருதிக்குரவைக் கூத்தாட விரும்புகிறாள். உடனே ''மண்ணின் மாதர்க்கணியாகிய கண்ணகியும் தான் காணக்'' குரவையாடுகிறாள். இவ்வகைச் சான்றுகளிலிருந்து கோவலன் சிலம்பு விற்கச் சென்று கொலையுண்டபின்னரே உற்பாதம் நிகழ்ந்தன என்பதும், அதன்பின் குரவையாடினர் என்பதும், கண்ணகியும் காண ஆடினர் என்பதும் தெரியவரும்.

இதனால் ''உழையோர் இல்லா'' என்ற தொடருக்கு அடியார்க்கு நல்லார் துணையாய் இருந்த ஆய்ச்சியர் பிரிந்துபோயினர் என்ற கருத்தில் கூறுவது பொருந்தாது என்பதும் தெரியவரும். அத்தொடருக்கு என்ன பொருளென்றால், கூறுதும்.

> குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்
> அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கிய

நிலைமையை ''உழையோர் இல்லா'' என்ற தொடரின் பொருளாகக்கொள்ளுதலே தக்கது.

'காலைவாய்த் தழுவினுள் மாலைவாய்க் கண்டாள்'' (19:36—7) என்கையால் குரவையாடியது கோவலனுர் கொலையுண்ட அன்றே என்க'' என்ற அரும்பத உரைகாரர் குறிப்புப்படி இரண்டும் ஒரு நாள் நிகழ்ச்சிகள் இல்லை என்பது, ஆரம்பத்தில் ஒன்றன்பின் ஒன்றாகக் கூறிக்காட்டிய அகச் சான்றுகளால் தெரியவரும்.

''கோவலன் கொலையுண்ட செய்தி அறியாத நிலையில் கண்ணகி ஓர் இரவைக் கழித்தாள் என்பது பொருந்தாது'' என்று கூறுகின்றார் லால்குடி நண்பர்.

காலையில் குரவையாடி வையைத் துறை படியச்சென்று வந்தவள் சொல்லாடாது நிற்கும்பொழுது, கண்ணகி 'காதலற் காண்கிலேன்' என்று கூறுகின்றாள். சிலமணி நேரப் பிரிவைக் குறித்து யாரும் காண வில்லை'' என்று சொல்லமாட்டார்கள். முதல்நாள் பகலில் பிரிந்தவன் மறு நாட்காலைவரை வராத காரணத்தினால்தான், 'காதலற் காண்கிலேன்'' என்று கண்ணகி கூறுகின்றாள். எனவே, கோவலனைப் பிரிந்து கண்ணகி ஓர் இரவைக் கழித்தாள் என்பது பொருந்தும்.

''மாபத்தினி நின்னை மாணப் பிழைத்தநாள் பாயெரி இந்தப் பதியூட்டப் பண்டே ஓர் ஏவல் உடையேன்'' என்ற வரிகளில் அங்கிவானவன் 'பிழைத்த நாள்'' எனக் கூறுவதாலும்,

---

மனிதகுலம் நம்மை வெறுப்பதைத் தாங்கலாம். ஆனால் குழந்தைகள் நம்மை வெறுப்பதைத் தாங்கமுடியாது.

"வெள்ளிவாரத்து ஒள்ளெரி உண்ண" என்று மதுராபுரித்தெய்வம் கூறுவ தாலும் கோவலன் கொலையுண்டதும், கண்ணகி கண்டதும், மதுரை எரிந்த தும் வெள்ளிக்கிழமை என்று கூறுகின்றார் லால்குடி நண்பர். நல்ல இடம். ஆய்தல் தக்கது.

பிழைத்தநாள் எரிக்கும்ஏவல் இருந்தால், கோவலன்வெட்டுண்டவுடன் கண்ணகியின் ஏவலை எதிர்பார்க்காமல் எரித்திருக்கலாமே. பிழை, ஊரறிய உலகறிய மெய்ப்பிக்கப்படவேண்டும். அதன்பின் கண்ணகியின் ஏவலைக் கேட்டுத்தான் தீத்திறத்தோர் பக்கம் சேரவேண்டும். பிழைத்த நாள் புதன்கிழமை. எனவே பிழைத்த நாள் எரிக்க முடியவில்லை. கண்ணகி யின் ஏவலைக் கேட்டு வெள்ளிக்கிழமைதான் எரிக்க முடிந்தது.

குற்றம் மெய்ப்பிக்கப் படும்வரை யாரும் குற்றவாளியல்ல; அது மெய்ப்பிக்கப்படவேண்டும். மெய்ப்பிக்கப்பட்டது, பிற அகச் சான்றுகளின் படி வெள்ளிக்கிழமை. ஆகவே வெள்ளிக்கிழமை மதுரை எரிந் தது.

கண்ணகி கொலைக்களத்தில் ஓர் இரவு தங்கினுள் என்பது பொருந் தாது. என்றும் மாலையில்தான் வழக்காடினுள் என்றும் கூறுகின்றார்.

மதுரை மக்கள் காட்டக் கண்ணகி கண்டாள். அவள் கண்டபின் "ஞாலம் இருளூட்டி.........செவ்வென்கதிர் சுருங்கிச் செங்கதிரோன் சென் ருெழிப்ப 'மருண்மாலை' தோன்றிவிட்டது. அதன்பின் கண்ணகி "யாருமில் மருள்மாலை இடருறு தமியேன் முன்" என்று புலம்பிக் கொண்டு அங்கேயே கிடக்கின்றாள். எனவே இருளில் வழக்காடச் செல்லவில்லை என்பது தெரிய வரும். புலம்பிய நிலையில்—சோகத்தால் தன்னை மறந்து அயர்ந்த நிலையில் கோவலன் உருவம் தன் கண்ணீரைத் துடைத்து விண்ணகம் சென் றதைக் காணுகின்றாள். இதை அவள் புலம்பிக் கொண்டிருக்கும்பொழுது கண்டிருக்கமுடியாது. அன்று இரவு அங்கு சோர்ந்துகிடந்தபொழுது கனவு நிகழ்ச்சிபோல் கண்டிருக்க வேண்டும். எனவே ஓர் இரவைக் கொலைக்களத் தில் கண்ணகி கழித்திருக்கலாம்.

கோப்பெருந்தேவி வெள்ளிக்கிழமை காலையில் கனவைச் சொல்லச் சென்றாள் என்றும், ஊடல் காரணமாக உணர்த்த முடியவில்லை என்றும், அன்று மாலையில் உணர்த்தியதாகவும், அப்பொழுது கண்ணகி வந்து வழக் காடியதாகவும் குறிப்பிடுகின்றார் லால்குடி நண்பர்.

தேவி, கண்ட கனவைச் சொல்ல வந்ததாகவும் ஊடல் காரணமாகச் சொல்ல முடியவில்லை என்பதற்கும் இடம் இல்லை. கூடல் மகளிரின் ஆடல் பாடலில் மன்னன் மனம் செல்வதைக்கண்ட தேவி ஊடல் கொண்டு சென்றாளே ஒழிய, கனவைச் சொல்ல வந்து சொல்லாமல் செல்ல இல்லை.

தேவி ஊடல் கொண்டு வெளியேறியது கொலை நிகழ்ச்சிக்கு முன்பு. ஊடலைத் தெளிவிக்கப்போகும்பொழுதுதான் பொன்வினைஞர் வருகின்றார். மன்னன் ஏவலிடுகின்றான். கோவலன் கொலை நிகழுகின்றது. கொலைக்கு முன்பு தேவி கனவு கண்டதாகக் குறிப்பிடப்படாதபடியால், கொலைக்குப் பிறகுதான் கனவு கண்டிருக்க வேண்டும். எனவே முன்பே கனவு கண்ட தாகக் கூறுவது பொருந்தாது.

"திரு ம. பொ. சி. அவர்கள் கருத்துப்படி புதனன்று கோவலன்

சரித்திரத்திலேறிய கவிஞன் தெய்வம் அடுத்த அறையில்
உள்ள கவிஞன் பைத்தியம்

மாண்டானுயின், வெள்ளிவரை அவன் உடல் என்னவாயிற்று? மூன்று நாள் நாறிக்கிடந்ததா?'' என்று லால்குடி நண்பர் கேட்கின்றார்.

மன்னவன் ஆணைப்படி வெட்டப்பட்ட உடலை மற்றவர் என்ன செய்ய முடியும்? எத்தனை நாளானாலும் அங்கே கிடந்து எல்லாப் பிணங்களையும் போல அதுவும் மண்ணோடு மண்ணாகியிருக்கும். லால்குடி நண்பர் கருத்துப்படி ஒரே நாளில் எல்லாம் நடந்ததாக வைத்துக்கொள்வோம். கண்ணகி கோவலன் உடலை விட்டுச் சென்ற பிறகு அந்த உடல் என்ன ஆகியிருக்கும்?

பொருத்தமான வாதத்தை எடுத்துப் பேசவேண்டும். கண்ணகியும் கோவலனும் ஒவ்வொரு நாளும் காலை முதல் மாலை வரை செய்த நிகழ்ச்சிகளுக்கு ஆதாரம் இல்லையே. குளித்தார்களா? பல் விளக்கினார்களா? என்று கேட்டால், என்ன பதில் சொல்லுவது? எல்லாம் நடந்துகொண்டுதான் இருந்திருக்கும்.

வெட்டுப்பட்ட கோவலனின் உடலை அங்கே போட்டு விட்டுச் சென்றிருக்கலாம். பிற உடல்கள் எந்நிலை அடையுமோ அந்நிலையை அவ்வுடலும் அடைந்திருக்கலாம். அஃது எந்த நிலையில் இருந்ததோ அந்த நிலையில் கண்ணகி அதைக் கண்டு கடைசியாக அவளும் கைவிட்டுச் சென்றிருக்கலாம்.

"முன்னாள் காலை பிரிந்து சென்ற கணவனை, மறுநாள் மாலை அவன் தன்னைக் காணாத நிலையில் தான் கண்டாள்—என்று மூலப் பாடலுக்குப் பொருள் கொள்ளக் கூடாதோவெனில் அது பொருந்துவது அன்று'' என்று திரு. ம. பொ. சி. அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இக் கருத்தை அப்படியே என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மூல நூலாசிரியர்கள் மறந்துவிட்ட இடங்களை அல்லது மறதியால் முரண்பட்டுக் கூறிய இடங்களை உரையாசிரியர்கள் தம் விளக்கத்தால் சரி செய்தல்வேண்டும். அதுதான் கடமையும் கூட.

சான்றாக ஒன்று கூறுகின்றேன். மதுரகவியாழ்வார். 'கண்ணி நுண் சிறுதாம்பு' என்ற பாடலைப் பாடியுள்ளார். 'சிறுதாம்பு' என்ற சொல்லுக்கு விளக்கம் கூறப் புகுந்த விளக்கவுரைகாரர் கூறுவதைப் பார்ப்போம். கண்ணனின் சுட்டித்தனம் கண்டு யசோதை அவனைக் கயிற்றால் கட்டிப் போடுவாளாம். தன்னைக் கட்டுவதற்கு இக் கயிறுகள்தானே பயன்படுகின்றன என்று எண்ணிய கண்ணன், அவற்றை எல்லாம் சிறு சிறு கயிறுகளாகத் துண்டு துண்டாக வெட்டிவிடுவானாம். ஆகவே 'சிறுதாம்பு' என்று பாடினார் என நயவுரை கூறுகின்றார். பிறகு ஓரிடத்தில் 'நெடுந்தாம்பு' என வந்துவிடுகிறது. இங்கு சிறுதாம்பு, நெடுந்தாம்பு என்ற இரண்டும் முரண்படுகின்றன. 'சிறுதாம்பு'என்பதற்கு விளக்கம் வேறு கூறியாகிவிட்டது. இப்பொழுது என்ன செய்வது? இதையும் சமாளிக்கின்றார் விளக்கவுரைகாரர்.

அஃதாவது நெடுந்தாம்பு என்பது நீண்ட கயிறு என்ற பொருளில் வரவில்லை. நெடுமை என்ற சொல் பெருமை என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. கண்ணனின் உடம்பிலே கட்டப்படுகின்ற பாக்கியத்தைப் பெற்றதால், இங்கு நெடுந்தாம்பு எனக் கூறினார் என்று விளக்கம் தருகிறார்.

இதுபோல மறந்துவிட்ட இடங்களையும், முரண்பட்ட இடங்களையும்' உரையாசிரியர்கள் காப்பாற்ற வேண்டும். அரும்பத உரைகாரரும், அடியார்க்கு நல்லாரும் அங்ஙனம் காப்பாற்ற மறந்துவிட்டனர். அவர்களும் மறதிக்கு ஆளாகிவிட்டனர். எனவே, இனி நாமாவது முன்னாட் காலை மறுநாள் மாலை என உரை கண்டு காப்பதுதான் பெருமை.

காலை மாலை என்று சொன்னால் ஒருநாளின் முற்கூறு, பிற்கூறு என எண்ணத் தோன்றும். ஆனால் மாலை காலை என்று சொன்னால் அங்கே நாட் குழப்பம் வராது. இரண்டு நாட்களின் கூறுபாடு என்பது வெளிப்படையாகத் தெரிந்துவிடும்.

'காலையில் போனார் மாலையில் வந்தார்'' என்று கூறினால் அது அடுத் துத் தோன்றும் மாலையைக் குறிப்பதாகக் கொள்வது உலக வழக்கு என்று திரு. ம. பொ. சி. அவர்கள் கூறுகின்றார்கள். ஆம். அதை உலகியல் என ஒப்புக்கொள்வோம். அதற்காக முன்னாள் காலை மறுநாள் மாலை என்று பொருள் கொள்ளுவதும் பொருந்துவதன்று எனக் கூறுவது பொருந்துதா. ஏனெனில், மூல பாடத்தில் வழியில்லாத பொழுது பின் தொடர்ச்சிகளைக் கொண்டு நாம்தான் அங்ஙனம் உரை கூறிக்கொள்ளுதல் வேண்டும்.

இதுவரை எழுதியவற்றால் உளநூலார் மறதிக்கு காரணமாகக் கூறிய வற்றுள், ஏதேனும் ஒன்றன் தாக்குதலால் சான்றோர்கள் மறதிக்கு ஆளானமை தெரியவரும். இளங்கோவடிகள், அரங்கத் திகைப்பாலோ அச்சத்தாலோ மறதிக்கு ஆளாகி இருக்க முடியாது. தன் உணர்ச்சி காரண மாகவோ, மன எழுச்சியின் நெருக்கடி காரணமாகவோ மறதிக்கு ஆளாகி இருக்க முடியாது. கண்ணகி துயரைத் தன் துயராக ஏற்றுக்கொண்ட துக் கத்தின் காரணமாக ஒருவேளை மறதிக்கு ஆளாகியிருக்கலாம். அல்லது அனை வரையும் தாக்குகின்ற களைப்பின் காரணமாக மறதிக்கு ஆளாகி இருக்கலாம்.

துறவிற் சிறந்த தூயவரல்லவா இளங்கோவடிகள். சான்றோர் அல்லவா? அவர்மீது மறதி என்ற குறையைச் சுமத்தலாமா எனப் பலருக்கு நெஞ்சம் அஞ்சுகிறது. அந்த அச்சத்தால்தான் மறதி என்பது தெரிந்தும் அதை மறதி என்று கூறாமல் மாண்பு என்று கூறுகின்றனர். நாம் மறதி என்று கூறுவதால் இளங்கோவடிகளின் பெருமை குறைந்துவிடப் போவதுமில்லை. மாண்பு எனக் கூறுவதால் இளங்கோவடிகளுக்குப் பெருமை நிறைந்துவிடப் போவதுமில்லை. அவருக்குள்ள பெருமை என்றும் நின்று நிலவும்.

''நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே'' என்று கூறிய தமிழ் மரபிலே தோன்றிய நம் கடமை ''காய்தல் உவத்தல் அகற்றி ஆய்ந்து,'' ''குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடிமிக்ககொளல்'' ஆகும்.

இளங்கோவின் ஆராய்ச்சி... ஒரு விளக்கம்

மூழ்கி எடுத்து வந்த சிப்பியில் உள்ள முத்தின் தரத்தை ஆராயவேண்டுமே தவிர, எடுத்துவந்தவர் பேரில் உள்ள விருப்பு —வெறுப்பை அடிப்படையாகக் கொண்டு முத்தின் தரத்தை ஆராய்வது நியாயமல்ல. இலக்கிய ஆராய்ச்சி என்பதும் இது போன்றதே.

'தமிழ் நாடு' பொங்கல் மலரில் திரு, ம. பொ. சிவஞானம் அவர்கள் 'இளங்கோவின் மறதி' என்ற தலைப்பில் எழுதிய ஆய் வுக் கட்டுரைக்கு மறுப்பாக—'தமிழ் நாடு' ஞாயிறு மலரிலும், வேறு சில தமிழ்ஏடுகளிலும் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அக்கட்டுரைகளிற் சில, யார்? எழுதியிருக்கின்றார் என்ற பார்வை யில்மறுப்புத் தந்திருந்தனவே தவிர, என்ன? எழுதியுள்ளார் என் பதைக் கவனித்ததாகவே தெரியவில்லை.

நாமும், அதே பிரச்சனையை நடுநிலைமையுடன் அணுக எண்ணி, காய்தல் உவத்தல் இன்றி ''இளங்கோவின் மறதி மறதியே'' என்று வலம்புரி, அண்ணாமலை அவர்கள் எழுதிய கட் டுரையை இவ்விதழில் வெளியிட்டுள்ளோம். இக்கட்டுரை மேலும் வளரலாம்.

மொழி வழி நாகரிகம்

தவத்திரு அடிகளார்

பொருளைப் போற்றி வளர்த்த தமிழ் நாகரிகம், பொருளின் பயன் காண்பதிலும் சிறந்திருந்தது. பொருளுக்குப் பெருமை அனுபவத்தின் வழியே வருகிறது. பொருளுக்கு என்று தனியே ஒரு மதிப்புக் கிடையாது, பொருள் வழி நாம்அனுபவிக்கும் அனுபவத்தின் காரணத்தாலேயே பொருளுக்குச் சிறப்பு. ஆதலால், பொருளுக்காக வறிதே போற்றி வாழும் பொய் நெறி, தமிழ் நாகரிகத்தில் கிடையாது. அடுத்து, அனுபவம் யாருக்கு? பொருளைத் தேடியவருக்கு மட்டுமா? அல்லது மற்றவர்களுக்குமா? தமிழ் நாகரிகத்தில் பொதுமையைச் சுற்றிப் படர்ந்த தனிமையே செழித்து விளங்குகிறது. தனித்தன்மை வெட்டவெளி எங்கும் காணோம், 'செல்வத்தின் பயன் ஈதலே' என்று புறநானூறு பேசுகிறது. அப்படி ஈத்துப் பொருள் நெறி போற்றாவிடில். பொருள் தப்பிப் போய்விடும் என்றும் புறநானூறு போற்றுகிறது.

'செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பினும் சிலவே துய்ப்பின பலவே'
என்பதும் புறநானூறேயாம்.

தமிழ் நாகரிகத்தில் கூறப்பெறுகிற ஈதற் பண்புக்குரிய அடிப்படை உணர்வு வேறு—வடமொழி நெறியில் கூறப்பெறுகிற 'தர்மம்' வேறு. ஈதற் கொள்கை அறத்தின் விளைவு. தர்மம் பாபத்தின் விளைவு. ஈதற் பண்பில் வாணிகக் கண்ணோட்டமில்லை. 'அறவினை வாணிகன் ஆய் அலன்' என்று புறநானூறு அறத்தை விலை கூறும் பண்பைக் கண்டிக்கிறது. தர்மத்தில் பாபக் கழுவாயும், மேலுலக மோட்சத்திற்கு அனுமதிச் சீட்டும் கிடைப்பதாகச் சொல்வர். ஈதல், சாதி இன எல்லைகட்கு உட்படாதது. தர்மம், சாதிகளின் எல்லைக்குஉட்பட்டது. ஈதல் வாங்குபவனின் மானத்தைப் பறிக்கவில்லை. தர்மம் பறித்தது. ஆனாலும், அதுவே மானமுடைமை என்றும் சொல்லப் பெற்றது. தமிழ் நாகரிகத்தில் வள்ளுவர் காலம்வரையில் ஈதற் பண்பே எங்கும் சிறந்து காணப் பெறுகிறது. பொருள்

தேடுவதன் நோக்கமே ஈத்து உவந்து இன்பம் பெறுவதற்குத் தான் என்று அக நானூறு பேசுகிறது. தலைவன் பொருள் தேடும் நோக்கத்தில் பிரிந்து சென்றிருந்தான். குறித்துச் சென்ற காலத்தே திரும்பிவரவில்லை. பிரிவுத் துன்பத்தால் அழுங்கும் தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறுகிருள். தலைவி ஆறுதல் பெற முடியாமல் அழுகிருள். 'தலைவன் வர மாட்டானே' என்ற ஐயப்பாட்டை வெளிப்படுத்துகிருள். தன்னுடைய தலைவனுக்குத் தன் மீதுள்ள காதலைக் காட்டிலும் பொருள் மீது அதிகப் பற்றெனக் கூறுகிருள். தலைவனுக்குப் பொருள் மீது அதிகப் பற்று என்ருல், பேராசைதான் காரணமா? இல்லை, இல்லை. தலைவன், வந்து கேட்பவர்கட்கு இல்லை என்று சொல்லிப் பழகாத நெஞ்சமுடையவன். ஆதலால், பொருள்மீதே அவருக்கு நாட்டம் என்று தலைவி கூறுகிருள். 'இல்லென் றிரப்போர்க்கு ஈவது கரத்தல் வல்லா நெஞ்சம் வாய்ப்ப நம்மினும் பொருளே காதலர் காதல்' என்பது அக நானூறு. அது மட்டுமா? வள்ளுவர் காலத்திலும் தற்கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன — இன்றும் நிகழ்கின்றன. ஆனல் அன்றையத் தற்கொலைக்கும் இன்றையத் தற்கொலைக்கும் உரிய காரணங்கள் வெவ்வேறு. பிறருக்கு உதவ முடியவில்லையே என்பது அன்றையத் தற்கொலைக்குக் காரணம். தான் வாழ முடியவில்லையே என்பது இன்றையத் தற்கொலைக்குக் காரணம். தமிழர்கள், கொடுக்காமையைக் கொடுந் துன்பமாகக் கருதி வாழ்ந்தார்கள். குறுந்தொகையில் வரும் தலைவன் ஒருவன் பொருள் வழிப் பிரிகிருன். பிரியுமுன் தலைவியாரிடம் விடைபெறுகிருன். விடைபெறும் பொழுது, குறித்த காலத்தில் தான் திரும்பாவிடில், 'கொடுப்பவர்களுக்கு வாங்குகிறவர்கள் வராது போனுல் பெறுகிற துன்ப அனுபவத்தை நான் பெறுவேனுகவும் என்று தலைவன் கூறுகிருன். 'இரவலர் வாராவைகல் பல வாகுக யான் செலவுறுதகவே' என்பது குறுந்தொகை. செல்வத்துப் பயன் துய்த்தல் அல்ல— பிறர் மகிழ்ந்து இன்புற ஈதலே யாம், என்ற மொழிவழி நாகரிகம் நம்முடைய வாழ்வில் மிகுதியும் இடம் பெறுவதில்லை.

பஸ் ஓடிக்கொண்டிருந்தது. அதில் ஒருவர் ஆயிரம் ரூபாயை இழந்து தவித்துக் கொண்டிருந்தார். உடனே கண்டக்டர் முன் வந்து இப்படிக் கூறினர்.

"யாரது ஆயிரம் ரூபாய் கொண்ட மணிப் பர்சை எடுத்திருந்தால் திருப்பிக் கொடுத்து விடுங்கள். அப்படிக் கொடுத்தால் அவர்களுக்குப் பரிசாக நூறு ரூபாய் வாங்கித் தருகிறேன்."

"பூ, நூறு ரூபாய் தானு? நான் இருநூறு ரூபாய் பரிசு தருகிறேன் மணிப்பர்சை எடுத்தவர்கள் என்னிடம் தாருங்கள்"—இப்படி ஒரு குரல் பின் பக்கமிருந்து ஒலித்தது.

தமிழும் தேவநாகரியும்

பன்மொழிப் புலவர்
கா. அப்பாத்துரையார்

எழுத்தும் இலக்கமும் இலக்கிய இலக்கணங்களும் தனக்கென ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வகுத்துக் கொண்டு வாழும் பழமை மிக்க மொழி தமிழ். அதுமட்டுமன்று, தமிழுக்கடுத்தபடி இவ்வகையில் உலகில் பழமைமிக்க மொழிகள்மலையாளம்,தெலுங்கு, கன்னடம் முதலிய தமிழின மொழிகள்தான்.

உலக முழுவதும் இன்று இலக்கக்குறியீடுகளைக் கடன்வாங்கியே பயன்படுத்துகின்றன. தமக்கென இலக்கமுடைய மொழிகள் உலகுக்கே இலக்கமீந்த மொழிகள் தமிழும் மேலே கூறப்பட்ட தமிழின் மொழிகளுமே. இன்றும் கீழ்வாய் இலக்கங்களை, உடைய மொழிகளும்இவையே. ஆங்கிலத்திலும் மேலை மொழிகளிலும், சமஸ்கிருதத்திலும், ஏனைக் கீழை மொழிகளிலும் இன்றும் அவை கிடையாது.

எழுத்து வகையிலும் வாழும் மொழிகளில் தமக்கென எழுத்து முறை உடைய மொழிகள் தமிழும் தமிழின மொழிகளும் மட்டுமே. தமிழ் தமிழெழுத்திலேயே எழுதப்படுகின்றது.மலையாள தெலுங்கு கன்னடங்கள், மலையாள தெலுங்கு கன்னடங்களுக்கென, அமைந்த எழுத்திலேயே எழுதப்படுகின்றன. ஆனால் உலகில் மற்றெந்த மொழிக்கும் இந்தச்சிறப்புக் கிடையாது.

ஆங்கிலம் முதலியமேலைமொழிகள் இலத்தீன் எழுத்தையே வழங்குகின்றன. இலத்தீன் கிரேக்க மொழிகள் அவற்றை மாண்ட பழைய இனங்களிடமிருந்தே, இரவல் பெற்றன.

உருது, பாரசீகம், அரபு மொழிகளும் மாண்ட பழைய மொழிகளிடமிருந்தே எழுத்துமுறையை இரவல் பெற்றன.

தற்கால இந்தியாவின் வடதிசைத் தாய்மொழிகள் யாவும் சமஸ்கிருதமும் எழுத்து முறைகளை 'நாகர்' என்ற மாண்டு மடிந்துபோன பழைய இனத்தவரிடமிருந்து கடன் வாங்கியே வழங்குகின்றனர். சமஸ்கிருதத்துக்குத் தனக்கென எழுத்து இல்லாததால்தானே வடக்கே நாகரியிலும், தெற்கே தமிழ்க் கிரந்த முதலிய எழுத்துக்களிலும் எழுதப்பட்டு வந்தது.

இந்தியாவுக்கோ, உலகுக்கோ, ஒரு பொது மொழி பொது எழுத்து முறை, பொருத்தமாக இருக்கக் கூடுமானால், அது தமிழ் மொழியும் தமிழ் எழுத்துமே. எல்லாத் தகுதிகளும் உடைய

தமிழின் உரிமை இன்று மதிக்கப் படாமல், உலகிலே ஆங்கில ஆரிய மும் இந்தியாவிலே ஆரிய சமஸ் கிருதமும் ஆரிய உருதும் ஆரிய இந்தியும் தமிழ் மீது சுமத்தப் படுவதற்கு ஒரே ஒரு காரணத் தைத்தான், தமிழரும் உலக மக்களும்காணக்கூடும், உலகிலும் சரி, இந்தியாவிலும் சரி, ஆளும் ஏகாதிபத்தியங்கள், ஆரிய இனச் சார்பானவையாய் இருக்கின் றன.

குடியுரிமையும், தன்னுட்சியும் பேசப்படும் தற்கால உலகில் உலகின் பழம்பெரும் பெருமை வாய்ந்த தமிழிலக்கிய வாழ்வும் மொழி வாழ்வும் வாழும் உரி மைக்கும் வளர்ச்சியுரிமைக்கும் இவற்றுக்கான சூழல் வாய்ப்புரி மைக்கும் வழிவகை காணுது மறுக்க வேண்டிய நிலையிலிருக் கிறது.

சமஸ்கிருதத்தின் திக்குமுக் காட வைக்கும் முற்றுகையால், பழந்தமிழ் பிளவுற்று மலையாள, தெலுங்கு கன்னடங்களை அயல் மொழிகளாகப் பறிகொடுத்து மீந்ததாயித்தினம். சுதந்திர வளர்ச்சி வாய்ப்பற்று அழுத்தப் படுகிறது. இதற்கிடையே இந்தி எனும் கொடுவாள் அரசிய லுரிமை ஆதரவு பெற்ற விருப்பப் பாடம். சட்ட திட்ட ஏற்பாடு ஆகிய மாயக் கனவுலகினில் கட் டப்பட்டு தமிழன் தலைக்குநேராக வாள்போல் தொங்க விடப்பட் டிருக்கிறது. இவை போதாமல் தேவநாகரி நேரே வருங்கால வாழ்வின் இருப்பிடமான அடி வயிற்றை நோக்கி ஏவப்படுவது கண்டு தமிழ்ப் பற்றுடையோர் அனைவரும் துடி துடிக்கின்றனர்.

தேவநாகரிவந்தால்—ஏன்? வரு மென்ற எண்ணத்தின் வாடைக் காற்றுப் பட்டாலே, தமிழர் பண்பாகிய தென்றல் மணம் அழிந்து பட்டுவிடும்.

மாண்ட பேரினங்கள் பலவற் றின் தடம் பிடித்துத் தமிழின மும் மண்ணுலகினின்று விடை பெற்றுக் கொண்டு போக வேண் டிய நிலையைத் தமிழன்இன்றைய சூழல் உண்டாகிக் கொண்டு வரு கிறது.

நாகரி முறை தமிழுக்குப்
பொருந்தவே பொருந்தாது

தமிழ் மொழிக்கு இன்றியமை யாத் தனிச் சிறப்புக்குரிய எழுத் துக்கள் எ,ஒ,ற,ழ,ன, ஃ ஆகி யவை. ஆரியர் தலையீட்டால் ஆய்தம் தமிழின மொழிகளில் அழிந்து தமிழிலும் அருகலாகி வருகிறது. 'ன' திராவிடர் ஒலிப் பில் எல்லா மொழிகளிலும் இருந் தும் தமிழில் மட்டும்தான் இருக் கிறது. ற,ழ, பழந்தமிழிலும் மலை யாளத்திலும் இன்றும் உண்டு. ஆனால் தெலுங்கிலும் கன்னடத் திலும் ஆரியத் தொடர்பால் அவை ஒழிந்து வருகின்றன.

இந்நிலையில் தேவநாகரிவருகை என்னும் எண்ணமே தமிழுக்குப் பெருங்கேடு செய்யும் என்பது ஒருதலை.

எலி என்பது ஏலியாகும்

ஒலி என்பது ஓலியாகும்

கேலிக்குரிய ஆபாசமான பல புதிய உச்சரிப்புகள் தோன்றி விடும்.

'தமிழ்' என்ற இனிய மொழிப் பெயரே 'தமில்' என்ற நாராசச் சொல்லாகி விடும்.

அவன் 'அவந்' ஆகக் காட்சி அளிக்கும், இவை மட்டுமோ?

தமிழின் 'க,ச,த,ப' ஆகியவை மட்டுமின்றி 'ட'வும் பெயரளவில் வல்லெழுத்துக்களே தவிர வல்லோசையற்றவை. க்க, ச்ச, ப்ப என இரட்டித்த விடத்தில் கூட அவற்றுக்கு வெடிப்போசை கிடையாது. ஆனால்நாகரி எழுத்து முறை இரட்டிக்காத, சீறி ஒலிக்காத போதே வெடிப்பு ஓசைகளாக ஒலிக்கும்.

ஆரியத் தொடர்பால் ஆரிய உயர் வகுக்கப் போலித் தமிழர் வானொலியில் இப்போதுமாத்தம் (மாதம்) சாத்தி (சாதம்) என நாராச ஒலிப்பு ஒலித்து வருகின்றனர். அதேசமயம், அந்தக் கணம், அந்தக் காலம் என்ற இயல்பான தமிழர் ஒலிப்பை அந்தக் கணம், அந்தக் காலம், என்றும், கல்கி, நல்குரவு என்பனவற்றைக் கல்க்கி, நல்க்குறவு, என்றும் அருவருப்பாக ஒலிக்கின்றனர். நாகரி எழுத்தின் எண்ணவாடையே இவ்வளவு செய்தால், எழுத்து இன்னும் எவ்வளவு செய்யாது.

'க,ச,த,ப' எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் தமிழில் நான்கு ஒலிகளும், ட,ற,வுக்கு இரண்டு ஒலிகளும் உண்டு. இந்த ஒலிகளில் ஒன்றேனும் நாகரியில் கிடையாது.

மாதம், பாதி, பதிவு, பந்தம், ஆகிய சொற்களில் 'த'கரத்திற்கு நான்கு ஒலிகள் உண்டு. நாகரி நாலையும் தமிழர் கேளாத வேற்றொலிகளாக்கும்.

நன்றி நாகரி ஒலியில் 'நண்ட்ரி' ஆகும்.

குற்றம் நாகரி ஒலியில் 'குட்ரம்' ஆகும்.

தமிழில் குற்றியலுகரம் மட்டுமின்றி இறுதி உகரம் யாவுமே தனிநுட்ப ஒலிகளை உடையன தேவநாகரி எல்லாவற்றையும் கிட்டத்தட்ட நெடில் போல ஆக்கிச் சீரழித்துவிடும்.

வண்டு—வண்டூ எனவே ஒலிக்க முடியும். இவை மட்டுமோ?

தமிழில் ஐ, ஔ, நாகரியில் ஐ, ஔ என்று எழுதப்பட்டால் ஒலி வேறுபட்டுவிடும். ஐ, ஔ. என்று வடநாட்டாரும் சமஸ்கிருதப் புலவர்களும் எழுதி அதை ஆங்கிலத்தில் ai (fair) au (caught) என்பது போல் ஒலிக்கிறார்கள்.

இதனால் தமிழ்க்கலை, 'கலாஎ' போன்றும், 'ஔவை ஆஉஊஏ' போன்றும் ஒலிப்பதைக் கேட்கும் நரக தண்டனையைத்தமிழர் பெற வேண்டும்.

நாகரி எழுதும் மொழிகளில் ஐ, ஔ, ஒலிப்பு வேண்டுமானால் ஆஇ, ஆஉ, என்றுதான் எழுத வேண்டும். இதனை ஆய், ஆவ், என்றும் எழுதுவதுண்டு. ஆகவே, தாய், பாவு என்பவற்றை நாகரியாளர் தை, பௌ, என்று ஒலிக்கக் கேட்கும் கேலிக்குரிய அவல நிலையையும் தமிழர் அடைவர். தமிழர் பண்பையே கெடுத்து, தமிழர் பழந்தமிழை அறிய முடியாமற் செய்ய வேண்டுமானால், அவர்கள் மீது தேவநாகரியைத் புகுத்தினால் போதும். ஏனெனில் அதைப் படிப்பவர்களே இது வரை அதனைத் தட்டுக் கெடச் செய்து வருகின்றனர்.

இந்தியால் தமிழர் வாழ்வு நின்றுகெட்டுவிடும். ஆனால் தேவநாகரியால் அது இன்றே கெட்டுவிடும். இந்திவெறியாளர் ஏகாதிபத்தியப் பேராசைக்கு ஓர் அளவில்லை. அது உவமையாகக் கூறத் தக்கது ஒன்றுதான்—அது தென்

ஆப்பிரிக்கவெள்ளையர், போர்ச்சுகீசியர் பேராசை ஒன்றுக்கே ஈடாகும். உலகம் தென் ஆப்பிரிக்காவைக் கண்டிக்கிறது. நீக்ரோப் பழங்குடிமக்கள்போர்ச்சுகிசீயரை மீறிக் கடலாகச் சூழ்ந்தெழுந்து ஆர்ப்பரிக்கின்றனர். தென் ஆப்பிரிக்க வெள்ளையர் அட்டூழியமும், போர்ச்சுகீசியர் அடக்குமுறை வெறியும் அழிவது உறுதி. அந்தத் தோழர்களுடன் இந்தி—தேவநாகரி வெறியாட்சியும் ஒழியும் வகையில் தமிழரும் தென்னவரும் குரலெழுப்பி முற்போக்கு உலகின்கவனத்தை இந்த மூன்ருவது பிற்போக்கு ஏகாதிபத்தியத்தின் பக்கமும் திருப்புவார்களாக!

இந்தியாவிலோ, உலகிலோ உண்மை நேச பாச ஒற்றுமை விரும்புபவர், மொழிக்கு மொழி தொடர்பை வளர்க்க, ஒவ்வொரு மொழியாளரிடையும் மற்றமொழிகள் நேசம்வளர்க்கத் தான் முனைவார்கள். ஒரு மொழியைப் பொது மொழியாக்க மற்ற மொழிகள் மீது ஆட்சி செய்யும் படி தூண்ட மாட்டார்கள்.

எல்லா மொழியிலக்கியங்களையும் தமிழரிடைத் தமிழ் எழுத்திலும், வங்க மக்களிடத்திலே வங்காளத்திலும் இந்தி மக்களிடையே இந்தியிலும், எழுதிப் பரப்பும் வேலைதான். ஒரு நல்ல தேசிய அரசியல் செய்ய வேண்டியது. 14 மொழிகளும் இந்நிலையில் சரிசமமாக நேசபாசத்துடன் வளரும். இந்த நல்ல தேசியம் இந்தியாவில் தோன்றுமா?

மழை

இருண்டது வானம்
திரண்டன மேகம்
உருண்டன வெள்ளம்
மிரண்டன உயிர்கள்

இடித்தன வானம்
வடித்தன நீரை
அடித்தன காற்று
துடித்தன மரங்கள்

களித்தனர் உழவர்
தெளித்தனர் விதைகள்
முளைத்தன பயிர்கள்
விளைத்தன செல்வம்

ஓடிடும் ஓடையில்
ஆடுவர் சிறுவர்
பாடிடும் பறவை
நாடிடும் மரத்தை

வெள்ளம் ஓடிடும்
கொள்ளை கொண்டிடும்
உள்ளம் குமுறிடும்
பொல்லா மழையால்

நல்லதும் மழையால்
அல்லதும் மழையால்
உள்ளதும் மழையால்
எல்லாம் மழையால்!

— பி. வி. கிரி

நல்ல நடிகை

★

பலமுறை சென்னைக்குப் படையெடுத்துத் தோல்வியை சுமந்து கொண்டு வந்தவன் நான். அதிர்ஷ்டத்தைத் தேடி அலைந்து திரிந்து களைத்துப் போய், சென்னைக்குக் கடைசி வணக்கத்தைத் தெரிவித்து விட்டு ஊருக்கு ரயிலேறிவிட்டேன்.

'அதிர்ஷ்டம் நம்மைப் பொறுத்த வரைக்கும் கானல் நீர்' என்ற எண்ணம் என்நெஞ்சில் ஆழமாகப்படிந்து கிளைவிட்டுப் படர்ந்துவிட்டது.

''சார், தந்தி''—குரல் கேட்டதும் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த நான் வாரிச் சுருட்டி எழுந்து வெளியே வந்தேன். தந்திச் சேவகன் காலனைப்போல நின்றான். என் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது. காலையின் மலர்ச்சி போன்ற என் மனம் மாலை வையகமாகிவிட்டது. சில நாட்களாக என் தாத்தா படுக்கையில் கிடக்கிறார். 'கடவுளே அவருக்கு எதுவுமே நேரக் கூடாது.' என் மனம் கடவுளைவேண்டியது.

கையெழுத்திடும்போதும் கை நடுங்கியது.

தந்தியை விரித்துப் பார்த்தேன். என் கண்கள் அகல விரிந்தன.

அதிர்ஷ்டம் கதவைத் தட்டுமென்ற நம்பிக்கையற்றிருந்த எனக்கு ஒரே வியப்பாக இருந்தது. சென்னையிலுள்ள ஒரு பட நிலையத்தார் தந்தி கொடுத்திருந்தார்கள்.

''உங்கள் கதை எங்களுக்குப் பிடித்திருக்கிறது. அது சம்பந்தமாக ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். உடனே புறப்பட்டு வரவும்.''

வானத்திற்கும் பூமிக்குமாகச் சிறகடித்துப் பறந்தது என் மனம்.

அலுவலகத்திற்கு ஒரு மாதம் 'லீவ்' போட்டுவிட்டுக் கிளம்பிவிட்டேன்.

திருவனந்தபுரம் ரயில் நிலையத்தில் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் ஏறிக்கொண்டேன். என் மனம் திரைக்கதையைப் பற்றியே வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

ரயில் புறப்படுவதற்கான கடைசி மணியும் ஒலித்தது. ஒரு கையில் சிறிய பெட்டியுடன் ஓடிவந்த யுவதியொருத்தி நான் இருந்த பெட்டியில் ஏறினாள்.

அவளது அழகு என் விழிகளைக் குத்திட்டு நிறுத்திவிட்டன. எனக்கெதிரேயுள்ள ஆசனத்தில் ஒயிலாக அமர்ந்துகொண்டு பெட்டியை நோட்டமிட்டாள். எங்கள் இருவரைத் தவிர அந்தப் பெட்டியில் வேறு யாருமில்லை.

நானும் எவ்வளவோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். கதைகளிலும் படித்திருக்கிறேன். ஆனால் இவளைப்

வனமாலிகை

போன்ற பெண்ணை இதுவரைக்கும் நான் பார்த்ததில்லை.

செக்கச் செவந்த நிறம், பட்டாம் பூச்சியைப் போல் 'படபட'க்கும் இமைகள், அவற்றின் கீழ் கயல் போல் நீள் விழிகள், சுருள் சுருளான கேசம், காதை மூடியும் மூடாமலும்'' ஓடிய அழகே அலாதி. சிவந்த இதழ்கள், மாம்பழக் கன்னங்கள்...கனி பழுத்தாற்போல இளமையின் செழிப்பு!

நெற்றியில் விழுந்த கேசச் சுருளை லாவகமாகப் பின்னல் தள்ளிவிட்டுக் கொண்டாள்.

''எவிடே போணு?'' அவளே கேட்டாள். தலையில் ஐஸ் வைத்தாற் போல என் உடம்பெல்லாம் 'கிளு கிளு'ப்பு ஏற்பட்டது.

''சென்னைக்கு''

பேச்சு அத்துடன் முடிந்துவிட்டது!

என் நெஞ்சில் ஓடிக்கொண்டிருந்த திரைப் படக் கதை அறுந்துவிட்டது இப்போது அழகுக் கன்னியைப் பற்றியே கனவுகள்...மனக் கோட்டைகள்!

கடைக்காவூர் ஸ்டேஷன் வந்து விட்டது!

''ஒரே தாகமாக இருக்கிறது. 'கூல்டிரிங்ஸ்' போனல்கூப்பிடுங்கள்'' என்றுள் அந்த வஞ்சிக்கொடியாள் தமிழில்.

''உங்களுக்குத் தமிழ் கூடத் தெரியுமா?''

''அப்பாவுக்குச் சென்னையில்தான் உத்தியோகம். நான் அங்கேதான் பி.ஏ. வரைக்கும் படித்தேன். நீங்கள் மலையாளி என்று நினைத்து...'' அதற்கு மேல் அவள் பேசவில்லை. மோகனப் புன்னகையை என் மீது வீசிவிட்டு வெளியே பார்த்தாள்.

''அவசரமானல் கடைக்குப் போய் வாங்கி வரட்டுமா?''

''வீண் சிரமம் எதற்கு, வேண்டாம்''

அதன் பிறகு நாங்கள் சரளமாகப் பேசத் தொடங்கி விட்டோம்.

அவள் அப்பா உண்ணி சென்னையில் ஐ. ஏ. எஸ். ஆபீசராக இருக்கிருராம். அவள் அண்ணன் லண்டனில் டாக்டருக்குப் படித்து முடித்து விட்டு அடுத்தவாரம் சென்னைக்குத் திரும்புகிருன். அவனைப் பார்க்க சுஜாதா சென்னைக்குப் போகிருள்.

என்னைப்பற்றியும் சொல்லிவைத்தேன். சினிமாவிற்குக் கதை எழுதப் போவதுபற்றி மூச்சுக்கூட விடவில்லை. உறவினர் அவரைப் பார்க்கப் போவதாகச் சொல்லிவைத்தேன்.

கொல்லம் ரயில் நிலையம்!

''சார், உங்களிடம் நூறு ரூபாய்க்கு சில்லறை இருக்கா? அவசரத்தில் மாற்றுமல் வந்துவிட்டேன்'' என்ருள் சுஜாதா.

''பிறகு மாற்றிக்கொண்டால் போகிறது. எவ்வளவு வேண்டும்?''

''சென்னை செல்வது வரைக்குமுள்ள செலவுதான்...''

''இதற்குத்தானு? கவலைப்படாதீர்கள். நான் கொடுத்து விடுகிறேன்'' என்றேன்.

''உங்களைவிடச் சின்னவன் நான். தைரியமாக ஒருமையில் பேசினல் போதும்'' என்றவள் உதட்டில் சிரிப்பு நெளிந்தது. அது என்உள்ளத்தில் போதையை எழுப்பியது.

புனலூரில் ஒருவர் எங்கள் பெட்டியில் ஏறினர். அவருக்கு வயது அறுபது இருக்கும்.

நானும் சுஜாதாவும் பேசிப் பழகிக் கொண்டவிதத்தைப் பார்த்து தப்பாக நினைத்துக்கொண்டார்.

''தம்பி கொடைக்கானலுக்கா? ஊட்டிக்கா?'' என்று கேட்டார் அவர். நான் அப்படியே விக்கித்துப் போய்விட்டேன். அவளைப்பார்த்தேன். சுஜாதா ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிக்கொண்டு உதட்டளவில் சிரித்துக்கொண்டிருந்தாள்.

"நீங்கள் நினைப்பது போலில்லை" எப்படியோ சொல்லிவைத்தேன்.

"இன்னும் முடிச்சுப் போடவில்லியா?" என்றவர் பிரமாதமாகச் சிரித்துக் கொண்டார்.

அவள் எங்கே? நான் எங்கே? நான் கோபுரத்தின் அடியில், அவள் உச்சியில். அவள் அழகிற்கு உறை போட வருமா என் அழகு? என் அழகை விரும்பி ஒரு பெண் என்னைக் காதலித்தால் நிச்சயம் அவள் அழகு ரசனையற்றவளாகத்தானிருக்க முடியும்.

பெரியவரின் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. அவரும் விருதுநகரில் இறங்கிவிட்டார். நான் ஆசுவாசப் பெருமூச்சு விட்டுக் கொண்டேன். அவர் இறங்கியதும் சுஜாதா ஓரக்கண்ணால் என்னைப் பார்த்து குறும்பாகச் சிரித்தாள்.

ரயில் புறப்படும்போது சினிமா இதழ் ஒன்றை வாங்கிக்கொண்டாள் அவள்.

"இதோ பாருங்கள். இந்தப் படம் பிரமாதமாக ஓடும்" என்றவள் எழுந்துவந்து என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள். அது எனக்கு வெட்கமாக இருந்தது. ஆனாலும் அழகுக் கன்னியொருத்தி பக்கத்தில் இருப்பதால் நான் வானவெளியில் பறந்தேன்.

"எங்கே பார்க்கிறீர்கள். இதைப் பாருங்கள்" என்றவள், வேறு பக்கத்தைப் புரட்டிச் சுட்டிக் காட்டினாள். காதலர்கள் இருவர் கைகோர்த்து மலை உச்சியில் ஏறுவதுபோலிருந்தது அது.

எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அதிர்ஷ்டம் அழகான பெண்ணொருத்தியையும் அழைத்துக்கொண்டு வந்துவிட்டது. என் உணர்ச்சிகள் நிலைகொள்ளாமல் தவித்தன.

படித்த பட்டணத்துப் பெண்கள் சகஜமாகப் பழகுவார்கள் என்பதும், எனக்குத் தெரியும். 'நாம் தவறாக நினைத்து ஏதாவது செய்துவிட்டால் அது ஆளை உள்ளே தள்ளினாலும் தள்ளிவிடும். 'கிணற்று நீரானால் எங்கே போய்விடப்போகிறது?"

இரவு பத்துமணி வரைக்கும் பேசிக்கொண்டே இருந்தோம். என்ன பேசினோம் எதைப்பற்றி பேசினோம் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. ஆனால், அவள் பேசியதெல்லாம் எனக்கு இனித்தது.

"சுஜாதா தூக்கம் வந்தால் படுத்துக்கொள்" என்றேன்.

"நீங்கள்!"

"நான் இப்படியே உட்கார்ந்து தூங்கிவிடுவேன்"

அவள் அதற்குமேல் ஒன்றுமே பேசவில்லை. படுத்துக்கொண்டாள்.

எனக்குத் தூக்கம் வந்தால் தானே?

இரவு...தனிமை..கட்டழகிஒருத்தி துவண்டு துயின்று கொண்டிருக்கிறாள்...என் உணர்ச்சிகளைக் கட்டி மேய்ப்பதற்கு நான் மிகவும் சிரமப்பட்டேன்.

இரவு மணி இரண்டு.

டிக்கெட் பரிசோதகர் எங்கள் பெட்டியில் ஏறினார்.

"சார் டிக்கெட்?"

அரைத் தூக்கத்தில் ஆடிவிழுந்து கொண்டிருந்த நான், என் பெட்டியைத் திறந்து 'டிக்கெட்'டை எடுத்துக்கொடுத்தேன்.

"ஒன்றுதானே இருக்கிறது?"

"ஆமாம் அவளிடம்..."

என்னை அவர் ஒருமாதிரியாகப் பார்த்தார். அவளை எழுப்புவதா வேண்டாமா என்று ஒரு கணம் தயங்கி நின்றார்.

உங்கள் பையனுக்கு நடக்கக் கற்றுக் கொடுங்கள். ஓடுவதற்குத் தானாகவே கற்றுக் கொண்டு விடுவான்.

"அவர்கள் யார், சார்?"

"அவள் அப்பா சென்னையில் ஐ. ஏ. எஸ். ஆபீசராம். பெயர் உண்ணி.

"இவர்கள் எல்லாம் முதல் வகுப்பில் வராமல்..."

"முதல் வகுப்பு டிக்கெட்தான் எடுத்திருக்கிறாள். அந்தப் பெட்டியில் வேறு ஆட்கள் இல்லாததால் இந்தப் பெட்டிக்கு வந்து விட்டாள்" என்று நானும் சமயோசிதமாகச் சொல்லி வைத்தேன்.

"சரி, தூங்குபவர்களைத் தொந்தரவு செய்யவேண்டாம். நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்" என்று சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு அடுத்த பெட்டிக்குத் தாவி விட்டார்.

நான் சுஜாதாவைப் பார்த்தேன். காற்றில் துகில் ஊஞ்சலாட அவள் நிம்மதியாகத் தூங்கினாள். கனவு காண்பவளைப்போல அடிக்கடி அவள் கதுப்புக் கன்னங்களில் மின்னல் கோடுகள் ஓடி மறைந்தன.

விடிந்தும் விடியாக் காலைப் பொழுது!

யாரோ என்னைத்தொட்டு எழுப்புவதை உணர்ந்து திடுக்கிட்டு விழித்தேன். எதிரே சுஜாதா நின்றாள்.

"நீங்கள் படுத்துத் தூங்கவே இல்லையா?"

"உட்கார்ந்தே தூங்கிவிட்டேன்"

"போய் முகத்தை அலம்பிக் கொண்டு வாருங்கள். தாம்பரம் வரப்போகிறது" என்றாள். சுஜாதாவின் சுடர்விழிகளில் இறுக்கம் மிதந்தது.

"நான் இல்லாமலிருந்தால் நீங்கள் நிம்மதியாகத் தூங்கியிருப்பீர்கள்?" என்றவள் இலேசாகச் சிரித்துக் கொண்டாள்.

அதன் பிறகு நாங்களிருவரும் எழும்பூர் வருவது வரைக்கும் வாயை மூடவில்லை, பேச்சு, சிரிப்பு...

எழும்பூர் நிலையத்தில் ரயில் நின்றது!

அதோடு, "எங்கள் வீட்டு வேலைக்காரன் நிற்கிறான்" என்றவள் அவசர அவசரமாக இறங்கினாள்.

"சுஜாதா, உன் விலாசம்...?" என்றேன் நான். நான் சொன்னதை காதில் வாங்கிக் கொள்ளாதவளைப் போல அவள் ஜன சமுத்திரத்தில் கலந்து விட்டாள்.

திடீரென்று என் மனத்தில் சூன்யம் குடியேறிவிட்டது. அவளது அழகு உருவம் என் நெஞ்சகச் சிறையில் பத்திரமாக இருந்தது.

நான் அவளுக்காக ரயிலில் பத்து ரூபாய் வரைக்கும் செலவு செய்திருக்கிறேன். அதற்குக்கூட நன்றி சொல்லவில்லை. படித்திருக்கிறாளாம், படித்து...என்ன பயன்?

நானும் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தேன். டாக்சி வைத்துக் கொண்டு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றேன்.

நான் எதிர்பார்த்ததற்கு அதிகமாகப்பட முதலாளி என்னை வரவேற்றார்.

ஒருவாரமாக எனக்கு ஓய்வு ஒழிவில்லை. படப்பிடிப்பு விரைவில் தொடங்க இருப்பதால், குறிப்பிட்ட காட்சிகளுக்கு வேண்டிய வசனங்களை குறிப்பிட்ட காலத்திற்குள், முடித்துக் கொடுக்க வேண்டும். எனது திரையுலக வாழ்வின் அளவுகோல் முதல்படம். இதில் வெற்றி பெற்றுவிட்டால்...

இந்த ஒரு வாரகாலத்திலும் சுஜாதாவின் முகம் அடிக்கடி என் கண்முன் தோன்றத்தான் செய்தது.

எதைக் கண்டு ஒரு மனிதனுக்குச் சிரிப்பு வருகிறது என்று கவனி. அவன் குணம் எப்படிப் பட்டதென்று மிக நன்றாய்த் தெரிந்து கொண்டு விடலாம்.

வெள்ளைக் காகிதத்தில் அவள் சிரித்துக் கொண்டு நிற்பது போன்ற பிரமை தட்டும். சற்றுநேரம் திறந்த பேனு அப்படியே தவம் செய்து விடும்.

ஒருநாள்...

மாலையில் உலாவிவிட்டு வரலா மென்று வெளியே கிளம்பினேன். சுஜாதா எங்காவது தட்டுப்படு கிருளா என்று கண்கள் தேடி அலைந்தன. அவளை எங்கே போய்த் தேடுவது? மெரீனு கடற்கரையில் உட்கார்ந்து வருவோர் போவோரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். சுஜாதாவைப் பார்க்க வேண்டு மென்ற ஆவல் விஞடிக்கு விஞடி அதிகரித்தது.

ஆனுல், ஏமாற்றம்தான்.

மறுநாள் காலையில் நானும் பட முதலாளியும் திரைக்காட்சி சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருந்தோம். உப கதாநாயகியாகப் புதுமுகத்தைப் புகுத்தலாமென்று அவர் விரும்பினுர். பார்த்துப் பார்த்துப் பழகிப்போன முகங்களை ரசிகர் விரும்புவதைவிட,புதுமுகத்தை ஆவலோடு எதிர்பார்ப்பார்கள்.

அப்போது உதவி டைரக்டர் அங்கே வந்தார்.

''என்ன சார், ஏதாவது புதுமுகங்கள் கிடைத்ததா?''என்று கேட்டார் படமுதலாளி.

''தேடிப்போன கொடி காலில் பற்றிக்கொண்டதுபோலக் கிடைத்து விட்டது சார். மலையாளத்துப் பெண் என்றுலும் நன்ருகத் தமிழ் பேசுகிருள். நாடகங்களில்கூட நடித்திருக்கிருளாம். சினிமாவில் சேர வேண்டுமென்ற ஆசையில் வீட்டில் சொல்லாமல் ஓடி வந்துவிட்டாள், ஒரு வாரமாக அவள் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிருள். ரயிலில்கூட 'டிக்கெட்' எடுக்கவில்லையாம்''.

''அவள் முகம் எப்படி? காமிராவுக்கு சரிப்பட்டு வருமா?'' என்று கேட்டார் முதலாளி.

''பிரமாதமாக இருக்கும். வெளியிலே நிற்கிருள். வரச் சொல்லட்டுமா?''

''சரி, வரச் சொல்லுங்கள்'' என்ருர் முதலாளி.

வாசலில் நிழல் விழுந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். திகைத்துப் போனேன். 'சுஜாதா நீயா?'—அடித் தொண்டையிலிருந்து சத்தம் வெளியே வரவில்லை. வியப்புபொங்க அவளையே பார்த்தேன். என்னைப் பார்த்த அவளும் ஒரு கணம் திகைத்துவிட்டாள். அவள் முகம் வாடிவிட்டது. அவள் என்னைப் பார்த்தாள். அது,''என்னைக்காட்டிக் கொடுத்துவிடாதீர்கள்'' என்று கெஞ்சுவது போலிருந்தது.

''கதாசிரியர் சார், இவளை அந்தப் பாத்திரத்தில் நடிக்க வைத்தால் என்ன?''

சுஜாதா வியப்பாக என்னைப் பார்த்தாள்.

நான் தலையை ஆட்டிவைத்தேன்.

உள்ளத்தில் பலவித உணர்ச்சிகள் விளையாடி வாய் திறக்காமல் செய்துவிட்டன. சினிமாவில் நடிப்பதற்கு முன்னே அவள் கைதேர்ந்த நடிகை என்பது எனக்கு மட்டும்தானே தெரியும்? ரயிலில் அவளது நடிப்பு...!

சமுதாயம் வேறு. சமயம் வேறு. சமுதாயத்தில் அவ்வப்பொழுது எழும் பிரச்சனைகளுக்கும், சமயத்திற்கும் சம்பந்தம் இல்லை எனக் கருதுபவர்கள், வாதிடுபவர்கள் பலர் உளர். இந்த தத்துவம் சரியானதல்ல.

-தவத்திரு அடிகளார்.

எதையும் தாங்கும் இதயம்

ஆடம்பர மில்லாமல் வெளி வரும் படங்கள் சில, அல்வாத் துண்டாக அமைந்து விடுவ துண்டு. எதையும் தாங்கும் இதயம் ஆடம்பரமில்லாமல் வெளிவந்த படந்தான்.

ஆனால்...

கதையில் புதுமையில்லை, அதனால் சுவை குறைகிறது.

சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுக்குக் காரணமாக இருக்கிற வல்லூறுகளை, ஊரை அடித்து உலையில் போடுகிறவர்களை, வேடதாரிகளை மையமாக வைத்துக் கதை பின்னப் பட்டிருக்கிறது. சமுதாயக் குறைபாடுகளைப் படம் பிடித்துக் காட்டும் பொழுது, அந்நிகழ்ச்சி கதையோடு ஒட்டாமல் தனித்து நிற்பதுண்டு. ஆனால் எதையும் தாங்கும் இதயத்தில் சமுதாயசீர்திருத்தம் கதையோடு இழுத்துச் செல்லப்படுவதுடன்—அதைஒரு கட்சிப் பிரசாரமாக இல்லாமல் கதையோடு இணைத்துப்படமாக்கியிருக்கிறார் இயக்குநர் ப. நீலகண்டன்.

அரைக்கால் டிராயரோடு அறிமுகமாகும் எஸ். எஸ். இராஜேந்திரன் பாதை யோரங்களில் வாழும் பஞ்சைகளுக்காகப் பரிந்து பேசும்பொழுதும், கொடுமைக்குக் காரணமானவர்களைக் குற்றம் சாட்டும் பொழுதும், வலிய வரும் மேலிடத்துக் காதலை அலட்சியப்படுத்தும் பொழுதும், ராஜேந்திரன் அருமையாக நடித்துள்ளார்.

இராதா இல்லாத காட்சிகள் குறைவு. தன் மகள் கிராம சேவைக்கு வரும் பொழுது ''அசிங்கமான இடத்துக்கு நம்ம மாதிரி அந்தஸ்து உள்ளவங்க வரலாமா, கலெக்டர் வீடு, டீ பார்ட்டி, டின்னர் இப்படி நாகரிகமான நிகழ்ச்சிகளிலே கலந்துக்கிட்டு,சேவை செய்யம்மா போ'' என்று தன் மகளைக் கண்டித்து அனுப்புவதும், கிராம சேவை செய்வதற்காகத் தன் மகளுக்குப் பாராட்டுக் கிடைக்கும் பொழுது ''கிராம சேவையே எங்க குடும்பத்துக்கு ஒரு தொத்து நோய் மாதிரி. ஏழைகளுக்கு உதவி செய்யாட்டா எங்களுக்குத் தூக்கமே வராது'' என்று புகழுக்குப் பல்லிளிக்கும் காட்சியில் ராதாவின் நடிப்பு, சிறப்பாக இருக்கிறது. ஓர் வேண்டுகோள் அவர் இரைச்சல் போடுவதை கொஞ்சம் குறைத்துக் கொள்ள வேண்டும்.

முத்துராமன் இளமையைக் காட்டிலும் முதுமையில் நன்றாக நடித்துள்ளார். துப்பாக்கியைக் காட்டி மனைவியைப் போகச் சொல்லும் காட்சியிலும்—மனப் போராட்டக் கட்டத்திலும் தெளிந்த நடிப்பு.

தன் சொந்தக் குழந்தையை அனாதைக் குழந்தையென எண்ணிப் பாலூட்டும் பொழுது, தவித்துக் கொண்டிருந்த தாய்மை உணர்ச்சி முழுமை பெறுவதை முகபாவத்தில் நன்கு சித்தரித்துக்காட்டுகிறார் பி. எஸ். சரோஜா.

கே. ஆர். ராமசாமி சந்திரகாந்தா நன்றாக நடித்துள்ளனர்.

விஜயகுமாரி கதைக்குத் துணை இல்லை என்றாலும், ராஜேந்திரனுக்கு இணையாக நடித்துள்ளார். நல்ல கருத்துக்கள் பொதிந்த அருமையான வசனம், பாடல் அத்தனையும் நன்றாக உள்ளன. படத்தோடுமறந்துபோனதற்குப் பாப்பாவின் இசை தான் காரணம்.

படத்தில்...

நோய்க்கு மருந்துண்டு.

வாய்க்குச் சுவையில்லை.

வெண்பாப் போட்டி

நாளை எனக்கு நடக்குந் திருமணத்தின்
வேளை நெருங்கிவர வேள்வருத்தும்; —வேளைவெல
எல்லோன் வரவை எதிர்நோக்கி ஏங்குகின்றேன்
பொல்லாத வல்லிரவே போ.

— பெரியகுளம்; சுப்பராயலு.

பள்ளிக்குச் சென்றுநான் பாடம் படிப்பதற்கும்
துள்ளிவிளை யாடிச் சுகிப்பதற்கும் தெள்ளுதமிழ்
நல்லாரைக் காண்பதற்கும் நாடுகின்ற தென்னுள்ளம்
பொல்லாத வல்லிரவே போ.

காதலனின் வன்பிரிவால் காதலிக்குத் தூக்கமில்லை;
ஆதவனின் வன்பிரிவால் அம்புசப்பூ—ஏதமிகும்;
நில்லாதே துன்புறுத்தி நேரத்தை நீட்டாதே;
பொல்லாத வல்லிரவே போ.

— சொ. செயரத்தினம், சிலட்டூர்.

முக்கனியாம் மூதுரையாம் முப்பாலாம் அண்ணுவை
இக்காலம் கைவிட்டார் காஞ்சிமக்கள்—தக்காரைத்
கெல்லித் தரந்தாழ் தமிழ்நிலத்தில் துட்டுவெல்லும்;
பொல்லாத வல்லிரவே போ.

— அ. சி. மணியன் (அம்மையப்பன்)

மரம்பூஞ் செடிகொடிக்கு வாய்ந்துநீர் வார்த்துச்
சரங்கோத்துத் தந்திமுகத் தந்தை—உரஞ்சேர
நல்லாரம் சாற்றியுயர் ஞானம் பெறவேண்டும்
பொல்லாத வல்லிரவே போ.

மூட்டைகடி தூங்க முடியவில்லை; முற்காலச்
சேட்டை மனைவிவசை தீரவில்லை;—வீட்டைவிட்டு
மெல்ல வெளிவந்தால் வீசுபனி வாடைகுளிர்
பொல்லாத வல்லிரவே போ.

— மு. சோமசுந்தர ஆச்சாரிய சுவாமிகள். பூவைமாநகர்.

கூடிக் களித்த கொழுநர்தாம் இன்றில்லை;
தேடிப் பொருள்கொணரச் சென்றதனல், என்தனிமை
கொல்லாமற் கொல்லும் கொடுமைஎன் செய்தேன்நான்
பொல்லாத வல்லிரவே போ.

—க. சுப்பிரமணியம், காரைநகர், இலங்கை.

இல்லாளர் இன்றென்னே டில்லாத தாலேநீ
நில்லாமல் உன்பொழுதை நீட்டுவதோ டல்லாமல்
கொல்லாமல் என்னைத்தான் கொல்கின்ருய்; சொல்லாமல்
பொல்லாத வல்லிரவே போ.

—ஆ. துரைக்கண்ணு உப்பிலிபாளையம்,

சொல்லாமல் வந்தார் சுடர்தோற்றத் தால்துன்பம்
இல்லாமல் செய்தார் எனதத்தான்—சொல்லாற்றல்
இல்லாது நின்றேன் எனைச்சிலையாய் ஆக்கியதேன்?
பொல்லாத வல்லிரவே போ.

—தென்கச்சி கோ. சுவாமிநாதன், கோவை.

காதலனைக் காணுமல் கன்னிமை சோர்ந்திருக்கும்
மாதரசி தாமரையாள் மாண்புறவே—மேதினியில்
எல்லோரும் போற்றும் எழிற்கதிரோன் தோன்றுதற்குப்
பொல்லாத வல்லிரவே போ.

—புலவர் சிவ. மீனுட்சிசுந்தரம், பூவைமாநகர்.

திங்கள் ஒளியுமிழும் சிந்தும் பனிமூட்டம்;
அங்கமெலாம் இன்பில் அனல்கூட்டும்—அங்குவரும்
சில்லென்ற தென்றலும் தீண்டும் அவர்நினைவால்
பொல்லாத வல்லிரவே போ.

—அன்னைதாசன் சென்னை-4

கூடி மகிழக் கொழுநன்தான் ஈங்கில்லை;
தேடிப் பொருள்பெறவே சென்றிட்டான்-நாடியே
இல்லந் தனில்வந்தே என்னைத் துயர்ப்படுத்தும்
பொல்லாத வல்லிரவே போ.

—வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

பாட்டின் சுவைஅறிந்தோர் பாராட்டும் நற்கவிதை
நாட்டில் பரப்பிவரும் நாதனவர்—வீட்டினிலே
இல்லாத நேரமதில் ஏனென்னைக் கொல்லுகின்ருய்?
பொல்லாத வல்லிரவே போ.

—புதுவை அவ்வைவாணன்.

மாதென்னை வாட்டி மயக்கமுறச் செய்கின்ற
காதலினல் நெஞ்சம் கலங்குகின்றேன்—ஆதலினல்
கொல்லாமல் கொன்று கொடுமை மிகச்செய்யும்
பொல்லாத வல்லிரவே போ.

—கோ. சோ. ஜெயபால் தெற்குப்பொய்கைநல்லூர்

நள்ளிரவே நீவந்தால் நான்விரும்பும் பொற்கொடியாள்
உள்ளுணர்வில் ஒன்றி உருக்கிடுவாள்—மெல்லிதழின்
கள்ளுணர்வு கொள்வேன்நான் கண்ணயரேன், ஆதலினால்
பொல்லாத வல்லிரவே போ.

—வம்பதாசன் சென்னை-17.

"பொல்லாத வல்லிரவே போ"வென்று பாமுடித்துச்
சொல்லாட வந்தேன்நான் தொல்லுலகில்—சொல்லக்கேள்!
நல்லிரவே யல்லாமல் நானெதையும் கண்டதில்லை
பொல்லாத வல்லிரவே போ

—தஞ்சை எழிலன் பல்லாவரம்.

பொருள்தேட என்அத்தான் போய்விட்டார்; நானோ
இருள்கண்டு வாடி இருக்க—அருள்ஒளி
இல்லாத வெண்ணிலவால் என்னுணர்ச்சி தூண்டிவரும்
பொல்லாத வல்லிரவே போ.

—உதயை, மு. வீரையன், உதயமார்த்தாண்டபுரம்,
தஞ்சை மாவட்டம்.

மங்கை மனமழிந்தேன்! மாக்காதல் வாய்ப்பட்டேன்!
கங்கைப் புனலாகும் கண்ணீர்தான்!—இங்கவர்தான்
இல்லாத வேளையில் இன்னும் வளர்கின்றாய்!
பொல்லாத வல்லிரவே போ'

—சா. கா. சாகுல் அமீது, சித்தையன் கோட்டை.

இல்லாத ஏழை இரந்துண்டு வாழ்தற்கும்
நில்லாத நல்லுழைஞ ரூற்றற்கும்—தொல்லையே;
செல்லாது நீண்டிங் கிருப்பதூஉம் நன்முறையோ?
பொல்லாத வல்லிரவே போ.

—வ. பக்கிரிசாமி, பிரதாபராமபுரம்,

பூத்த மலர்வாடும் பூங்காற்றுச் சூடேற்றும்
காத்துக் கிடந்திரு கண்சோரும் வார்த்தைகள்
எல்லாம் அவர்நினைவை என்னுள் வரவழைக்கும்
பொல்லாத வல்லிரவே போ.

—மதிஒளி, சென்னை-5.

வெண்பாப் போட்டி

ஈற்றடி—7

வாக்கெடுப்பில் வென்றவர்க்கு வாழ்த்து

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் ச. சொக்கலிங்கம்,
பாரதம் அச்சகம், 14, உஸ்மான் ரோடு,
தி' நகர், சென்னை-17. தமிழ் நாடு

பதிவு எண் எம். 7513 தமிழ் மார்ச்சு 1962

புதிய போன் நெ. 2037